
148



# திருக்கேதீச்சர மகிமை

**கேதீச்சரநாதர் மேன்மை மலர**
**சைவநீதி தழைத்து ஓங்குக !**

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANA[illegible]AH
RETIRED [illegible]
AD[illegible]ROAD
KOKUVIL WEST

எனது தாயின்
நினைவாக

தமிழ்த் தாய்
பிள்ளைகளுக்காக

## சிவபுராணம் பதவுரையுடன்

அருணாசலம்
ஸ்கந்தராஜ்

உ

சிவசிவ

# இலங்கை
# திருக்கேதீச்சரக் கோயிலின் மகிமை

*****

"தொண்டர் நாள் தொறுந் துதிசெய அருள் செய்
கேதீச்சரமது தானே."

திரட்டித் தொகுத்த கருத்தன், பதிப்பாண்மை, வெளியீடு

அ. ஸ்கந்தராஜ்

2018

அம்மாவின் வாழ்க்கையினை நினைவில் கொள்வதற்கு



## திருமதி. மங்கையற்கரசி அருணாசலம்

*13-12-1922* *31-03-2016*

***என்னை அன்புடன் வளர்த்து என்னுடன் இறுதி வரை வாழ்ந்த, எனது அன்பான, இனிமையான, கருணைமிக்க தாயின் நினைவாக, அம்மாவை நன்றியுடன் நினைவுகூர்ந்து, நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கு அமைய, அம்மா 1960-ஆம் ஆண்டுகளிலிருந்து மார்கழி மாதத்தில் கேதீச்சரநாதரைத் தரிசிக்க எம்மை கூட்டிச் செல்வதை நினைவுகூர்ந்து, அம்மாவின் பாதக்கமலங்களில் இந்நூலினை சமர்ப்பிக்கின்றேன்.***

- தாயிற் சிறந்த கோயில் இல்லை
- தாயைப் போற்றிட வாழ்க்கை மேம்படும்
- நேர்மையானவன் தாயை நேசிப்பான், பிறவிக்கடன் தீர்ப்பான்

**அருணாசலம் ஸ்கந்தராஜ் *(மகன்)***

முதலாம் பதிப்பு *– 2018 –* *2000* பிரதிகள்

திரட்டித் தொகுத்த கருத்தன் *Compiled By*

பதிப்பாண்மை *Author*

வெளியீடு *:* ***Publisher* :**

அ. ஸ்கந்தராஜ்
*15* *f*பாரிட் இடம்
கொழும்பு *- 4*
இலங்கை.

**A.Skandaraj**
**15, Fareed Place**
**Colombo 4**
**Sri Lanka.**

**072-2220488 ;** skanda@sltnet.lk

ISBN 978-955-38573-1-6

*Copyright ©2018* அ. ஸ்கந்தராஜ்
**©2018 A.Skandaraj All Rights Reserved**

சிவசிவ

# சைவ நீதி

*(சிவ புண்ணியத் தெளிவு)*

மாதவர் மடங்க ளாதி வரதன் மந்திரங்க ளாதி
நாதமா மிலிங்க மாதி நளினபுட் கரிணி யாதி
சேதமுற் றிடின் முன்போலச் செய்கின் றோர்க் குறும்பலந்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மி லாயிரங் குணித மோங்கும்.

*(இ-ள்)* பெரிய தவத்தோர் இருக்கின்ற மடங்கள் முதலானவைகளும், கடவுளுடைய கோயில் முதலானவைகளும், நாதமாகிய இலிங்கம் முதலானவைகளும், தாமரையுடைய குளம் முதலானவைகளும் பழுதடைந்தால், அவைகளை முன்பொலச் செய்கின்றவர்களுக்கு உண்டாகும் புண்ணியமானது, சொல்லப்பட்ட முன் அவைகளைச் செய்தவர்களுக்கு உண்டானதிலும் ஆயிரம் மடங்கு அதிகமாம். *(எ-ம்)*

சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார் சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள் எம்முயிர்த் துணையே.

## உள்ளடக்கம்


பக்கம்

அறிமுக உரை — *IX*

தோற்றுவாய் — *XIII*

### பாகம் அ – ஆதியில் திருக்கேதீச்சரம்

*1.* புராதன மாதோட்டத் திருக்கேதீச்சரம்

*1.1* ஈழநாடு — *1*
*1.2* மாதோட்டத் திருக்கேதீச்சரம் — *2*
*1.3* பாலாவி நதி — *6*
*1.4* மாதோட்டத் துறைமுகம் — *6*
*1.5* காந்தக்கோட்டை — *8*
*1.6* கடல் வாணிபம் — *10*
*1.7* மண்மூடிய மாதோட்டக் கேதீச்சரம் — *10*
*1.8* புவியியல் சான்றுகள் — *11*

*2.* புராண வரலாறுகள்

*2.1* திருக்கேதீச்சரத் தோற்றம் — *15*
*2.2* வழிபட்டோர் — *17*

*3.* கல்வெட்டுக்கள் — *28*

*4.* தலப்பெருமை

*4.1* திருப்பதிகப் பெருமை — *30*
*4.2* தொண்டர் பெருமை — *33*

### பாகம் ஆ – 20-ஆம் நூற்றாண்டில் திருக்கேதீச்சரம்

*5.* மண்மூடிய திருத்தலம் வெளிப்படல்

*5.1* அஞ்ஞான ஆதிக்கம் — *37*
*5.2* நாவலர் பெருமான் நற்றொண்டு — *37*
*5.3* நாவலர் பெருமான் நினைவு வெற்றிபெறல் — *38*
*5.4* திருக்கேதீச்சரம் புனருத்தாரண வேலை — *39*

*6.* 20-ஆம் நூற்றாண்டு திருக்கேதீச்சரம்

*6.1* ஊரின் பெருமை — *42*
*6.2* திருக்கோயிலைச் சுற்றியுள்ள சூழல் — *42*
*6.3* திருவாசக மடம் — *43*
*6.4* சிவானந்த குருகுலம் — *44*

7. 20-ஆம் நூற்றாண்டு திருப்பணிகள்
7.1 சைவமக்கள் தொண்டு 46
7.2 திருப்பணிச் சபையார் தொண்டு 46

8. 21-ஆம் நூற்றாண்டில் திருக்கேதீச்சரம் 52

பாகம் இ – திருக்கேதீச்சர சிவாலய வழிபாடு

9. சிவாலய வழிபாடு
9.1 திருக்கோயில் 57
9.2 அருவுருவத் திருமேனி 57
9.3 சிவலிங்கமூர்த்தியின் வகை 59
9.4 உருவத் திருமேனி 59
9.5 சிவசாந்நித்தியம் உள்ள இடம் 60
9.6 பிரதட்சிணம் செய்யும் முறை 61
9.7 சோமசூத்திரப் பிரதட்சிணம் செய்யும் முறை 62
9.8 நமஸ்காரம் செய்யும் முறை 63
9.9 சிவவழிபாட்டிற்கு முக்கியமானவை 64
9.10 சிவாலயப் பெருமை 64

10. திருக்கேதீச்சர சிவாலயம்
10.1 திருக்கோயில் அமைப்பு 65
10.2 மூர்த்தியின் திருநாமம் 66
10.3 தீர்த்த விசேடம் 68
10.4 பூசையும் திருவிழாவும் 70

11 சிவபுராணமும் பதவுரையும்
11.1 சிவபுராணம் 73
11.2 பதவுரை 80
11.3 கருத்தன் குறிப்பு 91

12 தேவாரத் திருப்பாடல்கள் முதலியன
1 சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரத் திருப்பதிகம் 95
2 சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரத் திருப்பதிகம் 98
3 திருக்கேதீச்சரத் தேவாரம் – பெரியபுராணம் 100
4 திருக்கேதீச்சரத் தோத்திரம் 101
5 திருக்கேதீச்சரர் திருப்பள்ளியெழுச்சி 102
6 திருக்கேதீச்சரத்தலத் திருப்பதிகம் 102
7 திருக்கேதீசுவரர் அஷ்டகம் 103
8 திருக்கேதீசுவரர் சுசகம் 104
9 பொது துதிப்பாடல்கள் 106

உ

சிவசிவ

# அறிமுக உரை

*அன்புடையீர்!*

திவ்ய சிவக்ஷேத்திரங்கள் பூசிக்கும் பக்குவர்கள் அருகிய காலத்தில் உண்மை மறைவதும், ஒவ்வோர் காலத்தில் சிலகாரணம் பற்றி ஒரு சிறு பகுதியோ பெரும் பகுதியோ வெளிப்படுவதும் இயற்கை என்று பெரியோர் கருதவர். இக்கருத்து பெரியோர் எம்மவர் உணரும்படி எழுதிப் பதித்த ஓர் அரிய கருத்தாகும். இக்கருத்தையும் காலத்தின் தேவையையும் உணர்ந்து இந்நூல் உருப்பெற்றுள்ளது.

இந்நூல் உருப்பெற்றமைக்கு இரண்டு காரணங்கள். ஒன்று சிறு பிராயத்திலிருந்து தாய் தந்தையர் எம்மை மார்கழி மாதத்தில் கூட்டிச்சென்ற திருக்கோயில் திருக்கேதீச்சரமாகும். மற்றயது எனது தாயார் எனக்குப் பண்ணுடன் சிவபுராணம் படிக்கக் கற்றுத் தந்தது. "திருவாசகம் என்னும் **தேன்**" என்று அம்மா பாடுவது கணீர் என்று என் உள்ளத்தில் இன்றும் ஒலிக்கிறது. 6-வயதிலிருந்து கேதீச்சரநாதனை வழிபட்டதன் பேறினால் இந்நூல் உருப்பெற்றும், **தேன்** என்ற வார்த்தையை இழுத்து நாவில் இன்சுவை அறியும் வண்ணம் பண்ணுடன் பாடும்படி கற்றுத் தந்ததன் காரணத்தால் சிவபுராணம் பதவுரை இந்நூலில் இடம்பெற்றும் உள்ளது.

இந்நூல் "கருதநின்ற கேதீச்சரம்" குறித்து உள் மனத்தில் இருத்திப் பேணிப் போற்றும் வண்ணம் எழுதப்பட்ட ஒரு நூலாகும்.

சிறப்புப் பெற்றுள்ள மாதோட்டத் திருக்கேதீச்சரத் தலத் திருக்கோயில் குறித்து விளக்கமாகவும், தெளிவாகவும் அறிந்துணரும் பொருட்டு, தமிழகப் புலவர்குழு உறுப்பினர்களில் ஒருவரும், திருச்சி மௌனகுரு வழிபாட்டுக் கழகத் தலைமைச் செயலாளரும், திருமுறைக்கலைஞர் வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்களால் தொகுக்கப்பட்ட, "**இலங்கைத் திருக்கேதீச்சரக் கோயில் வரலாறு**" மற்றும் கௌரவ கந்தையா வைத்தியநாதன் அவர்கள் வெளியிட்ட "**திருக்கேதீச்சர ஆதாரத்தாள்கள்**" ஆகிய நூல்களை மையமாகவும் மூலமாகவும் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

இந்நூல் மூன்று பாகங்களைக் கொண்டது. முதலாவது பாகம் ஆதியில் திருக்கேதீச்சரம் எனும் தலைப்பின் கீழ் தலத் தோற்றம் முதல் புராதன மாதோட்ட கேதீச்சரம் வரை அதன் வரலாறு, கல்வெட்டுகள் மற்றும் தலப் பெருமை குறித்து விளக்குகின்றது.

இரண்டாவது பாகம் 20-ஆம் நூற்றாண்டில் மண் மூடிய கருதநின்ற மாதோட்டத் திருக்கேதீச்சரம் வெளிப்படல் குறித்தும் 20-ஆம் நூற்றாண்டு திருக்கேதீச்சரம் மற்றும் திருப்பணிகள் குறித்தும், இன்று நம் முன்னே திருக்காட்சி தரும் 21-ஆம் நூற்றாண்டு திருக்கேதீச்சரம் குறித்தும் விளக்குவதாக அமைந்துள்ளது.

மூன்றாவது பாகம் திருக்கேதீச்சர சிவாலய வழிபாடு எனும் தலைப்பின் கீழ் பொதுவாக சிவாலய அமைப்பு மற்றும் சிவாலய தரிசனம் குறித்து விளக்குவதுடன் திருக்கேதீச்சர சிவாலய அமைப்பும் தரிசனம் குறித்தும் விளக்குகின்றது.

**இப்பாகத்தில் சிவபுராணமும் பதவுரையும் அடியார் உணர்வுடன் பொருள் விளங்கிப் பாடும் வண்ணம், "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்" என்ற செய்யுள் வரிக்கமைய சிவபுராணத்தின் இனிமையையும், அதன் மெய் விளக்கத்தையும், ஸூக்ஷ்ம உட் பொருளையும் உணரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.** முத்திப் பாதையின் விளக்கத்தை எளிதில் புரியும் படி மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணம் அமைகிறது. இம்முத்திப் பாதையை எளிதில் அறிந்து கடைப்பிடிக்கும் வண்ணம் இறைதுதி, திருப்பாயிரம், பிறப்பின் ஏக்கம், இறை அனுக்கிரகம், மெய்யறிவு, இறை அருள், இறை மிகுபுகழ், இறை அடைக்கலம் என முறைப்படி வகுத்து பதவுரையினை வடிவமைத்துள்ளேன். **சிவபுராணமும் பதவுரையும் ஒவ்வொரு நாளும் அல்லது கிழமைக்கு ஒரு முறையாவது பயிலப்பட வேண்டிய அருட்குறிப்பாகும்.**

எனது தாய் கற்றுத் தந்த நூல்களான பத்மநாபா ஐயர் பதிப்பித்த சிவபுராணம் பதவுரையும் மற்றும் போப் அடிகளார் ஆங்கிலத்தில் எழுதிய திருவாசகமும், இம்முயற்சிக்கு உறுதுணை நின்ற நூல்களாகும். இத்துடன் திருக்கேதீச்சரப் பதிகங்கள், அஷ்டகம், சுசகம் மற்றும் வேறு பல தேவாரங்களும் துதிப் பாடல்களும் இம்மூன்றாம் பாகத்தில் அடங்குகின்றன.

உடல், மனம், புத்தி எனும் மூன்று உயிர் வாழ்வதற்கான கருவிகள்

வாழ்க்கை உபகரணங்களுடன் நாம் பிறக்கின்றோம். திருக்கோயில் வழிபாடு மற்றும் திருப்பணி இம்மூன்று கருவிகளையும் உன்னத நிலையில் பேணிப் பராமரிக்கும் முறைமையாக அக்காலத்தில் இருந்தன. இதில் மனதைப் பேணிப் பராமரிக்கும் ஒரு முறைமையாக பண்ணுடன் தேவாரத் திருப்பதிகங்கள் பாடுவது அமைந்திருந்தது. இப்பாடல்களில் வரும் சொற் பதங்களும் சொற் தொடர்களும் அவற்றின் அமைப்பும் மனதைச் சாந்தமாக்கி ஒரு நிலைப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளன. பொருள் விளங்கிப் பாடுவது, புத்தியை கூர்மையாக்கி அறிவை வளர்க்கவும் மெய் அறிவை உணர்விக்கும் சக்தியையும் ஆற்றலையும் வளர்க்கவும், உதவுகிறது. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம் மனம் புத்தி என்பவற்றிற்கு அருமருந்தாகும்.

சரியான அதற்கென உரிய முறையில் பிராணாயாமம் மற்றும் தியானம் ஆகியவற்றை பயிற்சி செய்தல் மனதைப் பேணிப் பராமரிக்கும் முறைமைகளாகும். பிரத்தியாகாரம் எனும் வெளி நாட்டங்களில் இருந்து இந்திரியங்களை திருப்புதல் தியானம் எனும் மனதைப் பேணிப் பராமரிக்கும் முறைமைக்கு அடிப்படையானதாகும். இவற்றை பஜ கோவிந்தம் கவனத்துடன் மிகுந்த கவனத்துடன் செய்தல் வேண்டும் எனக் கூறுகிறது.

ஆக, தேவாரத் திருப்பதிகங்களைப் பாடும் முறைமை மிக எளிதான மிகவும் உகந்த பலாபலன்களைத் தரும் ஒரு முறைமையாகும். இதை காலம் தவறாது செய்யும் போது, ஓய்வாக இருக்கும் பொழுதும் மிதமான வேலைகலைச் செய்யும் பொழுதும் நடக்கும் பொழுதும், எம்மை அறியாமல் எம்முள்ளே தன்னியக்கமாக இப்பதிகங்கள் பாடப்படும் நிலையை அடையலாம். மல பரிபாகம் எனும் நிலையை அடைவதற்கு இந்த மன பரிபாலன நிலை அவசியமானது.

எனது முதலாவது நூல் "**நீங்கள் தான் விமானி; உங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்துங்கள்**" *("You are the Pilot; Pilot your Life")* எனது தாயின் முதலாம் ஆண்டு நினைவு குறித்து வெளியிடப்பட்டது. இரண்டாவது வெளியீடான "**பகவத் கீதா**" எனது தாயின் *18*-மாத நினைவு குறித்து வெளியிடப்பட்டது *(112-ஆம் பக்கம் பார்க்க)*. இது நான் எழுதி வெளியிடும் மூன்றாவது நூலாகும்.

கௌரவ கந்தையா வைத்தியநாதன் அவர்கள் *1957*-ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட **திருக்கேதீச்சர ஆதாரத்தாள்கள்** எனும் நூலின் அறிமுக உரையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் இரண்டு பெரும் புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும் என்றும், தனது பணியைத் தொடர்ந்து வேறு யாராவது இக்கைங்கரியத்தைச் செய்ய இறையை வேண்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். *1960*-ஆம் ஆண்டில் வெளியிட்ட *2*-ஆவது பதிப்பில் அறிமுக உரையில் தமது வேண்டுகோளுக்கு இரங்கி கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதன் திருவருளால் தமிழில் புத்தகம் ஒன்று வெளியிடப்படுவதற்கான பணி நடைபெறுவதாக குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய *1974*-ஆம் ஆண்டு **இலங்கைத் திருக்கேதீச்சரக் கோயில் வரலாறு** எனும் நூல் வெளியிடப்பட்டது.

கௌரவ கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தனது *2*-ஆவது பதிப்பில் தனது சிறு பணியைத் தொடர்ந்து ஒரு பெரும் பதிப்பு வலுவுள்ளவர்கள் தொடர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார். இக்கோரிக்கைக்குத் தலை வணங்கி ஆற்றும் சிறு முயற்சியான சிறு பணி இவ்வெளியீடாகும்.

தமிழ் நாட்டிலிருந்து ஆதிக்கத்துக்கான படை எடுப்புகளையும், ஆதிக்கம் மற்றும் மதமாற்றம் மூலம் மதத்தைப் பரப்பும் மேற்கத்தேய ஆக்கிரமிப்புகளையும் அதன் பின் உள்நாட்டுப் போரையும் சந்தித்த திருக்கேதீச்சரம் எப்படி மீண்டும் மீண்டும் புனரமைக்கப்பட்டு அழியா திருக்கோயிலாக திகழ்கிறதோ அதேபோல் சைவ சமயமும் மீண்டும் அதன் முன்னைய பெருமையையும் புகழையும் நிலைநாட்ட நாம் எல்லோரும் எம் பங்கினை இச் சிவபூமியில் செய்தல் இன்றைய கால கட்டத்தில் மிக மிக அவசியமானதாகும். **இம்மன்னார் புனித பூமியில் சைவசமய இறையியல் கல்வியகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் மக்களிடம் சமர்ப்பிக்கின்றேன். பிள்ளைகளை கேதீச்சரம் கூட்டிச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.**

அன்பர்கள் யாவரும் இந்நூலைப் பெற்று ஸ்ரீகௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதர் திருவருளைப் பெற்றுய்ய வேண்டி, அம்மாவின் இரண்டாவது ஆண்டு நினைவாக *(31.3.2018)* இந்நூலினை திருக்கேதீச்சரநாதர் திருப்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிடுகின்றேன்.

***அ. ஸ்கந்தராஜ் - மகாசிவராத்திரி நாள், 13 மாசி 2018***

உ

சிவசிவ

## தோற்றுவாய்

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின், பாடிப் பணிமின், பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துள் கோயிலாக் கொள்வனே".

- திருமந்திரம்

'சிவபூமி' எனத் திருமூலரால் புகழப்பெற்றதும், விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தில் இடை கலைநாடி ஓடும் தானமாக விளங்கப் பெறுவதுமான இலங்கை வடமாகாணத்திலே மன்னார்ப் பகுதியில் சூரபன்மன், இராவணன் ஆதியோர் காலத்திற்கு முன்னரேயே (இந்திய ஆராய்ச்சியாளர்களின் படி இராவணனின் காலம் கி.மு. 5112) மிகப்பழம் பெருமையும் மகிமையும் உடைய சிவத்தலம் மாதோட்டத் திருக்கேதீச்சரம் என்பதாம். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று விசேடத் தன்மைகளுடன் தேவாரத் திருப்பதிகங்களும் பெற்றுத் திகழும் திவ்விய சிவத்தலமுமாகும்.

மேருகைலாசம், இமாசலகைலாசம், மந்தரகைலாசம், உத்தரமகாகைலாசம் எனக் கைலாசங்கள் பல. இவற்றுள் மேருகைலாசத்தின் மூன்று சிகரங்கள் ஒரு கற்பத்தில் ஒடித்தெறியப்பட்டுத் தென் சமுத்திரத்தில் வீழ்த்தப்பட்டன. அவற்றுள் ஒன்று திரிகூட சிகரம். இது இந்திரனுடைய ஆஞ்ஞைப்படி விசுவகர்மாவினால் இலங்கையாக இயற்றப்பட்டது.

ஏனைய இரண்டினுள் ஒன்று திருக்கேதீச்சரச் சிகரம். இது விசுவகர்மாவின் புத்திரனாகிய மகாதுவட்டாவினால் மகா சிவக்ஷேத்திரமாகப் புனையப் பெற்றது; மாதோட்டத்தோடு கூடியது.

மூன்றாவது சிகரம் கந்தமாதனம். இது இராமேச்சரத்துக்கு வடக்கே அதற்கு அண்மையில் உள்ளது. சேது புராணத்தில் இக்கந்தமாதனம் விதந்து கூறப்பட்டது. கந்தபுராணத்திலும் இக்கந்தமாதனம் சொல்லப்பட்டது.

காலப்போக்கில், மாதோட்டத்தோடு கூடியதும் அதன்பால் அமைந்ததுமான திருக்கேதீச்சரம் திரிகூட சிகரமான இலங்கையோடும், கந்தமாதனம் இராமேச்சரத்தோடும் சேர்ந்துவிட்டன. இஃது இவ்வாறாக;

மற்றொரு கற்பத்தில், இமாசலகைலாசத்தின் மூன்று சிகரங்கள், வாயுதேவனால் ஒடித்தெறியப்பட்டுத் தக்ஷிண பூமியில் வீழ்த்தப்பட்டன. மேரு சிகரங்கள் சமுத்திரப்பரப்பில் வீழ, இமாசல சிகரங்கள் நிலப்பரப்பில் வீழ்ந்தன.

நிலப்பரப்பில் வீழ்ந்த இமாசல சிகரங்கள் மூன்றினுள் ஒன்றன்பெயர் திரிகூடம். மற்றவை திருக்காளத்தியும், திரிசிராப்பள்ளியுமாம்.

திரிகூட சிகரம், திரிகூடமாகிய இலங்கையில் வீழ்த்தப்பட்டது. அதுவே திருக்கோணமலை. திரிகூடம் திரிகூடத்தில் வீழ்ந்தது பொருத்தம். திரிகூடம் என்ற பெயர் இலங்கைக்கும் திருக்கோணமலைக்கும் பொதுவானது.

இலங்கை எந்தக்கற்பத்தில் அமைந்ததோ அதே காலத்தில் திருக்கேதீச்சரமும் அமைந்தது. இலங்கை வேறு; திருக்கேதீச்சரம் வேறு; திருக்கோணமலை மற்றொரு கற்பத்தில் இலங்கையில் அமைந்தது.

இங்ஙனமாதல் புராணேதிகாச சம்மதம். புராணேதிகாசங்கள் வேதத்தின் உபாங்கங்கள்; வேதப் பொருளைத் தெளிவு படுத்துபவைகள். அவற்றின் தத்துவக் கருத்துக்கள் சூத பௌராணிக மரபில் அறிய வேண்டியவைகள்.

"கருதநின்ற கேதீச்சர"த்துக்கும், "கருதுகின்றவூர்" ஆகிய மாதோட்டத்துக்கும் புராணேதிகாசங்களே அதிப்பிரபலப் பிரமாணங்கள். மனித ஊகங்களையும் வைத்துக்கொண்டு, "கருதுகின்ற கேதீச்சரம்" பற்றிக் கருதுவோமாக.

*(திருவாசகமடத்து மெய்த்தொண்டர் சி. சரவணமுத்துச்சுவாமி அவர்கள் மற்றும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா ஆகியோரால் 1974-இல் எழுதப்பட்ட உரைகளின் தொகுப்பு.)*

# பாகம் அ – ஆதியில் திருக்கேதீச்சரம்

உ

சிவசிவ

### திருக்கேதீச்சரர் துதி

*நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்*
*மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்*
*பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்*
*செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.*

**(தேவாரம் - சுந்தரர்)**

## பாகம் அ - ஆதியில் திருக்கேதீச்சரம்

*இப்பாகம் நாம் அறியா ஆதி திருத்தலத்தை விளக்குவதாக அமைகிறது.*

## *1.* புராதன மாதோட்டத் திருக்கேதீச்சரம்

*திருக்கே தீச்சரர் திருப்பதம் போற்றி*
*திருக்கே தீச்சர வரலா றிசைப்பாம்.*

### *1.1* ஈழநாடு

*தமிழ்நாட்டின் தென்கடலின்கண் அண்மையிலுள்ள ஒரு பெருந்தீவு ஈழநாடு (இலங்கை). அது முன்னர் இருநிதிக்கிழமை பூண்ட அங்கணர்க்கு இனிய தோழன் (குபேரன்) அரசு செய்தளித்த - குறைவில் சீர் ஈழநாடு என்று புகழப்பெற்றது. சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே மூன்று பெருநிலப் பிரிவாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. இலங்கையின் வட பிரிவு இராசரட்டம் (உத்தரரட்டை) என்றும், மத்தியபிரிவு மாயாரட்டம் (மத்தியரட்டை) என்றும், தென்பிரிவு உருகுணரட்டம் (தட்சிணரட்டை) என்றும் வழங்கப்பட்டது. (ரட்டம், ரட்டை - பெருநிலப்பகுதி.)*

வடபெரும் நிலப்பகுதியின் கிழக்குப் பகுதியில் மகாவலிகங்கை கடலோடு சங்கமிக்கிறது. அங்கு தேவாரப்பதிகம் பெற்ற திருக்கோணேச்சரம் (திருகோணமலை) உள்ளது. மேற்குப் பிரிவிலே **பாலாவிநதி** அல்லது பெருங்குளமும் திருக்கேதீச்சரமும் அமைந்துள்ளன. வடக்கே யாழ்ப்பாணம் உண்டு. மத்திய பெருநிலப் பகுதியில் கொழும்பு, கண்டி முதலியன உண்டு. தென்பெருநிலப் பகுதியில் மாணிக்ககங்கையும், கதிர்காமமும் விளங்குகின்றன. (கதிர், கதிரை - ஒருவகை மரம், காமம் - கிராமம்.)

### *1.2* மாதோட்டத் திருக்கேதீச்சரம்

முந்தைய முப்பெரும் பெருநிலப் பகுதிகளான இராசரட்டம், மாயாரட்டம், உருகுணைரட்டம் மூன்றும் இக்காலத்தில் ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் வடமாகாணத்தின் வட கடல் அருகே மன்னார் என்னும் சிறுதீவு இருக்கிறது. இது பாலங்களால் வடமாகாணப் பெருநிலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மன்னார்ச் சிறுதீவு இரு பகுதிகளையுடையது. ஒன்று தலைமன்னார்ப்பகுதி. மற்றது கோட்டை மன்னார்ப்பகுதி. அக்கோட்டை மன்னாரிலிருந்து வட மாகாணப் பெருநிலத்துடன் இணைந்துள்ள பாலத்தின் மார்க்கமாகத் தென்திசையாக **திருக்கேதீச்சரம்** என்ற தற்போதைய ஊர் உள்ளது. ஆதியில் இப்பகுதி **மாதோட்டநகர் (மாந்தை நகர்)** என்று வழங்கியது. மாதோட்டம் என்பது ஊரினது பெயர். திருக்கேதீச்சரம் என்பது மாதோட்ட ஊரின்கண் விளங்கிய சிவாலயத்தின் பெயர். தற்போது மாதோட்டம் என்ற பெயர் அருகிச் சிவாலயத்தின் பெயராகிய திருக்கேதீச்சரமே மாதோட்டமாகிய ஊருக்கும் பெருவழக்காகப் பெயர் வழங்கி வருகின்றது. எனினும் மாந்தைச் சந்தியும், மாதோட்டம் புகையிரத நிலையமும் பழைய ஊர்ப் பெயரினால் விளங்கிற்று.

ஆதியில் கேதுவினால் பூசிக்கப்பெற்ற திருக்கேதீச்சர மூர்த்தியை, **மகாதுவட்டா** என்னும் தேவதச்சன் பூசித்துத் திருப்பணி புரிந்ததனால் அத்திருக்கேதீச்சரம் **மகாதுவட்டாபுரம்** எனப் பெயர் பெற்றது என்று கந்தபுராணம், தட்சிண கயிலாய மான்மியம் கூறும். இம் மகாதுவட்டாபுரமே பின்னர் **மாதோட்டம்** எனப் பெயர் பெற்று வழங்கலாயிற்று என்பர். முற்காலந்தொட்டே இம்மாதோட்டம், கடற்கரைத் துறைமுகமாக இருந்து வந்ததாகும். இராமர், அகத்தியர், அருச்சுனன் முதலியோர் இம்மாதோட்டத் துறைமுகத்தில் இறங்கி இலங்கை சென்றிருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்

கூறுகின்றனர். நாக வழிபாட்டு முறையை ஒழுகிய ஈழநாட்டின் ஆதிக்குடியினரான நாகர் பின் சிவவழிபாடு புரிந்து இத்தலத்தைப் பூசித்ததால் இத்தல மூர்த்திக்கு **நாகநாதர்** என்னும் திருநாமமும் வழங்கிற்று.

கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலே கலிங்கநாட்டு அரசகுமாரனான விஜயன் என்பவன் தன் நண்பர்களுடன் இம்மாதோட்டத் துறைமுகத்தில் வந்து இறங்கி இலங்கையை அடைந்தானென்றும், அப்போது, இத் துறைமுகம் **"மகாதித்தா"** எனப் பெயர் வழங்கிய தென்றும் மகாவம்சம் என்ற நூல் கூறுகிறது. பாளி மொழியில் "தித்தா" என்பது இறங்குமிடம் அல்லது துறைமுகம் என்ற பொருளாம். மகாதித்தா என்பது பெரியதுறைமுகம் அல்லது பெருந்துறை என்ற பொருளில் வந்தது என்பர். தித்தா என்பது **தித்தம்** என்றும் ஆயிற்று என்பர். ஆகவே மாதோட்டநகர், கப்பல் துறைமுகமாக – பெரிய கடல் வாணிபத் தளமாகத் திகழ்ந்தது என்பது வெளிப்படை.

மாதோட்டத் துறைமுகத்தில் கடல்வாணிபம் **மாசந்தை** போல் முதன்மை வர்த்தக கேந்திர நிலையமாக விளங்கிற்று. (மா- பெரிய, சந்தை- பொருள்களை விற்றலும் வாங்கலுமான பரிவர்த்தனை நிகழுமிடம்.) பாரிய அளவில் எல்லாப் பொருட்களையும் சேவைகளையும் நிபுணத்துவத்துடன் பரிவர்த்தனை செய்யக்கூடிய சந்தையாக இத்துறைமுகம் விளங்கிற்று. ஆதன் தந்தை என்பது ஆந்தை என்று மரூஉப்பெயர் ஆனதுபோல் மாசந்தை என்பது மாந்தை என்று மருவிநின்றது. ஆகவே, மாதோட்டநகர் **மாந்தைநகர்** எனப் பெயர் வழங்கியது.

"நன்னகர் **மாந்தை** முற்றத்து ஒன்னார்
பணிதிறை கொணர்ந்த பாடுயர் நன்னகர்"

என்பது **அகநானூறு.**

"புன்னாகச் சோலை புனற்றெங்குசூழ் **மாந்தை**"

என்பது **முத்தொள்ளாயிரம்.**

சிங்கள மொழியில், மாந்தைநகர் **மாந்தொவுட்டு** என்றும், மாந்தொட்டு என்றும் வழங்கியது. சிங்கள மொழியில் மாதோட்டம் என்பது **"மான் தொட்டா", மாதொட்டா, மாதோட்டை** எனவும் வழங்கியது. "தொட்ட" என்பது **துறைமுகம்** என்பதைக் குறிக்கும் சொல்லாம். பழைய சிங்களக் கல்வெட்டுகள் எல்லாம் மாதோட்டத்தை "மகாவுத்து", "மகாவொற்றி" என்றே கூறுகின்றன. பிற்காலச் சிங்கள இலக்கியங்கள், மாதோட்டத்தை

"மாவத்து தோட்ட" என்று குறிப்பிடுகின்றன. பெருந்துறை என்பது திரு என்ற தெய்வ அடைமொழி பெற்று, மாதோட்டத் திருக்கேதீச்சர ஆலயம் **திருப்பெருந்துறை**[1] எனவும், திருக்கேதீச்சர **திருப்பெருந்துறையீசன்** எனவும் பெயர் வழங்கியதாகத் தெரிகிறது.

பௌத்த இலக்கியங்களை நோக்குமிடத்து, கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்தே மாதோட்டம், **மகாதீர்த்தம்** என்ற ஒரு பெயரால் அழைக்கப் பெற்றதாகத் தெரிகிறது. மகாதீர்த்தம் என்பது மிகப்புனிதம் வாய்ந்த ஒரு புண்ணிய க்ஷேத்திரம் என்பது பொருளாம். கதிர்காமக் கல்வெட்டு ஒன்றில் பௌத்த மட ஆலய பரிபாலனத்திற்குரிய சில விதிகளைக் குறித்து விட்டு அவற்றை மீறி நடப்பவன் "மாதோட்டத்தில் மகாதீர்த்தத்தில் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவானாக" என்று கூறுவதால், மாதோட்டம் ஒரு புண்ணிய தலம் என்பதை அறியலாம்.

---

[1] ஆதியில் இம்மாதோட்டப் பெருந்துறை நகரில் இராவணன் மாமனாராகிய மயன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் மகள் மண்டோதரி. அம் மண்டோதரி தம் தந்தை போல் இளமையிலேயே திருக்கேதுநாதரிடம் பக்திபூண்டு ஒழுகியவள். தக்க வயதில் ஆன்மார்த்த சிவபூசை செய்து வரலானாள். இராவணனை மணந்து வாழும் வாழ்க்கையிலும் சிவபூசையினை மறவாது சிறப்பாக, அமைதியாகச் செய்து வரலானாள். ஒருநாள் சிவபூசை முடிவில் மண்டோதரி இறைவனை நேரில் தரிசிக்க விரும்பிப் பலவாறு வேண்டித் துதித்து வருந்தி அழைக்க, இறைவன் அம் மண்டோதரியின் வேண்டுகோளுக்கு இரங்கி அருள்புரிய அவள் முன் சிறு குழந்தை வடிவில் எழுந்தருளி வந்து கிடந்தார். அச்சமயம் அங்கு வந்த இராவணன், சிவபெருமானாகிய குழந்தையைக் கண்டு மகிழ்ந்து தூக்கி எடுத்து உச்சிமோந்து பெருமகிழ்ச்சியுற்றான். அப்போது அவன் மனைவி மண்டோதரி கணவன் கையிலுள்ள குழந்தையைப் பெற்றுப் பெருமகிழ்ச்சியுடன் போற்றினாள். இவ்வரலாறு உத்தரகோச மங்கைத் தலபுராணத்தில் கூறப்படுகிறது. இச்செய்தி திருவாசகம் குயிற்பத்தில், "ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேயபிரானை" என்று கூறப் பெற்றுள்ளது. இதனைச் சிலர் இது திருக்கேதீச்சரப் பெருமான் திரு விளையாடலைக் குறிக்கும் என்பர். இங்கு பெருந்துறை என்று பொதுவாகக் குறித்தலால் அது பாண்டிநாட்டிலுள்ள திருப்பெருந்துறை என்ற தலத்தை குறித்து நிற்கும்.

முதலாம் இராசராசசோழன் மகன் இராசேந்திரசோழன் கி.பி. 1028-ஆம் ஆண்டில் ஈழநாட்டைக் கைக்கொண்டபோது, இம்மாதோட்டநகர் **இராசராசபுரம்** எனவும், திருக்கேதீச்சர ஆலயம் **இராசராசேச்சுவரம்** எனவும் பெயர் பெறலாயிற்று. இராசேந்திரசோழன் ஆட்சியில் மாதோட்ட ராசராசபுரம் சுமார் பத்துச் சதுர மைல் பரப்புடையதாக இருந்தது என்று கல்வெட்டு ஒன்று கூறுகிறது. திருக்கேதீச்சர ஆலயத்தைச் சுற்றிப் பாதுகாப்பின் பொருட்டு நன்னீர், கடல்நீர் கொண்ட இரண்டு அகழிகள் அமைந்திருந்தன என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

மறுபுறத்தில் உள்ள தென் இந்தியாவின் இராமேச்சுவர திருக்கோயிலின் புகழுக்கு ஒப்பாக திருக்கேதீச்சரம் இருந்தது. ஆனால் இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கிய படைஎடுப்புகளின் திசையின் முகப்பில் திருக்கேதீச்சரம் இருந்ததன் காரணத்தால் பல சூழ்நிலைகளைச் சந்திக்க நேர்ந்தது. திருக்கேதீச்சரத்தின் நற்காலம் வன்னி மற்றும் யாழ் தீவக்குறை தமிழ் மக்களின் செல்வாக்குக்கமைய உயர்ந்தும் சரிந்தும் நின்றது. சைவசமய நாயனார் சுந்தரர் வாழ்ந்த காலத்துக்கு 2-நூற்றாண்டுகளின் பின்பும் பொலன்னறுவையிலிருந்து இலங்கையை சோழர்கள் ஆட்சி செய்த காலத்திலும் மாதோட்டமும் திருக்கேதீச்சரமும் திருக்கோயில் அந்தஸ்த்தில் உயர்ந்தும் ராஜ-ராஜேஸ்வரம் எனும் பெயர் பெற்றும் விளங்கிற்று. இதன் பின் அரசியல் மற்றும் படைஎடுப்புகளின் நிமித்தம் மாதோட்டமும் திருக்கோயிலும் சரிவினைக் கண்டன.

போர்த்துக்கீசியர் 1520-ஆம் ஆண்டு மாதோட்ட நகரத்துக்கு அடுத்துள்ள அரிப்பு பிரதேசத்துக்கு வந்து இறங்கியதிலிருந்து 1540-ஆம் ஆண்டு வரை இடைப்பட்ட காலத்திலும் திருக்கேதீச்சரம் முக்கிய சைவ வழிபாட்டுத் தலமாக இருந்தது. 1554-ஆம் ஆண்டு யாழ் தீவக்குறை சிற்றரசர் அழைக்கப்பட்டு திறை கட்டுகின்ற பிரதேசமாக மாற பணிக்கப்பட்டதை அடுத்து பல ஆயிரம் மாதோட்ட நகரக் குடியினர் கத்தோலிக்க சமயத்தை தழுவினர். இதன் பின்பும் 1617-ஆம் ஆண்டிற்கு முன்பும் திருக்கேதீச்சரமும் மாதோட்ட பிரதேசமும் போர்த்துக்கீசியர்களால் சூறையாடப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டது.

### *1.3 பாலாவி நதி*

*பாலாவி நதி கடலுடன் கலக்கும் முகப்பான வங்காலையும் திருக்கோயிலும் நேர் கோட்டில் 4-மைல் தொலைவில் அமைந்துள்ளன. இதிலிருந்து பாலாவி நதியின் அகலத்தையும் அக்காலத்தில் இப்பிரதேசத்தில் அதன் முக்கியத்துவத்தையும் அறிய முடிகிறது. ஆனால் இன்று பாலாவி நதி ஒரு குளமாக மாறியதற்கான காரணங்களைப் பார்ப்போம்.*

*இயற்கை அனர்த்தங்கள் ஒரு காரணியாக அமைந்திருந்தது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இலங்கையின் மேற்குக் கரையைத் தாக்கிய திடீர் கடல் கொந்தளிப்பு மற்றும் இலங்கையை அண்மித்த பிரதேசங்களில் இடம்பெற்ற கடல் கொந்தளிப்பு என்பனவற்றால் மாதோட்டத்தின் சில பகுதிகள் மண் மூடி அழிந்தது என்பர்.*

*இதைவிட செயற்கைக் காரணங்களும் இந்நிலைமைக்கு காரணமாய் இருந்தன. பாலாவி செழிப்பாக இருந்த காலங்களில் மாத்தளையிலிருந்து மல்வத்து ஓயா ஊடாகவும் வேறு இயற்கை அருவிகளிலிருந்தும் வரும் பாரிய நீர்வளம் பாலாவி முகப்பினூடாக கடலுடன் சங்கமமாயிற்று. மல்வத்து ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நீர்வளம் தென் திசையாக மதவாச்சி பிரதேசத்திற்கு அனுப்பபப்பட்டது. அத்துடன் கட்டுக்கரைக்குளம் ஊடாகச் சென்ற நீர்வளம் அருவி ஆறு மூலம் பல மைல்களுக்கப்பால் மன்னாரின் தென் திசையாகத் திருப்பி அனுப்பபப்பட்டது. பாலாவி நீர்வளம் குன்ற இந்த அபிவிருத்தித் திட்டம் ஒரு காரணியாக அமைந்தது. மழையற்ற காலங்களில் தூர்ந்து சேற்று நிலமாக துரிதமாக மாற்றமடைய மன்னார் கால்வாய் ஊடாக மன்னாருக்குச் செல்ல போக்குவரத்துக்காக அமைக்கப்பட்ட வாகன, புகையிரத இரண்டு மேடைப்பாதைகளும் காரணமாயின. இப்போக்குவரத்து இணைப்பின் காரணமாக தலைமன்னார் இந்தியாவிற்கு அண்மையான துறைமுகமாக மாறியது.*

### *1.4 மாதோட்டத் துறைமுகம்*

*திருச்செந்தூருக்கு அடுத்த குலசேகரம் பட்டினம் என்ற கடற்கரை ஊர், ஆதியில் தென்னாட்டுத் துறைமுகமாக ஏற்றுமதி இறக்குமதி நடைபெற்றது போல், அதன் எதிராக இலங்கை பாலாவி நதி கடலுடன் சேரும் முகப்பில் மாதோட்டத் துறைமுகமும் சிறந்து விளங்கிற்று. இயற்கை பாதுகாப்பரன்கலாக மன்னார் தீவும் ராமர் இணையும்*

அமைய வடபகுதியின் பிரதான துறைமுகமாக மாதோட்டத் துறைமுகம் விளங்கிற்று.

பாலாவி நதியின் தென் பகுதியில் கடற் பாலங்களும் பண்டகசாலைகளும் அமைந்திருந்தன. இன்றும் இப்பிரதேசம் வங்காலை (வங்கம் – கப்பல், காலை – தரிக்குமிடம்) என அழைக்கப்படுகின்றது. இதனை "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்" எனவும், "வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்" எனவும் சுந்தரர் தேவாரம் செப்புகின்றது.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டின் முன்னரே மாதோட்டக் கடற்கரையில் பண்டமாற்று வியாபாரம் நடைபெற்று வந்ததாகவும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை மாதோட்டம் உலகப் பிரசித்திபெற்ற வர்த்தகத் துறைமுகமாக விளங்கிற்று என்றும் வரலாறு கூறுகின்றது. அப்போது உரோமானியர், எகிப்தியர், கிரேக்கர், சீனர், அரேபியர்[2], தமிழர் முதலியோர் அங்குவந்து கூடிநின்று பண்டமாற்று வியாபாரம் செய்து வந்தனர். நவரத்தினம், சங்கு, யானைத்தந்தம், ஆமையோடு, யானைகள், குரங்குகள், மயில்கள் முதலியவற்றை ஏற்றுமதி செய்தனர். பளிங்குப்பாத்திரம், மண்பாத்திரம், அகில், சந்தனக்கட்டை, பட்டு, கம்பளி, மிளகு, குதிரைகள் முதலியவற்றை இறக்குமதி செய்தனர்.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்கு முன் 2000 ஆண்டுகள் வரை மாதோட்டம் புகழ் பெற்ற துறைமுகமாக இருந்தது. இக்காலத்தில் இந்தியாவுடன் மட்டுமின்றி மேற்கத்தேய நாடுகளுக்கும் மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கிடையான துறைமுக களஞ்சியப்படுத்தும் மற்றும் கப்பல் விட்டு கப்பல் பொருட்களை மாற்றி அனுப்பும் பிரதான துறைமுகமாகவும் விளங்கியது.

---

[2] அரேபியர், மாதோட்டத்தில் வந்து இறங்கிப் பல மாதங்கள் தங்கி இருந்து, வாணிபம் செய்து செல்வர். அவர்கள் தங்கள் ஒட்டகங்களுக்கு உணவாக இடும் தழைகள் செழித்த பெருக்கு *(Baob)* என்ற மரங்கள் இங்கு கடற்கரைகளில் மிகுதியாக வளர்கின்றன. அவை வேறு எங்கும் காணப்படவில்லை என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இலங்கை ஆராய்ச்சியாளர் ராஜா ரட்னகார என்பவரின் குறிப்புகளின் படி 9-ஆம் மற்றும் 10-ஆம் நூற்றாண்டுகளில் தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பகுதியான மாதோட்டம் முழு இலங்கையிலேயே மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளில் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

பராக்ரம பாகு I என்ற அரசன் 12-ஆம் நூற்றாண்டில் பாண்டிய அரசு மீது படை எடுக்க மகாதித்த துறைமுகத்தில் பல கப்பல்களைத் திரட்டினான் எனவும், நிஸ்ஸங்க மல்ல என்ற அரசனின் காலத்தில் எழுதப்பட்ட குறிப்புகளில் ஆயுதக் களஞ்சியம் ஒன்றை மகாதித்த துறைமுகத்தில் அமைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பராக்ரம பாகு II என்ற அரசனின் யுக்திகளில் முக்கியமானதொன்றாக மகாதித்த துறைமுகம் இருந்ததாகவும், மகாதித்த தமிழர்களின் கோட்டையாகவும் தென் இந்தியப் படைகளின் இறங்கு துறையாக இருந்ததாகவும் குறிப்பிடப்படுள்ளது.

12-ஆம் நூற்றாண்டில் இலங்கையின் தலைநகரம் அனுராதபுரத்திலிருந்து பொலன்னறுவைக்கு மாற்றப்பட்ட போதும் மகாதித்த எனும் மாதோட்ட துறைமுகம் முக்கியமானதாக இருந்ததை இதிலிருந்து அறிய முடிகின்றது.

யாழ்ப்பாணம் சிங்கைநகர் அரசு பரம்பரை வழிவந்த மகா பராக்ரமபாகு மன்னன் யாழ்ப்பாண தீவக்குறை மீது அக்கறை கொண்டவராக இருந்தான். மகா பராக்ரமபாகு மன்னர் ஆட்சிக் காலத்திலும் அதன் பின் போர்த்துக்கீசியர் ஆட்சியின் போதும் ஊர்காவத்துறை துறைமுகம் வடபகுதியின் பிரதான துறைமுகமாக மாறியது.

### 1.5 காந்தக்கோட்டை

விஸ்வ புராணம், மாந்தைப்பள் மற்றும் விஜய தர்ம நாடகம் ஆகியவற்றில் கூறப்படும் மரபுரையின்படி மாந்தை என்ற ஆதி புராதன நகரம் ஐவகை கலைத் தொழிலாளர் (கம்மியர்) மற்றும் அவர்களின் தலைவரான இறை சிற்பி **விஸ்வகர்மாவின்** பிறப்பிடம் என்று குறிப்பிடுகிறது. இம்மாதோட்ட நகரில் (மாந்தை நகரில்) கடல் வாணிபம் பெருகி ஓங்கிய காலத்தில் விசுவகன்மன் என்ற கம்மியன் ஒருவன் இருந்தான். அவனை "மாந்தைக்கம்மியன்" என்பர். அவன்

தனது நுட்ப அறிவின் திறமையால் இரும்பினாலான காந்தக்கோட்டை[3] (காந்தமலை; கட்டுமலை) ஒன்று அக்காலத்தே, நாகர்கள் சிலரின் துணைகொண்டு இரகசியமாகச் செய்து அதனை மக்கள் நடமாட்டம் இல்லாத கடற்கரையின் ஓரிடத்தில் அமைத்து வைத்தான். அக்கோட்டைக்குள் பல முரட்டு நாகசாதியர்களை இருக்கச் செய்தான்.

அந்தக் காந்தக்கோட்டை, கடலில்வரும் மரக்கலங்களை (கப்பல்களை)த் தனது காந்தசக்தியால் இழுத்துக் கரைக்குக் கொண்டுவந்து விடும். அப்போது அக்கோட்டைக்குள் இருப்பவர்கள் வெளியே வந்து கப்பல் தலைவர்களையும், மாலுமிகளையும் அங்குள்ள பிறர்களையும் கோட்டைக்குள் அழைத்துச் சென்று விடுவார்கள். உடனே அங்கு மறைந்திருக்கும் நாகர்களாகிய கொள்ளைக்காரர்கள் கப்பலுக்குள் நுழைந்து அங்குள்ள பொருள்களை எடுத்துக் கொண்டு வந்து விடுவார்கள் என்றும் இது பலகாலம் நடைபெற்றதாகவும் **கர்ண** பரம்பரைச் செய்தி ஒன்று கூறுகிறது.

க்ஷேமேந்திர எனும் காஷ்மீரிய புலவன் இது குறித்து; பேரரசர் அசோக மன்னன் காலத்தில் வணிகர்கள் அரசவைக்கு வந்து நாகர்களால் ஏற்பட்ட இழப்புகள் பற்றி முறையிட்டதாகவும் அசோகன் செப்புத் தகட்டில் செதுக்கிய கட்டளை ஒன்றை அனுப்பியதாகவும் ஆனால் அதை காந்தக்கோட்டையைச் சார்ந்தவர்கள் நிராகரித்தார்கள் என்றும் கூறுகின்றான். இந்தக் காந்தக் கோட்டையின் அடாதசெயலை அறிந்த சேரநாட்டு அரசன் குட்டுவன் சேரல் என்பவன் காந்தக் கோட்டையினையே அழித்ததாகவும், *1*-ஆம் நூற்றாண்டு சோழ அரசனான கரிகால சோழனால் காந்தக் கோட்டை அழிக்கப்பட்டதாகவும் வரலாறு கூறும்.

---

[3] மாதோட்டம் என்னும் மாந்தையில் ஒரு காந்தக் கோட்டை இருந்தது என்பதைப் பல நூல்கள் கூறும். "காந்தமுறுந் தடமதிலும் கழுமலர்ப் பொழிலும் உற்ற மாந்தைநகர்" என்பது **மாந்தைப்பள்**. இக்காந்தக் கோட்டையினைப்பற்றி, **ஹ்யூங் திசாங்** என்னும் சீனதேச அறிஞன் கறியதோடு அல்லாமல், **பெரிபுளூஸ்** என்ற சரித்திர ஆசிரியனும் இதனை "**சோப்பட்டிணம்**" என்று குறிப்பிடுகின்றான். சோப் – மதில் அல்லது எயிலை அரணாகக்கொண்ட கோட்டையினுடைய, பட்டினம் - ஊர் என்ற பொருள்படும் என்பர்.

### 1.6 கடல் வாணிபம்

கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் மாதோட்டக் கடல் வாணிபம் நாணயமாற்று நேர்ந்ததால் சற்றுக் குறைந்து வரலாயிற்று. ஒருவாறு பண்டமாற்றும் நாணயமாற்றும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு இறுதிவரை நடைபெற்றுவந்தன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கடல்வாணிபம் அறவே இல்லாமல் போயிற்று. ஆனால் பல யாத்திரீகர்கள் மாதோட்டக் கேதீச்சரம் வருவதும் செல்வதுமாக இருந்தனர் என வரலாறு கூறும். மாதோட்டத்தில் கடல் வாணிபம் குறையக் குறையப் பொருளாதாரமும் குறையலாயிற்று. பலர் மாதோட்ட நகரைவிட்டு வெளியேறினர் என்பர். கப்பல் துறைமுகமும் மண் மேடிட்டு வரலாயிற்று. கப்பல்கள் வந்துபோக வசதிகளும் குறைந்தன.

### 1.7 மண்மூடிய மாதோட்டக் கேதீச்சரம்

கி.பி. 1545-ல் திடீர் என்று கடல் பொங்கி வந்து மாதோட்டத்தின் சில பகுதியை மூடியது. ஆனால் திருக்கேதீச்சர ஆலயம் மட்டும் கி.பி. 1585 வரை நித்திய பூசைகளுடன் இடையூறு இன்றி இயங்கியதாம். பின்னர் திடீரெனப் போர்த்துக்கீசியர்[4] திருக்கேதீச்சர ஆலயத்துள் நுழைந்து பொன்னாபரணம் முதலிய பல பெரும் பொருள்களைக் கொள்ளை கொண்டு, சிலைகளையும், விக்கிரகங்களையும் உடைத்துத் திருக்கோயில், மதில், கோபுரம் முதலியவற்றைப் பீரங்கியினால் தாக்கி நாசம் செய்து யாவற்றையும் தரைமட்டம் செய்துவிட்டுச் சென்றனர்.

---

[4] இப் போர்த்துக்கீசியர் திருக்கேதீச்சரக் கோயிலுள் நுழைந்து கொள்ளை கொள்ள வருகின்றார்கள் என்ற செய்தியினைக் கோயிலார் சிலர் இரகசியமாக அறிந்து உடனே சில முக்கிய பொருள்களையும் சௌந்தரியமான கௌரியம்மன் சிலையினையும் பேர்த்து எடுத்துக்கொண்டு ஊரைவிட்டு இரவோடிரவாக அநுராதபுரம் செல்லும் வழியில் இடையே "மடுமாதா கோயில்" என்ற எல்லேயினைத் தாண்டிப் போகும் அடர்ந்து காட்டு வழியில் ஓரிடத்தில் - ஒரு சிறு கிராமத்தில் சிறுகோயில் ஒன்று சாமானியமாக அமைத்து அதில் கௌரியம்மனைத் தாபித்து வைத்தனர் என்பர். அந்தக் கௌரியம்மைக்கு பூசை நடைபெற்று வந்தது. அந்த அம்மனே திருக்கேதீச்சரத் திருக்கோயில் அம்மன் என்று கூறுகின்றனர். அங்கு பலர் சென்று அம்மனை வழிபட்டு வந்தனர்.

கோயிற் கருங்கற்களை எல்லாம் எடுத்துச் சென்று மன்னார் துறைமுகத்தைக் கட்டினர் என்பர். சில ஆண்டுகளுக்கெல்லாம் திருக்கேதீச்சரப் பகுதிகளில் மண்மாரி பெய்து மண்ணும் மூடியது; பின்னர் அங்கு காடாயிற்று.

மாதோட்டக் கேதீச்சரம் கடல்கொண்டு, பகைவரால் அழிவுற்று, மண்மாரி பெய்து எங்கும் மண் மூடியதை கி.பி. 1926-ஆம் ஆண்டிலும், கி.பி. 1949-ஆம் ஆண்டிலும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் பூமியைப் பறித்து ஆராய்ந்து சிற்சில இடங்களில் சிப்பிகள், சங்குகள், வளையல்கள், மட்பாண்டங்கள், பளிங்குப் பாண்டங்கள், சிறுவர் விளையாடும் சிறுதேர்கள், பொம்மைகள், மனித எலும்புக் கூடுகள் முதலியன மண்ணுள் புதைந்து கிடந்ததைக் கண்டுபிடித்தனர்.

### *1.8* புவியியல் சான்றுகள்

தற்போதய திருக்கேதீச்சரப் பிரதேசம் ஆதி தொட்டு பிரபல்யமான பிரதேசமாக இருந்ததற்கான புவியியல் சான்றுகள் கீழ்க் காணப்படும் வரைபடங்களில் புலப்படுகின்றன.

- கி.பி. 150-ஆம் ஆண்டளவில் தொலமியினால் வரையப்பட்ட அன்றைய இலங்கையின் முதலாவது நில வரைபடம்.

- கி.பி. 1725-ஆம் ஆண்டளவில் வரையப்பட்ட இலங்கை நில வரைபடம்.

கீழே உள்ள கி.பி. 150-ஆம் ஆண்டளவில் தொலமியினால் வரையப்பட்ட அன்றைய **தப்ரபேன்** எனக் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது வரைபடத்தில் வட பகுதியிலுள்ள *(2,4), (3,4)* ஒருங்கிணைப்பு சதுரங்களில் உள்ள நிலப்பரப்புகள் **மோடுட்டி *(Modutti)*** மற்றும் **கலிபி *(Galibi)*** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வடபகுதி *(2,4)* ஒருங்கிணைப்பு சதுரத்தில் கடலோராப் பகுதியில் **மர்கானா *(Marganaa)*** என்னுமிடமும் **யோகாநா** *(Yoganaa)* என்னுமிடமும் குறிப்பிடப்பட்டுள்ளது. வடபகுதி *(3,4)* ஒருங்கிணைப்பில் உள்ள பகுதியில் **பாசிஸ் *(Phasis)*** என்ற ஆறு குறிப்பிடப்பட்டுள்ளது. *(3,4)* ஒருங்கிணைப்பு சதுரத்தில் வட முனையில் **தளகோரி *(Talacori)*** என்ற பிரதேசமும் குறிப்பிடப்பட்டுள்ளது.




இவ்வரைபடத்தில் *13* பெரிய மாநகர்ப்புற குடியிருப்புகள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் **மோடுட்டி** ***(Modutti)***, **மர்கானா** ***(Marganaa)***, **யோகானா** ***(Yoganaa)***, **தளகோரி** ***(Talacori)*** என்பனவும் அடங்கும். பிற்காலங்களில் ஆராய்ச்சியாளர்கள் **மோடுட்டி, மர்கானா, யோகானா, தளகோரி** என்ற இடங்களை முறையே **மகாதித்த (மாதோட்டம்** அல்லது **மாந்தொட்ட** பிரதேசம்), **மாந்தை** (நகரம்), **அரிப்பு, தொண்டமானாறு** எனக் குறிப்பிட்டுள்ளனர். **மகாதித்த (மாதோட்டம்) ஜம்புகோல** ***(காங்கேசந்துறை)*** என்பன மகாவம்சத்தில் அநேக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. **மாதோட்டம்** ஆதிதொட்டு அன்றைய இலங்கையில் பிரபல்யமாயிருந்த துறைமுகமாகும்.

இலங்கையில் புதையுண்ட துறைமுக நகரம் என்று ஒன்றே உளது எனவும் அது **மகாதித்த** *(**மாதோட்டம்**)* எனவும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இவ்வரைபடத்தில் *2* பிரதேசங்கள் **முதன்மை வர்த்தக மையங்கள்** ***(Emporium)*** எனக் குறிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் வட பகுதியிலுள்ள **மோடுட்டி** எனும் **மாதோட்டமும், தளகோரி** எனும் **தொண்டமானாறுப்** பகுதியும் ஆகும்.

இவ்வரைபடத்தில் துறைமுகம் சார்ந்த பெரிய மாநகர்ப்புற குடியிருப்புகளுடன் கூடிய மாநிலப் பகுதிகளில் இரண்டாக வட பகுதியிலுள்ள துறைமுக கடலோராப் பிரதேசங்களான **மாந்தை** ***(Marganaa)*****, அரிப்பு** ***(Yoganaa)*** என்னுமிடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பழைய தமிழ் அகராதிகள் மாந்தை எனும் சொல்லுக்கு ஓரூர் என்று பொருள் குறிப்பிடும்.

இவ்வரைபடத்தில் *5-ஏரிகள் (ஆறுகள்)* குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் **கஞ்சீஸ்** ***(Ganges)*** என்று குறிப்பிடப்பட்டுள்ள **மகாவலி கங்கையும்,** *(3,4)* ஒருங்கிணைப்பு சதுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **பாசிஸ்** ***(Phasis)*** அல்லது **பாலாவி முண்டு** *(கிரேக்க மொழியில் முண்டு இடம் என்பதைக் குறிக்கும்)* என்று கருதப்படும் ஆறும் அடங்கும்.

கீழே காட்டப்பட்டுள்ள *1725*-ஆம் ஆண்டில் வரையப்பட்ட இலங்கை நில வரைபடத்தில் **மாதோட்ட மாநிலப் பிரதேசம்,** ***MATOTTE*** எனத் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. *20*-ஆம் நூற்றாண்டு அகழ்வாராட்சியின் போது பாரிய அளவு சிதைவுகள் இருந்த இந்தப் புராதன துறைமுக நகரம் *300* ஏக்கர்களுக்கு மேல் நிலப்பரப்பு உடையதாக இருந்திருக்க வேண்டும் எனவும் அகழ்வாராட்சியின் போது கட்டுபிடிக்கப்பட்ட நெடுஞ்சாலை ஒன்று *40* அடி அகலமானது எனவும் மாதோட்ட மாநகரின் சுற்றுப்புற மதில்கள் மற்றும் இரண்டு அடுக்கு அகழிகளின் சுவடுகளைக் காணலாம் எனவும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.


NIEUWE KAART
VAN HET EYLAND
CEYLON,
opgesteld door
FRANCOIS VALENTYN,
J. van Braam et G. onder de Linden.
BAAY VAN TRICOEN-MALE
HET LAND DER WEDDAS
OF BEDAS.
HET LAND DER WANNIAS
HOURLI
TOMMAKOD
LEEG LAND
MATOTTE
PUTELAN
CALPENTYN
Bogt van Tondi
Adams Brug
DE NAIK VAN MADURE

## 2 புராண வரலாறுகள்

*[திருக்கேதீச்சுவரத் தலத்து மகிமைகள் யாவும் தவசீலரான, சூதமாமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிய ஸ்காந்தபுராணம் - தக்ஷிண கைலாச மான்மியம் இரண்டாம் அத்தியாயத்தில் உள்ளன.]*

முன்னர், யாழ்ப்பாணம்-கந்தரோடை பிரம ஸ்ரீ க. து. வைத்தியநாத சாஸ்திரியார் அவர்கள் தக்ஷிண கைலாச மான்மியத்தில் திகழும் "கேதீச்சுவர வரலாறு" என்ற பகுதியைத் தமிழ் உரைநடையில் எழுதிய சிறு நூல் 1919-ஆம் ஆண்டில் வெளிவந்தது.

பின்னர், இலங்கை-அச்சுவேலி சிவாகம ஞானபானு சிவஸ்ரீ. ச. குமாரசாமிக் குருக்களின் குமாரர் சிவஸ்ரீ. ச. கு. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் தக்ஷிண கைலாச மான்மியத்தை முதனூலாகக்கொண்டு, தமிழ் செய்யுள் வடிவில் **திருக்கேதிச்சரப்புராணம்** என்ற பெயருடன் இயற்றினார்கள். இப்புராணம் எட்டுச் சருக்கங்களையும், 248 திருவிருத்தங்களையும் கொண்டது.

இங்குப் பின்வரும் தமிழ்-உரைநடை, திருக்கேதீச்சரப்புராணம் முதலியவற்றின் மிகச்சுருக்கம் ஆகும்.

### 2.1 திருக்கேதீச்சரத் தோற்றம்

ஒரு காலத்தில், தேவலோகத்தில் இந்திரன் தன் சபாமண்டபத்தில் சபை கூடியபோது அங்கு வந்திருந்த ஆதிசேடனும், வாயுதேவனும் பிறதேவர்களின் தூண்டுதலின் பேரில், தத்தம் வலிமையினைப் புகழ்ந்து பேசிக்கொண்டதோடு அல்லாமல் பலவாறு ஒருவரையொருவர் இகழ்ந்தும் பேசிக் கொண்டனர்.

பிறகு இருவரும் மனம் மாறுபட்டதும், தேவர்கள், முனிவர்கள் அஞ்சுமாறு போர் புரியும் நிலைமை நேர இருந்தது. அப்போது ஆதிசேடன் வாயுதேவனை நோக்கி, "நான் திருக்கயிலை மலையைப் பற்றிச் சுற்றிக் கொள்கிறேன்; நீ உன் வலிமையினால் எமது பிணிப்பை நெகிழ்த்தி விடுக; இதில் எவர்தம் செயலில் வெற்றி உண்டாகிறதோ, அவரே பெரியவர்" என்று கூறினான். பின்னர் ஆதிசேடன் கயிலைவெற்பைத் தனது நீண்ட உடலினுல் இறுகச் சுற்றிக் கொண்டு

ஆயிரம் சிகரங்களின் மேல் தமது ஆயிரம் தலைகளை வைத்துப் படத்தினால் மறைத்து மூடிக்கொண்டான். அதனைக்கண்ட வாயுதேவன் ஆதிசேடனைக் கோபித்துத் தன் முழுப் பலமுங் கொண்டு காற்றை வீசத் தொடங்கினான்.

அப்போது, அப்பெருங்காற்றினால் உலகம் நிலை கலங்கியது. தேவர்கள் முதலியோர் நடுக்கமடைந்து, சிவபெருமானை நோக்கி,

"கொற்ற அந்தகன் மாய்வுறக்
கொழுநிதிச் சூலமேல்
செற்ற முற்றுடல் குத்தியே
சேவகம் செய்தோய் !
உற்ற முப்புரம் தழல்எழ
ஒண்ணகை விடுத்தோய் !
மற்று நம்தமைக் காத்தருள்
வரத ! நின் அடைந்தோம்".

என்று பலவாறு துதித்து, "அண்ணலே! எங்களை இந்தச் சூறைக்காற்றின் இன்னலில் இருந்து காத்தருள்க" என்று முறையிட்டனர். சிவபெருமான் தேவாதியர் வேண்டுகோளுக்கிணங்கி, "தேவர்களே! வருந்தற்க" என்று கூறவும் தேவர்கள் முதலியோர் மகிழ்ந்து தத்தம் இடங்கட்குச் செல்ல இருந்தனர்.

அப்போது சிவபெருமான் தமது கருணை நாட்டத்தைக் கயிலை மலை மீது செலுத்தினார். அதுகண்ட ஆதிசேடன் தன் பிணிப்பைச் சிறிது தளர்த்தித் தனது தலைகளில் மூன்றைத் தூக்கிப் பார்த்தான். வாயுதேவன், இதுதான் சமயமென்று பெருங்காற்றை மிக வேகமாக வீசிக் கயிலை மலையின் சிகரங்களில் மூன்று சிகரங்களை (கொடுமுடிகளை)ப் பறித்துத் தென்பாகத்தில் வீசினான். அவை வெவ்வேறு இடங்களில் வந்து விழுந்தன. அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு இடபவாகனத்தில் எழுந்தருளி ஆதிசேடனையும், வாயுதேவனையும் நோக்கி, "நீங்கள் உங்கள் மனத்தில் கொண்ட பகையினை விடுங்கள்" என்று கூற, அவர்கள் இருவரும் அம்மையப்பரை வணங்கி, "எங்கள் பிழையினைப் பொறுத்தருள வேண்டும்" என்று பலவாறு வேண்டினர். அச்சமயம் தேவர்களும், முனிவர்களும் இறைவனை வணங்கி "இற்று வீழ்ந்த மூன்று கயிலைச் சிகரங்களிலும் தேவரீர்" தென்கயிலாயம் என்று

மதித்து, "அவற்றில் என்றும் எழுந்தருளி இருத்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். இறைவன் "அவ்வாறே செய்வோம்" என்றருளிக் கயிலைக்கு எழுந்தருளினார். தேவர்களும் பூமழை பொழிந்து கொண்டு சென்றனர்.

இற்று வீழ்ந்த மூன்று கயிலைச் சிகரங்களில் ஒன்று இலங்கை வடமேற்குப் பாகத்தில் வீழ்ந்து பூமியுள் புதைந்தது. அது திருக்கேதிச்சரம் எனப் பின்னர் வழங்கியது. மற்றைய இரண்டில் ஒன்று திரிகூட மலையாகவும், மற்றொன்று கந்தமாதன மலையாகவும் அமைந்தன. இத்திருக்கேதீச்சரம் - **தென்கயிலாயம்** எனப் பெயர் வழங்கலாயிற்று.

## *2.2* வழிபட்டோர்

இம்மாதோட்டத் திருக்கேதீச்சர நாதனைத் திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள், கேதுபகவான், மகாதுவட்டா, பிருகு முனிவர், அகத்திய முனிவர், இராவணன், மாலியவான், மயன், மண்டோதரி, ஸ்ரீராமர், பாண்டியர், சேரர், இராசேந்திர சோழன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் இராமேச்சுவரக் கடற்கரையில் நின்று தரிசித்துத் தேவாரப் பதிகங்கள் பாடித் துதித்துள்ளனர்.

கேதுபகவான் பூசித்த திருக்கேதீச்சரத் திருத்தலத்தை சூரபன்மன் மனைவி பதுமகோமளையின் பாட்டனான மகாதுவட்டா என்ற தேவசிற்பி பூசித்துப் பல திருப்பணிகள் செய்தான். இராவணன் மாமனாகிய மயன் என்பவனும் வழிபட்டுப் பல திருப்பணிகள் புரிந்தான்.

### *2.2.1* கேதுபகவான் வழிபடல்

முன்னொருகாலத்தில் இந்திரன் முதலியதேவர்களும், அசுரர்களும் ஒருவரோடொருவர் உயர்வு பெற எதிர்த்துக் கடும்போர் புரிந்தனர். இரு திறத்திலும் பலர் மடிந்தனர். அதனைக்கண்டு அவர்கள் போரை நிறுத்தினர். பிறகு தேவர்களும், அசுரர்களும் சமாதானமாக ஒன்று கூடி இறவாதிருக்கக் கருதிப் பிரமதேவனைத் துணைகொண்டு திருப்பாற்கடலை அடைந்து, திருமாலை வணங்கி யாவும் கூறிப் பாற் கடலைக் கடைந்து அமிர்தம் தந்தருளுமாறு வேண்டினர். திருமாலும் அவர்கள் விருப்பத்திற்கு இணங்கினார். மந்தரமலையை மத்தாகவும்,

சந்திரனை மத்தின் காம்பாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவுங் கொண்டு ஒருபுறம் தேவர்களும், மற்றொரு புறம் அசுரர்களும் பிடித்துக் கயிறாகிய பாம்பை இழுத்துக் கடையலானார்கள்.

அப்போது, அவர்கள் இச்செயலுக்குச் சிவபெருமான் திருவருளை நாடாமல் தொடங்கினர். அதற்கு இடையூறாக வாசுகி என்னும் பாம்பு உடல்வலி பொறுக்க முடியாமல் தன்வாயிலுள்ள விஷத்தைக் கக்கிவிட்டது. அவ்விஷம் உடனே எங்கும் பரவியது. தேவர்கள் முதலியோர் பயந்து சிதறி ஓடிக் கயிலை மலையை அடைந்து, சிவபெருமானை நோக்கித் தம் குறை கூறி முறையிட்டனர். சிவபெருமான் தேவாதியோர் வேண்டுகோளுக்கு இரங்கி ஆலகால விஷத்தை எடுத்து[5] வரச்செய்து உண்டு கண்டத்தில் அடக்கிக் கொண்டு, திருமால் முதலிய தேவர்களை நோக்கி, "நீங்கள் மீண்டும் சென்று பாற்கடலைக் கடையுங்கள். அமிர்தம் தோன்றும்" என்று கூறி விடை கொடுத்தருளினார்.

அதன்பின் திருமால் முதலியோர் திருப்பாற் கடலை அடைந்து பாற்கடலை முன்போல் கடையலானார்கள். அப்போது விநாயகர் வழிபாடு புரியாத காரணத்தால் கடையும் மத்து பாதாளத்தில் ஆழ்ந்தது. அதனை அறிந்து விநாயக வழிபாடு செய்தனர். மத்தும் பழையபடி மேலேவந்து மிதந்து சுழன்றது.

பாற்கடலைக் கடையப் பொற்குடத்தில் அமிர்தம் எழுந்தது. அதுகண்டு தேவர்களும், அசுரர்களும் மகிழ்ந்து அமிர்தத்தை உண்பதற்கு யாவரும் முந்தினர். உடனே திருமால் மோகினி வடிவு கொண்டு அசுரர்களை வஞ்சித்துத் தேவர்களுக்கு மட்டும் அமிர்தத்தைப் பகுத்து அளித்து வந்தார். திருமாலின் சூட்சியை அறிந்த ஒரு அசுரன்[6] தேவவடிவு

---

[5] ஆலகால விஷத்தைப் பாற்கடலை அடைந்து எடுத்து வந்தவர் சுந்தரர் ஆவர். இவர் ஆலகால விஷத்தை எடுத்து வந்ததனால் ஆலால சுந்தரர் எனப் பெயர் பெற்றார். இவர் எப்பொழுதும் இறைவன் சந்நிதியில் அணுக்கத் தொண்டராக இருப்பவர்.

[6] இவ்வசுரன் விப்ரசித்தி என்ற பெயருடைய அசுரனுக்கும் சிம்மிகை என்ற அசுரமாதுக்கும் பிறந்தவன். அறிவும் அன்பும் நற்குணமும் உடையவன். சுக்கிரனிடம் பெருநட்புப் பூண்டவன்.

கொண்டு சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையிலே வந்து அமர்ந்திருந்து அமிர்தத்தை வாங்கி முறைப்படி மந்திரம் கூறி இறைவனுக்கு நிவேதித்து உண்ணாமல் விரைந்து உண்டான். உடனே சூரிய சந்திரர் அசுரன் செயலைத் திருமாலுக்குக் கண்சாடையால் குறிப்பிட்டுக் காட்டினர். அதுகண்ட திருமால் தன்கையில் இருந்த சட்டுவத்தால் அசுரன் தலையில் அடிக்க, அவனது தலை துண்டித்துத் தலைவேறு உடல்வேறு ஆயிற்று.

தேவவடிவம் கொண்டுவந்த அசுரன் அமிர்தம் உண்டமையால் துண்டித்த அவனது தலையும், உடலும் அழியாமல் உடலற்ற தலையில் பாம்பு உடல் வந்திணைந்து நின்றது. அதுவே, இராகு என்னும் கரும்பாம்பு எனப் பெயர் பெற்றது. தலை இழந்த உடலில் மூன்று தலைகள் பொருந்திய படத்துடன் கூடிய பாம்புத் தலை வந்து இணைந்து நின்றது. அதுவே கேது[7] என்னும் செம்பாம்பு எனப் பெயர் பெற்றது. இவர்கள் இருவரும் தவம் புரிந்து பேறு பெற்று ஏழு கிரகங்களுடன் கூடி நின்று ஒன்பது கிரகங்களாகத் திகழ்கின்றார்கள்.

பின்னர், கேது என்பவன் "எனது வினைகளைப் போக்கச் சிவலிங்கபூசை செய்வேன்" என்று மனத்துட்கொண்டு, ஈழநாட்டை வந்தடைந்தான். அங்கு வடபகுதியில் திருக்கயிலைச் சிகரம் வந்து வீழ்ந்த இடமான தென்கயிலாயம் என்ற தலத்திற்கு ஒருபால் தங்கி ஸ்நானம் முதலியவை முடித்துக்கொண்டு தென்கயிலாயநாதர் பூசைக்கு வேண்டிய உபகரணங்களுடன் தென்கயிலாயநாதர் ஆலயத்திற்குப் புறப்பட்டுச் சென்றான். அப்போது அவனது பரிவாரங்களும் அவனுடன் வந்து உதவி புரிந்தனர். கேதுபகவான் ஆலயத்தின் முன் நமஸ்கரித்து எழுந்து வணங்கி உள்ளே சென்று தென்கயிலாய மூர்த்தியாகிய சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துச் சிவாகம முறைப்படி அபிஷேகாதி செய்து, வஸ்திரம், ஆபரணம், புஷ்பம், சந்தனம் முதலியன சாத்திப் பலவகை அன்னம், பழவர்க்கம்

---

[7] இக் கேது என்பவன் அசுரர்களில் மிகவலிமை படைத்தவன். நெடிய-வடிவினன் தன் தவ வலிமையால் சாயாக்கிரக பதம் பெற்றவன். இவனது மனைவி "சித்திரலேகா" என்பவள்; புதல்வன் "அவமிருது"; கோத்திரம் ஜைமினிகோத்திரம் என்பது. கேது ஞானகாரகன். இவன் கிரகபதம் பெற்றமையால் "பகவான்" என்ற செம்மொழி பெற்றுக் **கேதுபகவான்** எனப் பெயர் பெற்றான்.

முதலியவற்றை வைத்து நிவேதித்துத் தூப தீபம் காட்டி வில்வங்கொண்டு இறைவனின் பேராயிரம் கூறி அர்ச்சித்துப் பலவாறு தோத்தரித்து வணங்கினான்.

தென்கயிலாயநாதர் கேதுவின் பூசைக்கு மகிழ்ந்து உமாதேவி (கௌரியம்மை)யாரோடு இடப வாகனத்தில் எழுந்தருளிக் காட்சி தந்து கேதுவை நோக்கி, "அன்பனே! உனது பூசைக்கு மகிழ்ந்தோம்;

நீ எம்மைப் பூசித்ததால் இனி நமக்குத் திருக்கேதிச்சரநாதர் என்றும், நம் இவ்வாலயத்திற்குத் திருக்கேதீச்சரம் என்றும் பெயர் வழங்குவதாக" என்று அருளி இலிங்கத்துள் மறைந்தருளினார்.

பிறகு கேதுபகவான் திருக்கேதீச்சரத் தலத்தில் பலகாலம் இருந்து இறைவனைப் பூசித்து வினைகளைப் போக்கிச் சித்தசுத்தி அடைந்து தனது கிரக பதத்திற்குச் சென்றான்.

ஈழநாட்டு வடபகுதியில் திகழும் தென்கயிலாயம் கேது பூசித்தது முதல் திருக்கேதீச்சரம் என்ற பெயர் பெற்றது. அங்கு எழுந்தருளிய இறைவர் திருக்கேதிச்சரநாதர் என்ற பெயர் பெற்றுத் திகழ்ந்தார். கேது + ஈச்சரம் = கேதீச்சரம். கோயில். திரு - அடைமொழி.

### 2.2.2 மகாதுவட்டா திருப்பணி

தேவலோகத்தில் தெய்வசிற்பி என்னும் தேவதச்சன் ஒருவன் இருந்தான். அவன் மகாதுவட்டா[8] என்னும் பெயர் பூண்டவன். நினைத்த மாத்திரத்தில் பிரமனும் நாணும்படி படைக்கும் தொழிலில் கைதேர்ந்தவன். வேதாகம சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து நுண்ணறிவு படைத்தவன். வேதாகமங்களின் உட்பொருளாக விளங்குபவன் சிவபெருமானே என்று உணர்ந்து அவரது திருவடிகளை மறவாத சிந்தையுடையவன். பிரமாதி தேவர்களால் பெரும் புகழ் பெற்று விளங்கியவன்.

ஒருநாள் இம்மகாதுவட்டா என்பவன் இப் பூவுலகத்திலே உள்ள சிவத்தலங்களுக்கு எல்லாம் மிக உத்தமமாக உள்ளதும், பிரமன்,

---

[8] இம் மகாதுவட்டா என்பவன் சூரபன்மன் மனைவியான பதுமகோமளையின் பாட்டனார் ஆவன்.

திருமால், இந்திரன் முதலிய தேவர்களால் புகழப்பெற்றதுமான சிவத் தலம் எத்தலம் என்று ஆராய்ந்தான். பின்னர் ஈழ நாட்டில் கேது பூசித்துப் பேறு பெற்ற திருக்கேதீச்சரமே என்று அறிந்து அதனை அடைந்தான். திருக்கோயிலின் தென்பால் சிவபெருமான் திருவருள் போல் பாய்ந்தோடும் பாலாவித் தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்து, விபூதி அணிந்து நியமங்களை முடித்துக்கொண்டு வழிபாட்டிற்குரிய பொருள்களுடன் திருக்கேதீச்சரநாதன் ஆலயத்திற்குள் சென்றான்.

பிறகு, தேவதச்சனான மகாதுவட்டா, கேதீச்சரநாதனாகிய சிவலிங்கப் பெருமானுக்குச் சிவாகம முறைப்படி தைலம், பஞ்சகவ்வியம், பால், தயிர் முதலிய பொருள்களைக் கொண்டு சிறப்புற அபிஷேகம் செய்து, வஸ்திரம், சந்தனம், புஷ்பம், அறுகு சாத்தி, சித்திரான்னம், மோதகம் முதலிய பலகாரம், பழவர்க்கம் நிவேதித்துத் தூபதீபம் கொடுத்து அன்பு ததும்பும் தோத்திரம் பல செய்து பணிந்தான்.

இவ்வாறு பலநாட்கள் பக்தியுடன் பூசை செய்துவர ஒருநாள் பூசையின் முடிவின்கண் திருக்கேதீச்சரப் பெருமான் தமது கணங்கள், முனிவர்கள் புடைசூழ உமாதேவியாரோடு இடபவாகனத்தில் எழுந்தருளி மகாதுவட்டாவுக்குக் காட்சியளிக்க அவன் தரிசித்துப் புஷ்பாஞ்சலி புரிந்து,

*"அடியர் குற்றமும் குணமெனக்*
*கொண்டருள் அனகா !*
*கொடியர் முப்புரம் பொடிபட*
*விழித்தருள் குழகா !*
*படியர் விண்ணவர் பணிவுற*
*அருள்புரி பகவா !*
*கடிய தொல்விடம் உண்டருள்*
*கண்ட ! நின்சரணம்".*

என்று பலவாறு துதித்துப் போற்ற, இறைவன் மகிழ்ந்து அவனை நோக்கி, "அன்ப! உனது பூசையின் வழிபாட்டிற்கு மிக மகிழ்ந்தனம்; என்ன விரும்பினாய் கேள்" என்றலும் மகாதுவட்டா தனது இரு கைகளையும் சிரசின் மீது குவித்துக்கொண்டு,

*"நமஸ்தே ஸாம்ப ருத்ராய நமஸ்தே பரமாத்மனே !*
*சேதுமத்ய சிவாஸாய கேதீசாய நமோ நம !!"*

என்று தொடங்கும் எட்டுச் சுலோகங்களால் துதி செய்து, "வேதநாயக! எம்பூதநாயக! அடியவனுக்கு எக்காலத்திலும் தேவரீரிடம் குறையாத மெய்யன்பு தந்து அன்பர் ஏட்டில் (பட்டியலில்) என்னையும் பதிவு செய்து கொள்ள வேண்டும்" என்று கூறி வணங்கினான்.

அப்போது, கேதீச்சரநாதன் "மெய்யன்பனே! நீ நன்று விரும்பினை, அவ்வண்ணமே செய்வோம். அன்றியும் உனக்கு **விசுவகன்மா** என்று ஒரு புதல்வன் உண்டாவான்" என்று அருள்புரிந்து சிவலிங்கத்தில் மறைந்தருளினார்.

திருக்கேதீச்சரநாதன் திருவருள்பெற்ற மகாதுவட்டா திருக்கேதீச்சரத் தலத்தில் பன்னாள் தங்கியிருந்து வழிபாடு செய்துகொண்டு, இறைவனுக்கு அழகிய கருப்பக்கிரகக் கோயில் ஒன்றும், கௌரியம்மையாருக்குச் சிறந்த கோட்டம் ஒன்றும் சிற்பநூற்படி சமைத்தான். பிறகு மதில்கள், பற்பல மண்டபங்கள், விமானங்கள், கணபதி, முருகன், வைரவன், சண்டேசுவரர், சூரியன் முதலியோர் எழுந்தருள அழகிய கோட்டங்கள் அமைத்தான். ஒரு நன்னாளில் எம்பெருமானுக்குக் குடமுழுக்குச் செய்வித்து, நல் விழாவும் நடத்திச் சேவித்து மகிழ்ந்தான். இடைவிடாது கேதுநாதனிடம் பக்தி பூண்டு ஐந்தெழுத்தை நிட்டைகூடிச் சிவானுபூதி பெற்றுத் தன்னுலகு சென்றான்.

இத்திருக்கேதீச்சரத் தலத்தில் எழுந்தருளிய ஈழத் தென்கயிலாயநாதரான கேதுநாதனை, மகாதுவட்டா என்னும் தேவலோக சிற்பி சிவலிங்க வழிபாடும், தவமும், திருப்பணியும் செய்த பெரும் பேற்றால் திருக்கேதீச்சரம் **மகாதுவட்டாபுரம்**[9] என ஒரு பெயர் பெற்று விளங்களாயிற்று. இப்பெயர் காலப் போக்கில் மாதோட்டம், மாதோட்ட நகர், மாதோட்டை என வழங்கி வரலாயிற்று.

### *2.2.3* தசரத ராமன் வழிபாடு

உலகம் போற்றும் சூரிய குலத்திலே க்ஷத்திரிய வமிசத்தில் தோன்றிய திலீபன் என்னும் அரசனுக்கு இரகு என்பவன் மகனாய்த் தோன்றினான்.

---

[9] இம்மகாதுவட்டாபுரம் என்ற பெயர் ஆதிதொட்டு வழங்கிவந்து, பின்பு, கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலே திரிந்து மாதோட்டம் என்ற பெயர் மிகுதியாக வழங்கி வரலாயிற்று.

அவனுக்குத் தோன்றிய புதல்வன் அசன் என்பவன். அசனின் மகனே தசரதன் ஆவன். தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரர்களில் மூத்த குமாரனே **இராமபிரான்** ஆவன். இவன் தருமமே வடிவாகத் தோன்றிய குணசீலன். தன் தந்தை சொற்படி நடத்தலே தருமநீதியென்று கருதித் தன் மனைவி சீதாபிராட்டியாரோடும், இளையதம்பி இலக்குமணனோடும் பதினான்கு ஆண்டு கானகம் சென்றான். பல நதிகளில் நீராடினான். தண்டகாரணியத்தில் வசிக்கலானான்.

அப்போது இலங்கைக்கு அரசனாகிய இராவணன் சீதையின் அழகினைத் தன் தங்கை சூர்ப்பனகையினால் கேட்டுச் சூழ்ச்சி செய்து, அங்குவந்து சீதையைக் கவர்ந்து சென்றான். அதனை அறிந்த இராமன், வானரசேனைகளுடன் சென்று சேதுக்கரையாகிய தென்கடலில் அணையிட்டு, இலங்கை நகருக்குள் நுழைந்து அரக்கர் குலத்தை அழித்து இராவணனையும் கொன்று சீதையை மீட்டான்.

இராவணன் தம்பி விபீடணனுக்கு இலங்கை அரசை அளித்துத் தன் ஊருக்குப் புறப்பட்டான்.

சாமவேதம் உணர்ந்தவனும் சிவபக்தனுமான இராவணனை இராமன் கொன்றதால் சேர்ந்த கொலைத் தோஷமான பிரமகத்தி (கொலைப்பாதகம்) இராமனைப் பின்தொடர்ந்து பற்றியது. அஃது இன்னலை விளைவித்துக்கொண்டு வரலாயிற்று. அதனை அறிந்த இராமன் அப்பிரமகத்தியினை போக்க எண்ணி, முன்னர் இலங்கையிலுள்ள **முனீசுவரம்** என்ற சிவத்தலத்தை அடைந்து அங்கு **பொன் இலிங்கம்** ஒன்று அமைத்துப் பிரதிஷ்டை செய்து பூசித்தான். அதன் பின் **திருக்கோணேசுவரம்** (திருகோணமலை) என்ற சிவத்தலம் அடைந்து, அங்கு **இரத்தினலிங்கம்** ஒன்று அமைத்துப் பிரதிஷ்டை செய்து பூசித்து வணங்கிய பிறகு கேதுபகவான் பூசித்து அருள் பெற்ற **திருக்கேதீச்சரம்** என்ற சிவத்தலத்தை வந்தடைந்தான்.

அதிகாலையில், தசரதராமன், சீதை, இலக்குமணனோடும் திருக்கேதீச்சரத் தலத்தில் திகழும் **பாலாவித் தீர்த்தத்தில்** நீராடினான். விபூதி, உருத்திராட்சம் அணிந்து காலை நியமங்களை முடித்துக் கொண்டான். பிறகு, திருக்கேதீச்சர ஆலயத்துள் சென்று அங்கு **வெள்ளி இலிங்கம்** ஒன்று அமைத்துப் பிரதிஷ்டை செய்து பூசை உபகரணங்களைச் சேகரித்துக்கொண்டு, மன ஒருமைப்பாட்டுடன்

பூதசுத்தி, தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி ஆகிய பஞ்சசுத்தி புரிந்து, திராசன பூசை பண்ணி ஆசனமூர்த்தி, வித்தியாதேகம், நேத்திரம் பூசித்து, ஆவாகனாதி புரிந்து, சுவகதார்க்கியம் கொடுத்து வேண்டித் திருப்பாதங்களுக்குப் பாத்தியமும், திருமுகத்திற்கு ஆசமனமும், திருமுடிக்கு அர்க்கியமும் அளித்து, பஞ்சகவ்வியம், பல பழங்கள், தேன், இளநீர், சந்தனம் முதலிய அபிஷேகத் திரவியங்களை மானதமாக நினைந்து பாவனாபிஷேகம் செய்து, திருவொற்றாடை ஒற்றி வஸ்திரம், ஆபரணம், புஷ்பமாலை சாத்தி, அறுசுவையுடன் கூடிய அன்னம் நிவேதித்துத் தூபதீபம் காட்டி அர்ச்சித்து, ஐந்தெழுத்தை ஆயிரம் செபித்து, அச்செபபலனை இறைவனுக்குச் சமர்ப்பித்துத் தோத்திரம் பல புரிந்து வணங்கிப் புஷ்பாஞ்சலி செய்து வேண்டி நின்றபோது, வெள்ளி இலிங்கத்தினின்று, திருக்கேதீச்சரப்பெருமான் கௌரியம்மையாருடன் தோன்றி இராமபிரானுக்கு அருள்செய்து மறைந்தருளினார்.

அதன் பின்னர் இராமபிரான் அங்கு நின்றும் புறப்பட்டுச் சேதுக்கரையாகிய இராமேச்சுவரம் என்ற தலம் வந்தடைந்து அங்கு **மணல் இலிங்கம்** அமைத்து விதிப்படி பூசித்துத் தன்னைத் தொடர்ந்த பிரமகத்தியாகிய பாவத்தைப் போக்கிக் கொண்டான்.

இராமபிரான் இலங்கையிலுள்ள முனீசுவரத்திலும், திருக்கோணேசுவரத்திலும், திருக்கேதீச்சுவரத்திலும், தமிழ்நாட்டிலுள்ள இராமேச்சுவரத்திலும் முறையே பொன், இரத்தினம், வெள்ளி, மணல் இலிங்கங்களை ஆனிமாதம் வளர்பிறையில் அடுத்தடுத்து முறையே வருகின்ற திருதிகை, பஞ்சமி, சப்தமி, தசமி என்ற திதிகளில் தாபித்துப் பூசித்தான் என்பதாம்.

*"ஆனிமா மதிசேர் பூர்வ பட்சத்தில்*
*அமைந்த மூன்றே*
*மேனியாம் ஏம லிங்கம் ; மேவர*
*தனமாம் ஐந்தே ;*
*பானிலா வெள்ளிபொன் ஏழே ! பார்மணல்*
*பத்தே ; ராமன்*
*மேனிலா அன்பின் நாட்டும் வியன்புகழ்த்*
*திதியாம் என்ப."*

### 2.2.4 அகத்தியமுனிவர் பூசித்தல்

வடமேரு மலையில் உமாதேவியார் திருமணத்தின் போது தேவாதி முனிவர்கள் முதலியோர் யாவரும் மேருமலைக்கு வந்ததனால் தாங்காமல் தென்பாகம் உயர்ந்து விளங்கி நின்றது. அப்போது சிவபெருமான் அங்கு வந்திருந்த அகத்திய முனிவரை அழைத்து, "முனிவரே! நீர் தென் நாட்டிலுள்ள பொதியமலையின் கண் சென்று இருப்பீராக; அங்கே நாம் உமக்குத் திருமணக் காட்சியினை அளிப்போம்" என்று கூறி அனுப்பியருளினார். அகத்திய முனிவரும் அவ்வாறே சந்தன மரங்களும், பிற மரங்களும் அடர்ந்த வளம் நிறைந்த பொதிய மலையின்கண் வந்து இருந்தருளினார். வடபாகம் சமமாயிற்று. அகத்தியர் பொதிய மலையில் தன் மனைவி உலோபா முத்திரையோடு தவம் புரிந்துகொண்டு, தன் ஞானதிருஷ்டியினால் இறைவனின் திருமணக் கோலக் காட்சியினைத் தரிசித்து ஆனந்தமுற்று இருந்து வந்தார்.

பின்னர் அகத்திய முனிவர் தமது தவம் சித்தி பெறும் பொருட்டுச் சிவத்தல யாத்திரை செய்ய விரும்பி மனைவி உலோபா முத்திரையுடன் புறப்பட்டு விருத்தகாசியாகிய திருமுது குன்றம் (விருத்தாசலம்) என்ற சிவத்தலத்தை வழிபட்டுக்கொண்டு, தில்லைச் சிதம்பரம் வந்து சிற்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராசப் பெருமானைத் தரிசித்து ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார்.

பிறகு அங்கு நின்றும் சீகாழி, புள்ளிருக்கும் வேளூர் (வைத்தீசுவரன் கோயில்) திருவிடைமருதூர், திருவாரூர், நாகபட்டினம், வேதாரணியம் முதலிய சிவத்தலங்களைத் தரிசித்து வழிபட்டுக் கொண்டு, ஈழநாட்டின் கீழ்பால் திகழும் திருக்கோணேச்சுவரம், திருக்கரசைப்பதி முதலியவற்றைத் தரிசித்து வழிபட்டுக் கொண்டு மாதோட்ட நகரில் விளங்கும் திருக்கேதீச்சரம் (கேதுபகவான் முன்னர் பூசித்த) என்ற தலத்து அருகு சேர்ந்தார். ஆலய ஸ்தூலலிங்கமாகிய இராசகோபுரத்தைத் தரிசித்துப் புஷ்பாஞ்சலி புரிந்து வணங்கினார்.

பின்பு கேதீச்சர ஆலயத்தின் தென்பால் திகழ்வதும், தன்னிடம் வந்து மூழ்கினவரின் பாவங்களைப் போக்கிப் புண்ணிய சீலராக்கும் தன்மையுடையதுமான **பாலாவித் தீர்த்தத்தில்** உதய காலத்தில் அகத்தியமுனிவர், வினைகளைப் போக்கும் சூக்த மந்திரத்தை ஓதி முறைப்படி ஸ்நானம் செய்தார். விபூதி, உருத்திராட்சம் தரித்தார்.

சந்தியாதியம், நிஷ்டைகளை முடித்துக்கொண்டு, ஓரிடத்திலிருந்து பஞ்சாட்சரமந்திரத்தை ஆயிரம் உரு செபித்தார். பின்னர், திருக்கேதீச்சரநாதர் ஆலயத்துள் சென்று, இமயவல்லியாகிய அம்மையாருடன் எழுந்தருளிய கேதுநாதனைப் பன்மலர் கொண்டு சிவாகம முறைப்படி பூசித்து வழிபட்டு வணங்கி நின்று சிரசின்மேல் இருகை கூப்பிக் கொண்டு,

*"வேத நாயகனே போற்றி !*
*வேள்வியில் முதலே ! போற்றி !*
*வேதமான மறியாய் ! போற்றி !*
*விநாயக சனக ! போற்றி !*
*காதில் வெண் குழையாய் ! போற்றி !*
*கங்கையஞ் சடையாய் போற்றி !*
*மாதொரு பாகம் வைத்த*
*மாதோட்டக் கனியே ! போற்றி !!."*

என்று பலவாறு துதித்துப் பூசையின் பயனை இறைவனுக்கு அர்ப்பணித்தார். அப்போது திருக்கேதுநாதன் கௌரியுடன் எழுந்தருளி அகத்திய முனிவருக்குக் காட்சியளித்து, "கடல்நீர் முழுவதும் உண்ட முனிவ! நீ வேண்டிய வரம் யாது எனச் சாற்றுக" என்றார். கும்பமுனியும் "எம்பெருமானே! நின் திருவடி மலர்கள் அடியேன் இதயத்துள் என்றும் நீங்காமல் இருக்க வரம் அருள்க; ஒரு பேதமும் இன்றி நின் ஆலயத்துள் வந்து பணிந்து போற்றும் அன்பர்களுக்கு நின்தாள் அடையும் பேறு (மோட்சம்) தந்தருள்க" என்று வேண்டினார். இறைவனும் "அவ்வாறே ஆகட்டும்" என்று கூறியருளிச் சிவலிங்கத்துள் மறைந்தருளினார்.

இறைவன் திருவருள் பெற்ற அகத்தியமுனிவர் ஒரு தரித்திரன் பெருந்தனம் பெற்றாற்போலப் பெரு மகிழ்ச்சியுற்றுச் சின்னாள் மாதோட்டக் கேதீச்சரத்தலத்தில் தங்கி வழிபாடு செய்து கொண்டு பொதிய மலைக்கு எழுந்தருளித் தவம் புரிந்து தமிழை வளர்க்கலானார்.

### *2.2.5* பண்டைய அரசர் வழிபாடும் திருப்பணியும்

அருச்சுனன் தீர்த்தயாத்திரையின் பொருட்டுத் தென்னாட்டுத் தலங்களை வழிபட்ட பின்னர் ஈழநாடு சேர்ந்து கேதுநாதனை வழிபட்டான். மன்னார்த் தீவுக்கு அருகே தென்பாலுள்ள பகுதியை

அரசுபுரிந்த நாக கன்னிகையை அருச்சுனன் சந்தித்து அவளைத் திருமணம் செய்து கொண்டான் என ஒரு வரலாறு கூறும்.

கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலே கலிங்கநாட்டு அரசகுமாரனான விஜயன் அவனது நண்பர்களுடன் இலங்கை வந்ததும், அவன் நண்பர்கள் மாதோட்டத் துறைமுகத்தில் இறங்கிய போது விஜயனது நண்பனும் பிராமணக் குருவுமான **உபத்தீசன்** கேதுநாதனைப் பூசித்தான் என்ற வரலாறும் உண்டு. கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலே கலிங்கதேச ராசகுமாரனான விஜயன் இவ்வாலயத்தைப் புதுப்பித்துத் திருப்பணிகளைச் சிறப்பித்தான் என்று "**யாழ்ப்பாண வைபவமாலை**" நூல் கூறுகிறது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இத்தலத்திற்குப் பலர் திருப்பணிகளைச் செய்வித்துப் பூசை முதலியவற்றிற்குப் பெரும் பொருள் வழங்கினர்.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராசராசசோழன் மகன் இராசேந்திரசோழன் திருப்பணிகள் பலவற்றை நன்கு செய்து கோயிலைச் சுற்றி நான்கு பக்கமும் நன்னீர், உவர்நீர் அகழிகளைப் பாதுகாப்பின் பொருட்டு அமைத்தான்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் (1251 - 1280) இடைப்பகுதியிலே முதலாம் சுந்தரபாண்டியன் பற்பல சிற்பவேலைத் திருப்பணிகளைச் செய்து நித்திய நைமித்திகங்களைச் சிறப்புற நடத்தினான். கி.பி. 14,15-ஆம் நூற்றாண்டுகளிலும் பாண்டிய மன்னர்கள் கோயிலை ஆதரித்தனர்.

இன்னும் பல தேவர்களும், முனிவர்களும், அசுரர்களும், அரசர்களும், பிறரும் திருக்கேதீச்சுவரரைப் பூசித்தும், வழிபட்டும், திருப்பணிகள் பல செய்தும், ஆபரணங்கள், பெரும் பொருட்கள், விளை நிலங்கள் அளித்தும் தொண்டு புரிந்தனர். இவர்கள் எண்ணில் அடங்கார். இவர்கள் போக மோட்சங்களைப் பெற்றுச் சிறப்புடையோர் ஆவர்.

## *3* கல்வெட்டுக்கள்

*1.* கி.மு. *3*-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இலங்கைப் பௌத்தர்கள் மகாதுவட்டாபுரம் என்றதன் திரிபாகிய மாதோட்டநகரை **மகாதீர்த்தம்** என்ற புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதிப் போற்றினார்கள். கதிர்காமக் கல்வெட்டு ஒன்றில் "பௌத்த ஆலயமொன்றின் பரிபாலன விதிகளைக் குறிப்பிட்டுவிட்டு, அவற்றை மீறி நடப்பவன் மாதோட்டத்தில் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவானாக" என்று கூறப்பட்டுள்ளது.

*2.* *4*-ஆவது மகிந்தனின் **அநுராதபுரக் கல்வெட்டு** ஒன்று மேற்படி கதிர்காமக் கல்வெட்டில் கூறியபடி மாதோட்டநகர் ஒரு புண்ணியதலம் என்கிறது.

*3.* இராசேந்திர சோழன் ஆட்சியில் (கி.பி. *11*-ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்) மாதோட்டத் திருக்கேதீச்சரக் கோயிலில் ஆண்டு தோறும் வைகாசி விசாக முன் ஏழுநாள் விழா எடுத்து விசாகத்தன்று பாலாவியில் தீர்த்தவாரி நடைபெற்றதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ சோழமண்டலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு வேளாளர் நாட்டுச் சிறு கூற்ற நல்லூர்க்கிழவன் தாழிகுமரன் ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்து மாதோட்டமான ராசராசபுரத்து எடுப்பித்த ராசராச ஈச்சுரத்து மகாதேவர்க்கு..... ராசராசபுரத்து.... கொடிநாடான அருள்மொழி தேவவள நாட்டுக்கு இயங்கும் பாதைகளால் நிசதம் இரண்டும் பிடிலிகை வாரியும்..... இறையும் இட்டுத் தறிகளால் கூடின முதலும் வட்டத்தால் கூடின முதலும் பாதை இடங்களால் கூடின முதலுங் கொண்டு **வைகாசி விசாகம் ஏழு நாளும் விழா** எடுத்துத் தீர்த்தம் ஆட்டுவிப்பதாகவும்..... பெருங்காலால் பங்குகால் உட்பட வடக்கும் மேல் பாற்கெல்லை ராசராசப் பெருந்தெருவுக்கும், கிழக்கும் வடபாற்கெல்லை கம்மாளச் சேரிக்குத் தெற்கும் இவ்விசைத்த பெருநான் கெல்லைக்குட்பட்ட அகப்பட்ட நிலத்தில் இவ்வூர்க் குடி குன்றன் காமன் இருந்த மாளிகையும் வீடும் தோட்டமும் நீங்கலாகவும் இந்நடு உட்பட இத்தனையும் இத்தேவர்க்கு இறையிலித் தேவதானமாக....." என்பது இராசேந்திரசோழன் கல்வெட்டு ஆகும்.

*4.* இராசேந்திரசோழன் ஆட்சியில் *(கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முற்பகுதி)* திருக்கேதீச்சரத் திருக்கோயிலை மத்தியாகக்கொண்டு நான்கு பக்கமும் பரவியிருந்த நகர வீதிகளில் ஏராளமான கைத்தறி நெசவுச் சாலைகள் இருந்தனவென்றும் அவற்றிற்குரிய வரிகளை வசூல் செய்து அவற்றைக் கொண்டு கோயிலுக்குரிய சொந்தமான பல கட்டிடங்களைக் கட்டி வாடகைக்கு விட்டு அவற்றால் வரும் வாடகைத் தொகையினைக் கொண்டும், கோயிலுக்கு வடக்கும், கிழக்கும் பரவிக்கிடந்த நெல் விளை நிலங்களால் வரும் வருவாயைக் கொண்டும் திருக்கேதீச்சரம் திருக்கோயில் நிர்வாகம் நடைபெற்றதாக ஒரு கல்வெட்டும் புகலுகிறது.

*5.* மாதோட்டத் திருக்கேதீச்சரத் திருக்கோயில் நித்திய பூசையாதிகள் நடைபெறும் பாதுகாப்பிற்கு நீர்ப்பாசன விளை நிலங்கள் நூற்றுக் கணக்கான ஏக்கர் இருந்து வந்ததாகவும், அவற்றின் வருவாயில் கேதீச்சரக் கோயில் செலவு போக மிச்சமாவதில் ஒரு சிறிது கி.பி. *12,13-*ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாடு-திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குற்றாலத் திருக்கோயில் குறும்பலா ஈசர் சந்நிதியில் நித்திய தீபச் செலவிற்குப் பொருள் அனுப்பப் பெற்றதாக ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது.

*6.* சுந்தர பாண்டியன் *I (கி.பி. 1251 – கி.பி. 1280)* ஆட்சி செய்த காலப் பகுதியில் திருக்கேதீச்சரம் அரச ஆதரவைப் பெற்று இறுதிப் பாண்டிய அரசர் காலத்து சிற்ப வேலைப்பாடுகளுக்கு அமைய மீண்டும் புனரமைக்கப்பட்டது என திருக்கோயில் பூமியில் இருந்து எடுக்கப்பட்ட சிதம்பரம் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

## 4 தலப்பெருமை

"தொண்டர் நாடொறும் துதிசெய
அருள்செய்கே தீச்சரம் அதுதானே".

***(சம்பந்தர் தேவாரம்)***

மிகப்பழமையான மாதோட்டத் திருக்கேதீச்சரமான சிவத்தலம் **மகாதீர்த்தம்** என்ற பெயர் உடையது. ஈழக்கயிலாயம் அல்லது தென்கயிலாயம் எனப்படுவது. பாலாவித் தீர்த்தக்கரையோரத்தே திகழ்வது. திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள், கந்தருவர், வித்தியாதரர், கின்னரர், கேதுபகவான், துவட்டா, ஸ்ரீராமர், அகத்தியர், இராவணன், மாலியவான், அருச்சுனன் முதலியோர்களால் பூசித்துப் பேறு பெற்றது. சம்பந்தரதும், சுந்தரரதும் தேவாரப் பதிகங்கள் பெற்றது. பாண்டிய சோழ மன்னர்களின் ஆதரவை முன்பெற்றது.

இம் மாதோட்டக் கேதீச்சரம் காசியைப் போல ஒரு சிறந்த புண்ணியதலமாகும். இதன்கண் மரணமடையும் உயிர்கள் அப்போது கேதீச்சரப் பெருமான் மகிமையால் சிவாலயத்தின் பாகமாகத் தலைவைத்துக் கிடக்குமாம். அன்றியும் இங்கு ஒருவர் இறக்கும் போது திருக்கேதுநாதன் அவரைத் தம் மடி மீது இருத்திக் காசியைப் போல அவரது வலக்காதில் திருவைந்தெழுத்தை ஓதி அவர்க்குச் சிவகதியை அருளுவர் எனத் தலமான்மியம் கூறுகின்றது. "திருவாரூர் பிறக்க முத்தி" என்பதுபோல இத்தலத்துப் பிறந்த மக்கட்கும் முத்திப்பேறு கிட்டுவது திண்ணம்.

பாலாவித் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, நியதிகளை முடித்துக் கேதீச்சரநாதராலய மாட வீதியில் அங்கப்பிரதட்சிணம் செய்வோர் உடல், பிறவிப்பிணி நீங்குவர். இங்குத் தானதருமம் செய்பவர் இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்று விளங்குவது திண்ணம். இத்தல வழிபாடு செய்தவன் அடியைத் தொழுது வணங்குவோர் நாம் எல்லாம் வணங்கும் தெய்வமாவார் என நூல் கூறும்.

"...கனைகடல் கடிகமழ் பொழிலணி மாதோட்டம் கருத நின்றகே தீச்சரங்கைதொழக் கடுவினை அடையாவே" எனவும், "கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக் கெடும் இடர் வினை தானே" எனவும், "கேதீச்சரம் அடைபவர்க்கு அருவினை அடையாவே" எனவும் வருவன சம்பந்தர் தேவாரம்.

## 4.1 திருப்பதிகப் பெருமை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்



பண்டு நால்வருக் கறமுறைத் தருளிப்பல் லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண் செயு மாமலர் பொழின் மஞ்ஞை நடமிடு மாதோட்டத்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மதுதானே.

### சுந்தரமூர்த்தி நாயனார்



மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான்றிருக் கேதீசரத் தானே.



### அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்தில் திருக்கேதீச்சரம்

பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர்
கேதீச்சர மேவினார் கேதா ரத்தார்
கெடில வடவதிகை வீரட் டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவாள னார்
வேதி குடியுளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

**திருநாவுக்கரசு நாயானார்**

### திருவாசகத்தில் திருக்கேதீச்சரம்



"ஏர்தருமேழ் உலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாம்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர்வண் டோதரிக்குப்
பேரருளின் பமளித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரியவா யாற்குயிலே தென்பாண்டி நாடனைக்கூவாய்"

எனக் குயிற்பத்திலும்,

**மாணிக்கவாசக சுவாமிகள்**

"வந்திமை யோர்கள் வணங்கியேத்த மாக்கரு ணைக்கட லாயடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள் பரமன் பெருந்துறை ஆதியந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன் றோங்கு மதிலிலங் கைஅதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும் பரிசறி வாரெம் பிரானாவாரே"

எனத் திருவார்த்தையிலும் கூறியபடி, மண்டோதரியின் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல் திருக்கேதீச்சரத்திற்றான் நிகழ்ந்திருத்தல் வேண்டுமெனவும் அவளுடைய தந்தையாகிய மயன் வாழ்ந்த இடம் மாந்தோட்டமெனவும் சரித்திர ஆராய்ச்சியறிஞர் ஸ்ரீமான் வ. குமாரசாமிப்பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதிலிருந்து திருக்கேதீச்சரத்தின் தொன்மையும் பெருமையும் எத்தகையது என யூகித்துக்கொள்ளலாம்.

## திருத்தொண்டர் புராணத்தில் திருக்கேதீச்சரம்

### சம்பந்தர் சரித்திரம்

அந்நகரி லமர்ந்தங்க ணினிது மேவி
யாழி புடை சூழ்ந் தொலிக்கு மீழந் தன்னின்
மன்னு திருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்திற்
றிருக் கேதீச்சரத் தண்ணல் செய்யபாத
முன்னிமிகப் பணிந்தேத்தி யன்பரோடு
முலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார்.

### சுந்தரர் சரித்திரம்

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்து
சொன்மலர்மா லைகள் சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்.

### 4.2 தொண்டர் பெருமை

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ ?"

*(சேக்கிழார்)*

வீரம் எத்தகையதென்பதை அப்பர் சுவாமிகள் சொல்லக்கேட்டுத் தெளிக:

"வானந் துலங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்(டு)
ஊன மொன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"

*(அப்பர்)*

காரணம்? தொண்டர்களுக்கு யார் எத்தீமைகள் செய்யினும் அவற்றால், அவர்களுக்கு "இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை":

"மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே"

*(அப்பர்)*

ஆகவே, கேதீச்சரத்தின் பெருமையும் தொண்டர் பெருமையே.

"தொண்டர் நாள்தோறுந் துதிசெய அருள்செய்
கேதீச்சர மதுதானே."

*(சம்பந்தர்)*

மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து மாதோட்டம் என்ற இடத்தின் தோற்றம், அதில் அமையப் பெற்ற திருத்தலத்தின் தோற்றம், திருக்கேதீச்சரத் தொன்மை, மகிமை என்பவற்றை அறிந்து உணர முடிகிறது.

எம்பெருமான் சிவபெருமானின் அனாதி முறைமையான பழமையை உணர்ந்து அறிந்த சைவசமய நாயன்மார்கள் தொன்மையான பழமையான திருக்கேதீச்சர மகிமையை உணர்ந்து பதிகங்களைப் பாடினார்கள்.

இப்புனித மண்ணில் வாழ்ந்த மாகாதுவட்டா திருக்கேதீச்சர மகிமை அறிந்து கேதீச்சரநாதனை நினைந்துப் பூசித்து உள்ளொளி பெருக்கி இறை சக்தி பெற்று திருப்பணி செய்து இறை அருள் பெற்றான்.

கேதீச்சரநாதன் மகாதுவட்டாவிடம் என்ன விரும்பினை எனக் கேட்க அவனின் உணர்வுபூர்வமான பதிலான எம்பெருமான் ஏட்டில் என்னையும் அன்பனாக சேர்க்க என்று கூறியது அவனின் பெருமையை எமக்கு உணர்த்துகிறது.

20-ஆம் நுற்றாண்டில் உள்ளொளி பெருக்கி வாழ்ந்த சுவாமிகள், ரிஷிகள் மற்றும் யோகிகள் இறைசக்தியின் அன்பின் வெளிப்பாடாக கவரச்சியும் காந்த சக்தியும் வாய்ந்த நோக்கம் மற்றும் அவர்தம் செயல்கள் மூலம் மனித குலம் உய்வதற்கு ஆற்றிய செய்வதற்கரிதான தொண்டுகளை நாம் அறிவோம்.

இப்புண்ணிய பூமியில் இறைபணி செய்த மாகாதுவட்டாவிற்கு எம்பெருமான் கேதீச்சரநாதன் அருளிய வரம் அவன் மகன் விசுவகன்மன். இந்த விசுவகன்மன் தனது நுன்னறிவினால் *(wisdom)* இரும்பினாலான காந்தக்கோட்டையை கட்டினான் என்பது வியப்பதற்கு இல்லை. இதே காலகட்டத்தில் *(1-ஆம் நூற்றாண்டில்)* பித்தளையிலான கோட்டை ஒன்று வட இந்தியாவில் யாதவ நாடான துவாரகாவில் இருந்ததாக வரலாறு கூறும்.

# பாகம் ஆ – *20*-ஆம் நூற்றாண்டில் திருக்கேதீச்சரம்

இப்பாகம் எமது அறிவுக்கு எட்டிய காலத்தில் சான்றுகளுடன் கூடிய திருத்தலம் பற்றியதாக அமைகிறது.

# 5 மண்மூடிய திருத்தலம் வெளிப்படல்

## 5.1 அஞ்ஞான ஆதிக்கம்

மாதோட்டத் திருக்கேதீச்சரம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்கு இடையே அழிவு கொண்டதிலிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டு இடைவரை சுமார் முன்னூறு ஆண்டுகள் அதன் திருப்பெயரையே இலங்கைச் சைவமக்களும் பிறமக்களும் கேளாது அஞ்ஞானத்தில் வாழ்ந்திருந்த இருள்செறிந்த காலம் என்று சொல்லலாம்.

## 5.2 நாவலர் பெருமான் நற்றொண்டு

யாழ்ப்பாணத்து நல்லூர் **ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான்** அவர்கள் கி.பி. 1872-ஆங்கீரச ஆண்டு ஐப்பசித் திங்களில் இலங்கை மாதோட்டத்தின் ஒரு பகுதியில் "மறைந்து ஒரு மருந்து இருக்கிறது; ஒரு தேன்பொந்து இருக்கிறது; ஒரு திரவியம் இருக்கிறது" என்று திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் எழுந்தருளிய திருக்கேதீச்சரநாதனை இலங்கைச் சைவ மக்களுக்கு முதன் முதல் நினைவூட்டிப் பிரசாரம் செய்து அறிக்கை ஒன்று வெளியிட்டருளினார். இவ்வாறு திருக்கேதீச்சரத் தலத்து நினைவை மக்களுக்கு அறிவித்த பெருமை சைவம் தழைத்தோங்கத் தோன்றிய நாவலர் பெருமான் அவர்களுக்கே உரியதாகும்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்**
**"யாழ்ப்பாணச் சமநிலை" என்னும்**
**பிரசுரத்தில்**
**ஐப்பசி 1872, எழுதி வெளியிட்டது.**

"தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றாகிய திருக்கேதீச்சுரத்துக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார்

திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சுரம் இவ்வடமாகாணத்தில் உள்ள மன்னாருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்தினுள்ளது. இத் திருக்கேதீச்சுரம் அழிந்து காடாகிக்கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்து விடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத் திருப்பணியை நிறை வேற்றுவீர்களாயின், அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வர்."

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதீச்சரத் திருக்கோயில் மண்மூடி மேடிட்டு அழிந்து கிடந்த நிலப்பகுதி சுமார் நாற்பது ஏக்கர் வெற்று நிலத்தை விலைக்கு வாங்கிப் புதுக்கோயில் எடுப்பித்து பழையபடி நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற நாவலர் பெருமான் அவர்கள் பெருமுயற்சி எடுத்தார்கள். அச்சமயம் கிறீஸ்தவர்களின் எதிர்ப்பினாலும், அக்காலத்திலிருந்த சைவ நன்மக்களின் உணர்ச்சிக் குறைவினாலும் தக்க உதவி கிடைக்காததினாலும் நாவலர் பெருமான் அவர்கள் மிக வருந்தினார்கள். பின்னர், சில ஆண்டுகளுக்கெல்லாம் நாவலர் பெருமான் அவர்கள் திருக்கேதீச்சரநாதன் திருக்கோயில் நினைவாகவே இருந்து இறைவன் திருவடிநீழலை அடைந்தருளினார்கள்.

### 5.3 நாவலர் பெருமான் நினைவு வெற்றிபெறல்

மாதோட்டத் திருக்கேதீச்சரநாதர் ஆலயம் கடலால், பகைவரால், அழிந்து மண்மாரி பெய்து மண்மூடிய வெற்றிடம் சுமார் 40 ஏக்கர் நிலத்தை நாவலர் பெருமானின் அறிக்கை வெளிவந்த பின் 21-வருடங்கள் கழித்து, கி.பி. 1893-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ஆம் திகதி இலங்கை வடமாகாண அரசபிரதிநிதி கௌரவ உவில்லியம் துவைனம் (Sir William Twynam) அவர்களின் முன்னிலையில் யாழ்ப்பாணம் அரசாங்கக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பதாக அரசினர் விளம்பரம் செய்தனர்.

அச்சமயம் குறித்த காலத்தில் இலங்கையின் பல பாகத்துள்ள சைவர்கள் பலரும், கத்தோலிக்கக் குருமார்களும், பிறரும் நிலத்தை ஏலம் எடுக்க யாழ்ப்பாணக் கச்சேரியில் வந்து கூடி இருந்தனர். கௌரவ உவில்லியம்

துவைனம் அவர்கள் மேற்படி 40 ஏக்கர் நிலத்தை ஏலம்விட, கத்தோலிக்கக் குருமார்கள் 3050 ரூபாய்வரை ஏலம் கேட்டனர். உடனே சைவமக்கள் அனைவரும் ஒன்றுகூடி என்ன விலை வந்தாலும் அந்நிலத்தை விலைக்கு வாங்கியே தீருவது என்ற உறுதி பூண்டனர். அதனை அறிந்த திருவாளர் ராம. அரு. பழனியப்பச் செட்டியார் அவர்கள் இலங்கைச் சைவமக்கள் சார்பாகத் தம்பேரில் 3100 ரூபாய்க்கு விஜய ஆண்டு கார்த்திகை மாதம் 29-ஆம் திகதி (13-12-1893) புதன்கிழமை அவிட்டநன்னாளில் ஏலம் எடுத்தார்கள். இத்தொகையில் பெரும் பகுதியை யாழ்ப்பாணத்துச் சைவநன்மக்கள் மேற்படி செட்டியார் அவர்களிடம் கொடுத்து உதவினர் என்பர்.

யாழ்ப்பாண அரச பிரதிநிதி அவர்கள் தமது மாகாண நிர்வாக ஆண்டறிக்கையில் திருக்கேதீச்சரத்தின் பண்டைய சிறப்புக்களைப் பற்றியும், நிலம் ஏலம் விடப்பட்டதைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் கனவு அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து 14-ஆண்டுகளுக்குப் பின் நனவாயிற்று.

### 5.4 திருக்கேதீச்சரம் புனருத்தாரண வேலை

தரைமட்டமாக்கப்பட்ட திருக்கோயில் இருந்த இடம் ஆனி 1894-ஆம் ஆண்டு சோழ காலத்து கிணற்றின் உதவி உடன் கண்டு பிடிக்கப்பட்டது. சைவத் தொண்டுகளில் முன்னணியில் நின்றுழைத்தவரும், சைவசீலருமான யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை திருவாளர் சி. த. மு. பசுபதிச்செட்டியார் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சைவ, சிவாச்சாரியார்களையும், கல் தச்சர், சிற்பிகளையும், கொத்து வேலை செய்யும் மேஸ்திரிகளையும், மண்வெட்டு வேலையாட்களையும், சிறுகூலி ஆட்களையும் அழைத்துக் கொண்டு போய்த் திருக்கேதீச்சரத்தில் புராதன கோயில் இருந்த திட்டமாக அறிந்த தரைமட்டமான கோயிலிருந்த இடத்தில் வாஸ்துசாந்தி, கிராமசாந்தி செய்து 1894-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலிலே காடு வெட்டி மேற்படி நிலத்தைச் சோதனை செய்து வரும் போது, ஜய ஆண்டு ஆனித் திங்கள் 1-ஆம் திகதி (13-6-1894) புதன்கிழமையன்று பழைய கோயிலின் மூலப்பகுதி (கர்ப்பக்கிருகம்), அர்த்தமண்டபம், துவசத்தம்பபீடம், பலிபீடம் முதலியன கண்டு பிடிக்கப்பட்டன. போர்த்துக்கீசியர் காலத்திற்கு முன் வழிபாட்டில் இருந்த சிவலிங்கம், நந்தி மற்றும் பிள்ளையார் சிற்பச் சிலைகள் பழைய திருக்கோயில் அடித்தள

இடிபாடுகள் அருகில் மூடுண்டு கிடக்க காணப்பட்டன. ஆனால் அம்மன் சிலை ஒன்றும் கிடைக்கவில்லை. சிவலிங்கம் பூமியிலிருத்து எடுக்கும்போது, வேலையாட்களுடைய கவனக்குறைவால் லிங்கம் ஓரிடத்தில் சிறிது பழுது அடைய நேர்ந்தது என்பர்.

பின்னர் இலங்கைச் சைவ நன்மக்கள் பேருதவியினால் திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில் திருப்பணி புரிவதற்கு 22,000 ரூபாய்க்கு மேல் சேகரித்து அவற்றைக் கொண்டு செட்டியார் அவர்கள் முன்னர் சுவாமிகோயில், அம்மன்கோயில், மடைப்பள்ளி முதலியன கட்டினார். ஈழத்துச் சைவப் பெருமக்களின் விருப்பத்திற்கு அமைய காசி (வாரணாசி)யில் இருந்து மகிமை பொருந்திய சிவசாந்நித்தியம் வாய்ந்த சிவலிங்கம் ஒன்று கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது என்ற சான்று இராமேச்சுவரம் திருக்கோயில் பதிவுகளில் உள்ளது.

அதன்பின் தக்க சிற்பியால் கௌரியம்மையார் திருவுருவம் ஒன்று கற்சிலையில் அமைக்கச் செய்தார். முன்னர் மூலஸ்தானம் இருந்த இடத்திலேயே காசி லிங்கத்தையும், இடப்பக்கம் தெற்கு சந்நிதியாக அம்மையாரையும், சுவாமி சந்நிதி எதிரில் மேற்குமுகமாக முன்னிருந்த இடத்திலே பூமியில் இருந்து எடுக்கப் பெற்ற நந்தியையும், பூமியிலிருந்து கிடைத்த சிவலிங்கம் (மகாலிங்கம்), விநாயகர் இவற்றைப் பிரகாரத்தின் மேல்பாலும் அமைத்துச் சோபகிருது ஆண்டு ஆணித் திங்கள் 14-ஆம் நாள் (28-6-1903) ஞாயிற்றுக் கிழமை வளர்பிறைச் சதுர்த்தசி நன்னாளில் மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தார்.

பின்னர் சிவாகம முறைப்படி சிவாச்சாரியர்களைக் கொண்டு நித்தியபூசை முதலியன நடைபெற ஆவன செய்தார். தொடர்ந்து சில திருப்பணிகளைச் செய்து முடித்து கி.பி. 1910-இல் ஒரு கும்பாபிஷேகமும் செய்து முடித்தார். அதன்பிறகு திருக்கேதீச்சரம் மிகப் பிரபலமாக விளங்கியது.

முதலாம் உலக யுத்தத்தின் பின் மன்னாரில் தொழில் புரிந்த யாழ் சைவ அரசாங்க சேவையாளர்கள் கேதீச்சரநாதர், அம்பாள் கோயில்களை மேன்மையாக அமைத்தனர்.

கீழே உள்ள படத்தில் *1935*-ஆம் ஆண்டளவிலான திருக்கேதீச்சரக் கோயிலின் ஆதிமூல விமானத்தைக் காண்க.



*1948*-ஆம் ஆண்டளவில் திருக்கோயில் திருப்பணி எதுவுமின்றி மீண்டும் சிதைந்து புனரமைக்க வேண்டிய நிலைக்குள்ளாகியது. அதனைக் கண்ட சைவப் பிரமுகர்கள் பலர் கொழும்பில் கூடி *1948*-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் *19*-ஆம் திகதி ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் என்று முன்னர் உருவாக்கப்பட்ட சமய அமைப்பு ஒன்றின் அனுசரணையுடன் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண சபையை நிறுவினர். சபையின் அங்கத்தவர்கள் மற்றும் மதுரை திருஞானசம்பந்த

ஆதீன கர்த்தராயிருந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் கி.பி. 1952-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மகாகும்பாபிஷேகம் ஒன்று செய்வித்தார்கள்.

## 6 20-ஆம் நூற்றாண்டு திருக்கேதீச்சரம்

### 6.1 ஊரின் பெருமை

நீர்வளம், நிலவளம், செல்வவளம் நிறைந்தோங்கிய ஈழநாட்டின்கண் வடபகுதியில் பாலாவியின் வடபால் தேவாரப் பாடல்கள் பெற்ற முற்காலத்தில் பலவளங்களுடன் திகழ்ந்த இரண்டாவது சிவத்தலமான "கருதநின்ற" மாதோட்டக் கேதீச்சரம், திருக்கேதீச்சரம் என விளங்குகிறது.

"வாழையம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்ட...... கேதீச்சரம்" எனவும், "மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்.....கேதீச்சரம்" எனவும் வருவன **சம்பந்தர் தேவாரம்.** "மாவின் கனிதூங்கும் பொழில் மாதோட்ட நன்னகர்.....திருக்கேதீச்சரம்", எனவும், "வரிய சிறை வண்டுயாழ் செயும் மாதோட்ட நன்னகருள்..... திருக்கேதீச்சரம்" எனவும் வருவன **சுந்தரர் தேவாரம்.**

திருக்கேதீச்சரம் என்பதில் திரு+கேது+ஈச்சரம் என்ற மூன்று சொற்கள் உள்ளன. திரு- தெய்வத்தன்மை, அழகு, செல்வம்; கேது- நவக்கிரகங்களுள் ஒன்றான கேது என்ற பாம்பு பூசித்துப் பேறுபெற்ற; ஈச்சரம்- திருக்கோயில் என்பது பொருள்.

திருக்கேதீச்சரம் என்ற சிவாலயத்தின் பெயர் தற்போது ஊராகிய மாதோட்டத்திற்கும் வழங்கி வருகிறது.

### 6.2 திருக்கோயிலைச் சுற்றியுள்ள சூழல்

1990-ஆம் ஆண்டு போர்ச் சூழலினால் திருக்கோயில் மூடுவதற்கு முன் இருந்த திருக்கோயிலும் அதன் சுற்றுப்புறமும் இங்கு விபரிக்கப்பட்டுள்ளது.

பாலாவியின் வடபால், ஊருக்கு இடையில் திருக்கேதுநாதனின் திருக்கோயில், இராசகோபுரத்துடன் கிழக்கு நோக்கிய சந்நிதியாக விளங்குகிறது. திருக்கோயிலைச் சுற்றிய நான்கு திருவீதிகளும்

மூன்றாம் பிரகாரம் எனப்படும். இந்நான்கு வீதிகளிலுமுள்ள மடங்களுக்குப் பின்புறத்தே நான்காம் பிரகாரமாகத் தேரோடும் திருவீதிகள் அமையும்.

திருக்கோயிலுக்கு வடபால் கோயில் நந்தவனம், பிராமணர்களின் வீடுகள், கோயில் சிப்பந்திகளின், தனிப்பட்டவர்களின் வீடுகள் முதலியனவும், கீழ்பால் தேவஸ்தானக் காரியாலயமும், கோயில் அபிஷேக அர்ச்சனைப் பொருட்கள் விற்கும் தேவஸ்தானத்து நிலையம், நூல் நிலையம், நீர்விநியோக நிலையம், தபாற்கந்தோர், மின்வெளிச்ச நிலையம், தனியார் தேனிர்-உண்டி-பலசரக்குக் கடைகள், சற்றுத் தூரத்தே கௌரியம்பாள் பாடசாலை, மருத்துவ நிலையம், கிராமிய வங்கி, கூட்டுறவு நிலையம் போன்றவையும், தனிப்பட்ட விவசாயிகளின் இல்லங்களும் தென்புறத்தே சிறிது தொலைவில் புதை பொருளாராய்ச்சி நிலையமும் இருந்தன. மேற்கே கடலுக்கு முன்பாக மனோரம்மியமான சிறுவனம் இருந்தது.

கீழ வீதியில் திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், நாட்டுக்கோட்டை நகரத்தார் மடம், அம்மா மடம், பசுமடம், பூநகரி மடம் முதலியனவும், தெற்கு வீதியில் சபாரத்தினசாமி மடம், சிவராத்திரி மடம், நெசவுசாலை, சிற்பிகள் தங்குமிடம் முதலியனவும், மேல வீதியில் திருவாசக மடம், திருப்பதி மடம், கௌரீசர் மடம், சிவானந்த குருகுல பாடசாலை (வேதாகம பாடசாலை) முதலியனவும், வடக்கு வீதியில் நாவலர் பெருமான் மடம், விசுவகன்ம மடம், திருக்குறிப்புத் தொண்டர் மடம் முதலியனவும் இருந்து திருக்கேதீச்சரத்தைச் சிறப்பித்தன.

பசுமடம் திருக்கோயில் நித்திய பூசைகளுக்குப் பால் அளித்து வந்தது. சிவராத்திரி மடத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மேற்பார்வையில் சிவராத்திரியொத்த காலங்களில் அன்னதானமும் நாவலர் பெருமான் மடத்தில் யாத்திரையாக வரும் சைவ மக்களுக்கு ஒருநாள் உறையுளும் உணவும் வழங்கப்பட்டன.

### *6.3* திருவாசக மடம்

இஃது ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் சார்பில் கி.பி. *1952*-இல் தோன்றியது. அன்னதான மடமும் இணைந்திருந்தது. இங்கு சுமார் *1*-அடி உயரத்தில் ஸ்ரீ நடராசர், சிவகாமி அம்மையார், மாணிக்கவாசகர் எழுந்தருளியுள்ள சிறு கோயில் இருந்தது. காலை, மாலை முறையாகப்

பூசைகள் நடைபெற்று வந்தன. மார்கழித் திருவாதிரை முன் பத்து நாட்களில் திருவாசகவிழா, ஒரு ஆண்டில் ஆறுமுறை நடைபெற்றது. நடராசர் அபிஷேக விழா, ஆனி மக நாளில் மாணிக்கவாசகர் நினைவு விழா, மாசி சிவராத்திரி விழா, சிவதீட்சை நிகழ்ச்சிகள் முதலியன சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தன. இங்கு யாத்திரைவாசிகள், சிவனடியார்கள் வந்து தங்கித் திருக்கேதீச்சரர் தரிசனம் செய்து போக உறைவிடமும் உணவு வசதியும் செய்து ஆதரித்தார்கள். இடையிடையே சைவ விழாக்களும் மகேசுவர பூசையும் விசேட காலங்களில் நிகழ்ந்தன.

இத்திருவாசக மடத்தில், சகல வசதிகளையும் அமைத்துத் தம் உயிர்போல் போற்றி வளர்த்து வந்த புண்ணியசீலர், ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் தனக்கென ஒன்றும் கருதாத் தண்ணளியாளர் சைவ ஒழுக்கசீலர் திருவாசகப் பித்தர் நாவலர் பெருமான் வழியினைப் பின்பற்றிய மெய்த்தொண்டர் காவியாடை இல்லாப் பெருந்துறவி, ஸ்ரீ. சி. சரவணமுத்து சுவாமிகளாவர்.

### 6.4 சிவானந்த குருகுலம்

இது கி.பி. 1960-இல் தோன்றியது. இங்கு பிராமணச் சிறுவர்களுக்கும், ஆதிசைவச் சிறுவர்களுக்கும் உறையுள், உணவுவசதி முதலியன அளித்து தக்க ஆசிரியர்களைக் கொண்டு வேத சிவாகமங்கள் கற்பிக்கப் பெற்று வந்தன. இக்குருகுல வேதாகம பாடசாலையை இலங்கை இந்துமாமன்றம் சபையினர் நடத்தினர். இப்பாடசாலையை யாழ்ப்பாணத்தில் மேலும் அபிவிருத்தியான நிலையில் நடத்த இச்சபையார் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இங்குள்ள ஒவ்வொரு மடங்களிலும் தக்கார் இருந்து பரிபாலித்ததுடன் விசேட காலங்களிலும் உற்சவகாலங்களிலும் தரிசன நிமித்தமாகவும் யாத்திரையாகவும் வரும் அன்பர்களுக்கு உறைவிடம் முதலியன தந்து ஆதரித்தனர்.

### 6.5 பொதுவசதிகள்

சிறுவர்கள், சிறுமிகள் கல்வி பயில்வதற்குத் திருக்கேதீச்சரர் பாடசாலையும் கௌரியம்பாள் பாடசாலையும் இருந்தன. கைத்தொழில் அபிவிருத்தியை முன்னிட்டு நெசவுசாலை இயங்கியது. பேருந்து நிலையம் கோயிலுக்கு அருகாமையில் இருந்ததுடன் திருக்கோயிலுக்குச் சற்றுக் கிழக்கேயுள்ள மாளிகைத் திடலில் இருந்து

குழாய்மூலம் அரசாங்கத்தாரின் ஏற்பாடு மூலம் தண்ணீர் வசதி கிடைத்தது. தேவஸ்தான சார்பில் மின்வெளிச்ச நிலையம் ஒளி வசதி தந்தது. பாலாவியில் பிதிர்க்கடன் செய்ய ஏற்பாடுகள் இருந்தன.

திருக்கோயிலுக்குக் கிழக்கே சுமார் இரண்டு மைல் சூழலில் மாளிகைத்திடல், சேத்துக்குளம், வேட்டையாமுறிப்பு, பாப்பாமோட்டை ஆகிய கிராமங்கள் இருந்தன. மாளிகைத்திடலில் வர்த்தகர்களும் பெருந்தனவந்தர்களும் முன்னர் வாழ்ந்தனர். அச்சாயலை ஓரளவு காணக்கூடியதாக இருந்தது. சேத்துக்குளம் வயல்கள் நிரம்பின. வேட்டையாமுறிப்பில் ஒரு இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவிலிருந்தது. ஆலமரங்களும் குளங்களும் சூழ்ந்த தெய்வீகச் சூழலில் அது இருந்தது. நவராத்திரி விஜய தசமித் தினத்தன்று திருக்கேதீச்சரநாதர் கௌரி சமேதராய் அங்கு சென்று அம்புபோடும் வழக்கம் இருந்தது. வேட்டைக்குச் சென்று தரித்த இடமாதலால் அவ்விடம் வேட்டையாமுறிப்பு எனப் பெயர் பெற்றது. பாப்பாமோட்டையில் முன்னர் ஏராளமான பார்ப்பனர்கள் வாழ்ந்தார்களெனவும் அதனால் அது பார்ப்பார்மேடு என அழைக்கப்பட்டு, நாளடைவில் பாப்பாமோட்டை எனத் திரிந்து விட்டதாகவும் கூறுவர்.

பாலாவிக்கு மறுபுறத்திலுள்ள அடம்பன், வட்டக்கண்டல், நெடுங்கண்டல், சிறுநாவற்குளம் முதலான கிராமங்கள் நெல்வயல்கள் நிறைந்த கிராமங்களாக இருந்தன. கோயிலுக்கு மேற்கிலும் வடக்கிலும் சற்றுத் தூரத்தில் கடல் உண்டு. இவைதவிரப் புதிய சிறு குடியேற்றத் திட்டங்களில் உபஉணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டன. கமத்தொழில் சேவை நிலையமும் இருந்தது. அடம்பனில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், மகாவித்தியாலயம், அரசினர் ஆஸ்பத்திரி முதலியன இருந்தன.

திருக்கேதீச்சரமும் அதனைச் சூழ்ந்த கிராமங்களும் மன்னார் அரசாங்க அதிபர் பிரிவிலும் மாந்தை மேற்கு கிராம சபைப் பிரிவிலும் உள்ளடக்கப்பட்டு இருந்தன.

## 7 20-ஆம் நூற்றாண்டு திருப்பணிகள்

### 7.1 சைவமக்கள் தொண்டு

கி.பி. 16-ஆம் நூற்றாண்டினிறுதியிலிருந்து பகைவராலும், நீராலும், மண்மாரியாலும் அழியுண்டு கோயில் நினைவே எவர்க்கும் இல்லாதிருந்தது. கி.பி. 1872-இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இத்தலத்தைப் பற்றி நினைவுறுத்தியதன் பயனாக, முன்னர் மண்மூடிய கோயிலிருந்த 40-ஏக்கர் வெற்றிடம் அரசாங்க ஏலம் விடப்பட்டதன் மூலமாக 13-12-1893-இல் பெறப்பட்டது.

பின்பு, பழைய சிவாலயம் இருந்த இடத்தில் கோயில் எழுப்பிக் கிரியாலிங்கம், கௌரியம்மை, நந்தி, பலிபீடம் முதலியன அமைத்து 28-6-1903-இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. நித்திய பூசைகள் நடைபெறச்செய்து மேலும் திருப்பணிகளைச் செய்து கி.பி. 1910-இல் இன்னொரு கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

### 7.2 திருப்பணிச் சபையார் தொண்டு

பின்னர், காலப்போக்கில் கேதீச்சரத்தில் நித்தியபூசைகள் மட்டும் நடைபெற்றுக்கொண்டு திருப்பணிவேலைகள் சிறிது சிறிதாகக் குறைந்தன. இதனை உணர்ந்த கொழும்பிலுள்ள சைவப்பெருமக்கள் சார்பில் 1944-ஆம் ஆண்டிலே கொழும்பு பொரளையிலுள்ள திரு. கா. நாகலிங்கம் என்பவரின் இல்லத்தில் திரு. வ. க. செல்லப்பா, ஸ்ரீ. சி. சரவணமுத்து அடிகளார், திரு. நீ. ஆறுமுகம் மூவரும் சேர்ந்து **ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்** என்று முதற்கண் ஆரம்பித்தார்கள். அத்திருக்கூட்டத்தின் முயற்சியால் 1948-ஆம் ஆண்டு திருக்கேதீச்சரத்தில் சைவ மகாநாடொன்று நிகழ்ந்தது. அம்மகாநாடு இலங்கைச் சைவமக்கள் மனதிலே பெருவிழிப்பை ஏற்படுத்தியது. அவ்விழிப்பை அடித்தளமாகக் கொண்டு 19-10-1948-இல் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண சபை தோன்றியது. இச்சபையார் பல திருப்பணிகளைச் செய்து 1952-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கும்பாபிஷேகம் செய்தனர். அதில், மதுரை ஆதீனமும் பெரும் பங்காற்றியது. திருப்பணிச் சபையார் திருப்பணிகளை வேகமாகத் தொடர்ந்தனர்.

பின்பு திருப்பணிச் சபையார் திருக்கேதீச்சர ஆலயச் சுற்றுப் பிரகாரத்தில் பூமியில் இருந்து எடுத்த மகாலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர்

நடராசர், சண்டேசுவரர் முதலிய மூர்த்திகளைப் பரிவார பிரதிஷ்டை செய்து 31-10-1960-இல் கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

மேலும் பற்பல திருப்பணிகளுடன் ஐந்து நிலையுடைய இராசகோபுரம், சுற்றுத் திருமதில்கள் முடித்துக் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் முதலியவற்றின் வேலைகளைக் கருங்கற்களால் செய்து திருப்பணி வேலைகளை மேற்கொண்டனர். இலண்டன் நகரில் வார்க்கப்பட்ட 4-அடி குறுக்களவு உடைய இசைமான பண் 'E' அலகுக்கு மிக நுணுக்கமாக ஸ்ருதி செய்யப்பட்ட 1100-கிலோ நிறையுடைய மிகப்பெரிய வெண்கலமணியை அதற்கேற்ற உறுதியான மணிக்கூண்டொன்றில் இராசகோபுரத்தின் இடப்பக்கத்தே தரைமட்டத்திலிருந்து 75-அடி உயரத்தில் அமைத்தனர். அம்மணியின் கம்பீரமான தெளிவான ஓங்காரநாதம் பல மைல்களுக்குக் கேட்கவல்லது.

திருப்பணிச்சபையார், திருக்கேதீச்சரத் திருப்பணிகளை முடித்து மாபெரும் மகாசங்காபிஷேகம் (பெருஞ்சாந்திக் குடமுழுக்கு) கேதீச்சரநாதன் துணை கொண்டு நிறைவேற்றினர்.


காலஞ்சென்ற **சைவமணி கௌரவ கந்தையா வைத்தியநாதன்** அவர்கள் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரணத்திற்குச் செய்த சிவதொண்டுகள் அளப்பரியன ஆகும். இதற்குச் சான்றாக கௌரவ கந்தையா வைத்தியநாதன் அவர்கள் 1960-ஆம் ஆண்டில் வெளியிட்ட "திருக்கேதீச்சர ஆதாரத்தாள்கள்" எனும் நூலில் இருந்து திருப்பணி தொடர்பான படங்களும் குறிப்புகளும் கீழே இணைக்கப்பட்டுள்ளன.




*"31 ஐப்பசி 1960 திங்கள் நன்நாளில் காலை 10 மணிக்கு, ஆதியாய் இருந்து பின் சில காலம் படைஎடுப்புகளின் நிமித்தம் நிலத்துக்கீழ் மறைக்கப்பட்ட, ஆதி சிவலிங்க மூர்த்தி மேற்குப் பிராகாரத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் உரிய விழா எடுத்து சைவ ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்ய அருள் பாளித்தது."*

**– கௌரவ கந்தையா வைத்தியநாதன்**


## ராஜகோபுரம் – முன், பக்கத் தோற்றம்



**<u>கோயிலின் பக்கத் தோற்றம்</u>**



<u>கோயிலின் அடிப்படைப் படம்</u>



குறிப்பு:- இரண்டாவது பிரகார அமைப்புகள் இதில் காட்டப்படவில்லை.

## கோயிலின் அமைப்புகள் - குறியீடும் விளக்கமும்

1 கர்ப்பக்கிருகம் - திருக்கேதீச்சரநாதர்
2 அர்த்த மண்டபம்
3 மகா மண்டபம்
4 சண்டிகேஸ்வரர் கோயில்
5 அம்பாள் கோயில்
6 நிருத்த மண்டபம்
7 நடராஜர் கோயில்
8 பள்ளியறை
9 நந்தி, பலிபீடம், துவாரஸ்தம்பம்
10 களஞ்சியம்
11 பாகசாலை
12 பதிகம் பாடிய சம்பந்தமூர்த்தி நாயனார்
13 63 நாயன்மார்
14 அம்பாள் சன்னதி (சந்நிதி) தெற்கு வாயில்
15 சமய ஆச்சாரியார்கள்
16 பதிகம் பாடிய சுந்தரமூர்த்தி நாயனார்
17 விநாயகர் கோயில்
18 சோமஸ்கந்தர் கோயில்
19 மகாவிஷ்ணு கோயில்
20 மகாலிங்கம்
21 பஞ்சலிங்க கோயில்
22 மகாலக்ஷ்மி கோயில்
23 ஸ்ரீ சுப்ரமணியர் கோயில்
24 அலங்கார மண்டப குறடு
25 நகை அணி வன்காப்பறை
26 யாக சாலை
27 வைரவர் கோயில்
28 சூரியன் குறடு
29 மூன்று அடுக்கு ராஜகோபுரம்
30 சந்திரன்

## 8 21-ஆம் நூற்றாண்டில் திருக்கேதீச்சரம்

நாட்டில் நிலவிய போர்ச் சூழலால் மீண்டும் பின்னடைந்த திருத்தலம் 1990-ஆம் ஆண்டு மூடப்பட்டு அதன் பின் 2003-ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று பூஜைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

1990-ஆம் ஆண்டின்பின் 20-வருடங்கள் போர்ச் சூழலால் திருக்கோயிலும் திருக்கேதீச்சரப் பிரதேசமும் பாரிய மாற்றங்களையும் பின்னடைவுகளையும் சந்தித்தது. இயற்கை அழிவினாலும் பின் வெளிநாட்டுப் படைஎடுப்புகளினாலும் அதன்பின் உள்நாட்டுப் போரினாலும் அழிவுகளையும் மாற்றங்கள் பலவற்றையும் சந்தித்த திருக்கேதீச்சரமும் அதன் சுற்றுப்புறமும் எம்பெருமான் அருளால் அழிவில்லாத் திருத்தலமாக புண்ணிய பூமியாக மீண்டும் 20-ஆம் நூற்றாண்டு திருக்கெதீச்சரத்தைப் பார்க்கிலும் சிறப்பாக ஆதி திருக்கேதீச்சரமாகக் கம்பீரமாக மாற்றம் அடைந்து வருகிறது.

ஆலயத்தை நிர்வகிக்கும் ஆலய திருப்பணிச்சபை, நம்பிக்கை பொறுப்பாளர் சபை என்பவற்றின் வழிகாட்டலுக்கு அமைய இந்துசமய அமைச்சு போன்ற அமைப்புகளின் அனுசரனையோடு ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

ஆலய நிர்வாக சபையின் முயற்சியால் பல நூற்றாண்டுகால உண்மையாக விளங்கிய "கருதநின்ற" ஆதி கேதீச்சரத்தை மீண்டும் நிலை பெறச் செய்ய மூன்று கட்டங்களாக ஆலய புனருத்தாபண மற்றும் மீளமைத்தல் செயற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

இதன் முதற் கட்டமாக இந்திய அரசின் நன்கொடை உதவியுடன் 2012-ஆம் ஆண்டு மகா மண்டபம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவடைந்துள்ளன.


திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை இரண்டாம் கட்ட திருப்பணிகளை 2018-ஆம் ஆண்டு ஆரம்பிக்க செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளது. இரண்டாம் கட்ட திருப்பணியாக சிவன், அம்பாள் ஆலயங்களின் விமானங்களும் சூழவுள்ள 24-பரிவார ஆலயங்களின்

விமானங்களும் முதற் கட்டமாக அமைக்கப்பட்ட மகா மண்டபத்திற்கு அமைய கருங்கல்லினால் செதுக்கப்படவுள்ளன.

திருக்கோபுரங்களான ஆலயத்தின் முன் ராஜகோபுரமும் அம்மன் சன்னிதானத்தின் பின் கோபுரமும் மூன்றாம் கட்டமாக மீள அமைக்கப்பட உள்ளன.

ஆக, புராதன மாதோட்ட கேதீச்சரத் திருத்தலம் 20-ஆம் நூற்றாண்டில் திருக்கேதீச்சரமாகத் திகழ்ந்து 21-ஆம் நூற்றாண்டு திருக்கேதீச்சரமாக துரிதமாக மாற்றம் அடைந்து வருகின்றது.

**21-ஆம் நூற்றாண்டு திருக்கேதீச்சரத்தின் முகப்புத் தோற்றம்**



திருப்பணிச் சபையில் உள்ளோர் அவர்தம் திருப்பணி வளர்க! ஓங்குக! அவர்களும் அவர்களது கூட்டத்தைச் சார்ந்த நற்றொண்டர்களும் நீடூழி வாழ்க! அவர்களின் பதிபுண்ணியச் செயல்கள் என்றும் ஓங்கி வளர்க! பெருகுக!

# பாகம் இ – திருக்கேதீச்சர சிவாலய வழிபாடு

## இ - திருக்கேதீச்சர சிவாலய வழிபாடு

## *9* சிவாலய வழிபாடு

### *9.1* திருக்கோயில்

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பொருள், முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருள், எங்கும் நிறைந்த செம்பொருள், தம்மை மெய்யன்புடன் வழிபடும் தேவர்களுக்கும் மானுடர்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும் அருள்புரியும் பொருட்டுத் தமது அருவ (நிட்கள) நிலையிலிருந்து இறங்கி, **அருவுருவத் திருமேனி** அல்லது **உருவத் திருமேனி** கொண்டு எழுந்தருளிய இடமே **ஆலயம்** அல்லது **திருக்கோயில்** எனப்படும்.

*[ஆ+லயம் = ஆலயம். ஆ- ஆன்மா. லயம்- கடவுளை அடையுமிடம். திரு +கோ+இல் = திருக்கோயில், கோ- கடவுள். இல்- எழுந்தருளிய இடம். திரு- தெய்வத்தன்மை; அழகுமாம்.]*

பழத்தின் இரசம் போலவும், விறகில் தீ போலவும், எள்ளில் எண்ணெய் போலவும், பாலில் நெய் போலவும் எங்கும் நிறைந்து மறைந்து நின்ற பரமசிவம், ஆலயத்தில் தயிரில் நெய்போல நின்று, ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றார். ஆகவே, மக்களாதியோர் எளிதில் இறைவன் திருவருளைப் பெறும் இடமாகத் திகழ்வது திருக்கோயிலே ஆகும். இங்கு இறைவனை வணங்கி வழிபடலே சிறந்த பயனாகும். **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்பது ஔவையார் அமுத மொழி.

### *9.2* அருவுருவத் திருமேனி

அருவுருவத் திருமேனி என்பது சிவலிங்க வடிவம். சிவலிங்கத்தில் கண்ணால் காணவல்லது உருவம். இன்னது என்று கூறமுடியாமலும் உறுப்புக்கள் இல்லாமலும் இருப்பது அருவம். ஆகவே, உருவம் உண்டு; உறுப்புக்கள் இல்லை. இந்த இரண்டு தன்மைகளும் பெற்றதால் சிவலிங்கவடிவம் அருவுருவத் திருமேனி எனப்படும்.

"காணாத அருவினுக்கும்
உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாம் சிவலிங்கம்"
***(பெரியபுராணம் – சாக்கியர்)***

"அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு ..."
***(கந்தபுராணம் - திருவவதாரம்)***

சிவலிங்கம் என்பது சிவமே. சிவத்தின் பெயராகிய சிவலிங்கம் என்ற சொல் உபசாரம். இது கல், மணி, படிகம், உலோகம், மரம், மண் முதலியவற்றால் அமைந்துள்ள சிவவடிவம். சிவலிங்கத்தில் **சிவநாபம்** (உருத்திரமாகிய குழவி) ஞானசத்தி. கோமுகி பொருந்திய ஆவுடையாளாகிய **பீடிகை** (மேல்பீடம்) கிரியாசத்தி. வட்டமாகிய **கீழ்ப்பீடம்** இச்சாசத்தி. சிவலிங்கத்தின் குழவிபாகம் **உருத்திரன்.** ஆவுடையாள் பாகம் **விஷ்ணு.** கீழ்வட்டமான பாகம் **பிரமன்.** ஆகவே இலிங்கம் **திரிமூர்த்தி** வடிவம்.

சிவலிங்கப்பெருமான் அருவநிலையில் நின்று அருவ சிவத்துடன் தொடர்புகொண்டு படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்தற்கும், உருவநிலையில் இருந்து உலக மக்கட்கு அருள் புரிவதற்குமாக அருவுருவ வடிவம் கொண்டுள்ளார் என்பதாம்.

*[சங்கார காலத்திலே சிவலிங்கத்தில் சகல பிரபஞ்சமும் ஒடுங்கிய பின், சிருஷ்டி காலத்திலே அதனின்றும் தோன்றுவது. ஆகவே, படைப்பு முதலியவற்றால் உலகத்தைச் சித்திரித்தலாகிய சிவபெருமானின் பிரபாவமே இலிங்கம் என்பர். லிங்- லயம், கம்- தோற்றம். இலிங்கம்- சித்திரித்தல்.]*

சிவலிங்கத்தில் உருத்திரத்தின் மேல்பாகம், மேற்குப்பாகம், வடக்குப்பாகம், தெற்குப்பாகம், கிழக்குப்பாகம், இந்த ஐந்து இடங்களிலும் முறையே ஈசானம், சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம் என்ற ஐந்து திருமுகங்கள் கற்பிக்கப்படும். ஆகவே, சிவலிங்கம் **போகமூர்த்தியாகிய சதாசிவ மூர்த்தி** ஆவர்.

### *9.3 சிவலிங்க மூர்த்தியின் வகை*

சிவலிங்கம் **சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம்** என ஐவகைப்படும். தானே தோன்றிய லிங்கம் சுயம்புலிங்கம் எனவும், விநாயகர், முருகன் முதலிய கணநாதர்களால் தாபிக்கப்பெற்ற லிங்கம் காணலிங்கம் எனவும், பிரம, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களால் தாபிக்கப்பெற்ற லிங்கம் தைவிகலிங்கம் எனவும், அகத்தியர், வசிஷ்டர் முதலிய இருடிகளாலும், அசுரர் இராக்கதர் முதலியோர்களாலும் தாபிக்கப்பெற்ற லிங்கம் ஆரிடலிங்கம் எனவும், மனிதர்களால் தாபிக்கப்பெற்ற லிங்கம் மானுடலிங்கம் எனவும் பெயர் பெறும்.

இவ்வைந்து இலிங்கங்களுள் ஏதேனும் ஒன்று சிவாலயத்தில் மூலஸ்தானமாக எழுந்தருளியதாகும். அதுவே **பரார்த்தலிங்கம்** எனப் பெயர் பெறும்.

பரார்த்தலிங்கம் என்பது சிவபெருமான் சங்கார காலம் வரை சாந்தித்தியமாக எழுத்தருளி இருந்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கப் பெறும் இலிங்கமாம். உலகநலத்தை நாடுவதே பரார்த்தலிங்க பூசை (சிவாலய பூசை) ஆகும்.

### *9.4 உருவத் திருமேனி*

உருவத் திருமேனி என்பது கரசரணாதி அவயவங்களெல்லாம் விளங்கும் இருபத்தைந்து சிவவிக்கிரக பேதங்களான மகேசுவர மூர்த்தங்கள் ஆகும்.

அவை, சந்திரசேகரர், உமாமகேசுவரர், இடபாரூடர், நடராசர், கலியாணசுந்தரர், பிட்சாடனர், காமதகனர், காலசம்மாரர், திரிபுரசம்மாரர், சலந்தரசம்மாரர், கஜசம்மாரர், வீரபத்திரர், சங்கரநாராயணர், அர்த்தநாரீசுவரர், கிராதகர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதானர், கஜமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர் (தியாகராசர்), ஏகபாதர், சுகாசனர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் என்பன.

இன்னும் இம்மகேசுவர மூர்த்திகளின் பேதமாக விளங்கும் சரபமூர்த்தி, திரிபாதமூர்த்தி, ஏகபாதத்திரிமூர்த்தி, வடுகமூர்த்தி (சட்டைநாதர்), க்ஷேத்திரபாலகமூர்த்தி, கங்காதரமூர்த்தி முதலிய பல

சிவமூர்த்தங்களும் மகேசுவரமூர்த்திகளாவர். மகேசுவரமூர்த்திகள் யாவரும் **சலனலிங்கம்** எனப்படும். *(சலனம்- அசைவு உடையது. இஃது உற்சவமூர்த்தி ஆகும்.)*

இம் மகேசுவர மூர்த்திகள் யாவரும் சதாசிவ மூர்த்தியின் (சிவலிங்க மூர்த்தியின்) ஈசானாதி ஐந்து திருமுகங்களின் அம்சத்தையும், படைத்தல், காத்தல் முதலிய ஐந்தொழில் புரியும் அதிகாரத்தையும் பெற்று விளங்கும் **அதிகாரமூர்த்திகள்** ஆவர்.

சிவாலய உற்சவாதிகளில் மூலஸ்தான சிவலிங்கப் பெருமானின் பிரதிநிதியாக இம்மகேசுவரமூர்த்திகளில் எவரேனும் ஒருவர் ஆலயத்துள்ளோ அல்லது திருவீதிகளிலோ உலாவிற்கு எழுந்தருளுவர்.

இம் மகேசுவர மூர்த்திகள் **போகமூர்த்தி, கோர(வேக)மூர்த்தி, யோகமூர்த்தி** என மூவகைப்படுவர். அம்மையாரோடு எழுந்தருளிய சந்திரசேகரர், நடராசர், இடபாரூடர், சோமஸ்கந்தர், உமாமகேசுவரர் முதலிய திருவுருவம் போகமூர்த்தி எனப்படும். அம்மையார் இல்லாது எழுந்தருளிய காலசம்மாரர், வீரபத்திரர், கங்காளர், கஜசம்மாரர், இலிங்கோற்பவர் முதலிவு திருவுருவம் கோரமூர்த்தி எனப்படும். சுகாசனர், தட்சிணாமூர்த்தி முதலிய திருவுருவம் யோகமூர்த்தி எனப்படும்.

இம்மை மறுமைப் பயனை விரும்புவோர் போகமூர்த்தியையும், உலகில் வெற்றியை விரும்புவோரும், வினைகளைப் போக்க எண்ணுவோரும் கோரமூர்த்தியையும், வீடுபேற்றைப் பெற விரும்புவோர் யோகமூர்த்தியையும் வழிபடல் வேண்டும் என்பது சிவாகமத் துணிவு.

### 9.5 சிவசாந்நித்தியம் உள்ள இடம்

ஒரு சிவாலயத்திலுள்ள இராசகோபுரம் (ஸ்தூல லிங்கம்), திருவாயில், பிராகாரம், கோமுகம், ஸ்தூபி, மூலஸ்தானமூர்த்தி, சிவாசாரியர் ஆகிய இந்த ஏழு இடங்களில் சிவபெருமான் எப்பொழுதும் சாந்நித்தியமாக எழுந்தருளி இருப்பர் எனச் சிவாகமம் கூறும். இவ்விடங்களைத் தவறாமல் தரிசித்து வணங்குதல் மரபு.

இராசகோபுரம், ஸ்தூபி, மூலஸ்தானமூர்த்தி இவை **அசலலிங்கம்** எனப்படும். (அசலம்– அசைவு அற்றது.)

### 9.6 பிரதட்சிணம் செய்யும் முறை

இறைவனை வலமாகச் சுற்றிவருதல் (பிரதட்சிணம் செய்தல்) போகத்தையும், இடமாகச் சுற்றி வருதல் (அப்பிரதட்சிணம் செய்தல்) மோட்சத்தையும் வலமும் இடமும் ஆகச்சுற்றிவருதல் போகமோட்சங் களையும் அளிக்கும்.

பூரண கர்ப்பிணியானவள் எண்ணெய் நிறைந்த ஒரு கிண்ணத்தைக் கையில் ஏந்திக்கொண்டு தளும்பாமல் மெல்லக் கால்களை எடுத்துவைத்து நடந்து செல்வது போலச் சிவசிந்தனையுடன் ஒவ்வொரு அன்பர்களும் வலம் வருதல் மிகச் சிறப்பாம்.

பூமியிலே உடல்படும்படி புரண்டு (வலமோ அல்லது இடமோ) வருதலாகிய அங்கப்பிரதட்சிணம் செய்தல் மிகமிகச் சிறப்பாம்.

ஆலயத்துள் வலம் வரும்போது தூபி நிழல், துவசத்தம்ப நிழல், விக்கிரகங்களின் நிழல் முதலியன கீழே காணப்படின் விலகிச் செல்லல் வேண்டும்.

சிவாலயத்தில் வலம் வரும்போது பலிபீடத்தையும், இடபதேவரையும் சேர்த்து வலஞ்செய்தல் வேண்டும். சிவலிங்கப்பெருமானுக்கும் பலிபீட இடபதேவருக்கும் இடையே செல்லலாகாது.

விநாயகருக்கு ஒரு பிரதட்சிணமும், சூரியனுக்கு இரண்டு பிரதட்சிணமும், சிவபெருமானுக்கு மூன்று அல்லது ஐந்து, ஏழு, ஒன்பது, பதினைந்து, இருபத்தொன்று பிரதட்சிணமும், அம்மையார்க்கும், திருமாலுக்கும் நான்கு நான்கு பிரதட்சிணமும், முருகனுக்கும் பிறகடவுளர்க்கும் மும்மூன்று பிரதட்சிணமும் செய்தல் முறையாம்.

நவக்கிரக தேவர்களுக்கும் பொதுவாக மூன்று பிரதட்சிணமே செய்தல் முறையாம்.

பிரதட்சிணங்களுள் மிகச் சிறந்த பிரதட்சிணம் **சோமசூத்திரப் பிரதட்சிணம்** என்ற ஒன்றாம். இதனைப் பிரதோஷ காலத்தில் செய்யின் சகல பாவங்களும் வினைகளும் நீங்கும் எனச் சிவாகமங்கள் கூறும். வளர்பிறை அல்லது தேய்பிறையில் வரும் திரயோத சித்திதி சூரிய அஸ்தமன காலத்திற்கு முன்னும் பின்னும் இருக்குமானால் அது பிரதோஷகாலம் எனப்படும். சனிக்கிழமையில் வரும் பிரதோஷம் சனிப்பிரதோஷம். அது மிக விசேடமாகும்.

### 9.7 சோமசூத்திரப் பிரதட்சிணம் செய்யும் முறை

சோமசூத்திரப் பிரதட்சிணத்தைத் தொடங்கும்போது, முன்னர் ஆலயத்துள் சந்நிதியில் உள்ள இடபதேவரைத் தரிசித்து வணங்கி, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து வணங்கி, அதன்பின் திரும்பிவந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று கோமுகையைக் கடவாமல் அதனைத் தரிசித்து, வந்த வழியே திரும்பிச்சென்று இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச்சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, அங்கு நின்றும் திரும்பி இடபதேவரைத் தரிசியாது வலமாகச்சென்று கோமுகையைக் கடவாமல் அதனைத் தரிசித்து அங்கு நின்றும் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, அதன் பின் திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்துக் கொண்டு, பின்பு சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்குதல் வேண்டும். இதுவே, சோமசூத்திரப் பிரதட்சிணம் ஆகும்.

"வ்ரஷம் சண்டம் வ்ரஷம் சைவ|
சோம சூத்ரம் புனர் வ்ரஷம்||
சண்டஞ்ச சோம சூத்ரஞ்ச|
புனர்ச் சண்டம் புனர் வ்ரஷம்||"

(சகலாகமசாராம்)

பிரதோஷ காலத்தில் சிவசந்நிதியிலுள்ள இடப தேவருக்குப் பின்னே வலப்பக்கம் நின்றுகொண்டு இடபதேவருடைய அண்டத்தை வலக்கை விரல்களால் பரிசிப்பது போலப் பாவித்து, இடபதேவருடைய இரண்டு கொம்புகளின் நடுவே, "ஓம் ஹர ஹர" என்ற ஒலியோடு சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தல் மிகச் சிறப்பாம்.

### 9.8 நமஸ்காரம் செய்யும் முறை

நமஸ்காரம் (வணங்குதல்) திரயாங்கம், பஞ்சாங்கம், அட்டாங்கம் (சாஷ்டாங்கம்) எனப் பல வகைப்படும்.

சிரசின்மேல் இரு கைகளையும் குவித்துத் தலை வணங்குதல் திரயாங்க நமஸ்காரம் ஆகும்.

தலை, இரண்டு கை, முழந்தாள் இரண்டு ஆக ஐந்து உறுப்புகளும் நிலத்திலே பொருத்தும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம் ஆகும். தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு, ஆக எட்டு உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம் ஆகும்.

அட்டாங்க நமஸ்காரம் செய்யும்போது, முன்னர் மோவாய் படும்படி சிரசைவைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின்னர் அம்முறையே மடக்கி, வலத்தோளும் இடத்தோளும் தரையிற் பொருந்தும்படி கைகளை இடுப்பை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் பூமியில் படும்படி நமஸ்காரம் செய்தலே விதியாம்.

ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்டிர் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் சிறப்பு. திரயாங்க நமஸ்காரம் யாவர்க்கும் பொது. அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்களைக் குறைந்தது மூன்றுதரம் செய்தல் வேண்டும். ஒருதரம், இருதரம் நமஸ்காரம் பண்ணுதல் கூடாது.

நமஸ்காரம் பண்ணும்போது கிழக்குத் திசையிலேனும், வடக்குத் திசையிலேனும் கால் நீட்டலாகாது. மேற்கேனும் தெற்கேனும் கால் நீட்டல் வேண்டும்.

துவசத்தம்பம், பலிபீடம் இவற்றின் அருகேனும் அல்லது ஆலயத்தின் வெளிவாசலின் முன்னேனும் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். ஆலயத்துள் பிற இடங்களிலே திரயாங்க நமஸ்காரமே செய்தல் வேண்டும்.

கிழக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்திற்கு அக்கினி மூலையிலும், தெற்கு நோக்கிய சந்நிதியிலும், மேற்கு நோக்கிய சந்நிதியிலும்,

பலிபீடத்திற்கு நிருதி மூலையிலும், வடக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்திற்கு வாயுமூலையிலும் சிரம்வைத்து நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

### *9.9* சிவவழிபாட்டிற்கு முக்கியமானவை

சிவ வழிபாட்டில் நிற்கும் ஒவ்வொரு அன்பரும் விபூதி, உருத்திராட்சம் அணிதல், தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளை ஓதுதல், ஐந்தெழுத்தைச் செபித்தல் ஆகிய இவற்றை முக்கியமாகக் கைக்கொள்ளுதல் வேண்டும். இவை சிவவழிபாடு செய்பவர்க்கு **அங்கங்களாம்.** சிவவழிபாடு அங்கியாம். மேற்படி அங்கங்கள் வழிபாட்டிற்கு அதி சிறப்பைத் தரவல்லன.

திருநீற்றின் சமஸ்க்ரத சொல்லான விபூதி இறை அன்பைக் குறிக்கும் சிவசக்தியின் உருத்தோற்றமான கருவூலம் ஆகையால் இறை சக்தியினை உடையது. உயிர்கள் எல்லாவற்றையும் வேறுபாடுகள் எதுவுமின்றி அரவணைக்கும் சிவசக்தியின் அன்பிற்கு, மிக எளிதாக எங்கும் யாவருக்கும் பொதுவாகக் கிடைக்கவல்ல விபூதி என்ற அணிகலன், ஒரு சான்றாகும். சிவசக்தியை நினைந்து விபூதியை எண்ணங்களின் இருக்கையான நெற்றியில் அணியும் போதும் உணர்வுகளின் இருக்கையான மார்பில் அணியும் போதும் எம்மை நெறிப்படுத்தும் உந்து சக்தியைத் தரும் அணிகலனாக விபூதி அமைகிறது.

விபூதி, உருத்திராட்சம் இரண்டும் சிவச் சின்னத்தின் அறிகுறிகள். தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள் சிவபெருமானை மகிழ்விக்கும் தோத்திரங்கள். ஐந்தெழுத்து சிவபெருமானின் அருள் பெறும் மூலமந்திரம் ஆகும்.

### *9.10* சிவாலயப் பெருமை

ஒரு தலத்திலுள்ள திருக்கோயில், சிவாலயம், பெரும்பாலும், மூர்த்தி, தீர்த்தம், தலம் என்ற இம்மூன்று பெருமைகளை உடையது. இவற்றுடன் தேவாரத் திருப்பதிகங்கள் பெறின் மிகச் சிறப்புடையதாம்.

இங்கு, ஈழநாட்டுச் சிவத்தலங்கள் இரண்டினுள் ஒன்றான திருக்கேதீச்சரம் என்னும் சிவத்தலம் எல்லாப் பெருமைகளோடு தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற பெருமையும் வாய்ந்தது.

# 10 திருக்கேதீச்சர சிவாலயம்

## 10.1 திருக்கோயில் அமைப்பு

திருக்கேதீச்சரமானது, திருக்கேதாரம், காசி, காஞ்சி, திருவண்ணாமலை, சிதம்பரம், திருவாரூர், மதுரை போன்ற திருக்கோயில்களில் ஒன்று என்றும், அங்கே சிவபெருமான் சுயம்புலிங்க மூர்த்தியாக என்றும் பிரியாது எழுந்தருளியுள்ளாரென்றும் நூல்கள் கூறும். திருக்கோயில் கிழக்கு நோக்கிய ஐந்தடுக்கு நிலையினைக் கொண்ட இராசகோபுரத்தைக் கொண்டு கிராமநடுவே விளங்குவது. கோபுரத்தின் இருபக்கங்களையும் ஒட்டித் தொடர்ந்து நான்கு பக்கமும் சுற்றிய திருமதில்கள் கருங்கல்லாலும் செங்கல்லாலும் செவ்வியமுறையில் அமைந்துள்ளன.

சுவாமி சந்நிதி கிழக்கும் அம்பாள் சந்நிதி தெற்கும் நோக்கி உள்ளன. சுவாமி சந்நிதித் திருவாசலில் இராசகோபுரம் மிளிர்கிறது. இராசகோபுர இடப்பக்கத்தில் பூசை காலங்களில் அடிக்கப்பெறும் பேரொலியுடன் கூடிய வெங்கலமணி உயரத் தூக்கிக் கட்டப்பட்டுள்ளது. கோயிலுட் புறத்தில் இராசகோபுரத்திற்கு இருமருங்கிலும் சூரிய சந்திரர்க்குச் சந்நிதிகள் உள. நவக்கிரக மண்டபமும் சண்டேசுரர் சந்நிதியும் அமைந்துள்ளன.

கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபங்களைச் சுற்றிச் செல்வது முதலாம் பிரகாரம். கோயிலுள் திருமதிலை ஒட்டிச் செல்வது இரண்டாம் பிரகாரம். சரக்கரை, மடைப்பள்ளி ஆதியன இரண்டாவதில் உள்ளன. முதலாவதன் தென்பாகப் பத்தி மண்டப வரிசையில் 63 + 9 = 72 நாயன்மார்கள், சேக்கிழார், சந்தானகுரவர் ஆகியோரையும் மேல்பிரகாரத்தில் விநாயகர், சோமாஸ்கந்தர், மகாவிஷ்ணு, பழைய மகாலிங்கம், பஞ்சலிங்கம், மகாலட்சுமி, சுப்பிரமணியர் திருமூர்த்தங்கள் தனித்தனியே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதையும், தென் பிரகாரத்தில் தென்முகமான வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகர், பள்ளியறை, ஸ்ரீ நடராசமூர்த்தி ஆயமுர்த்தங்களையும், கீழ்ப் பாகத்தில் கருவூல அறை, யாகசாலை, வைரவர் சந்நிதிகளையும், கண்டு தரிசிக்கலாம். சுவாமி சந்நிதிக்குக் கிழக்கே திருமண்டபத்தில் நேராகப் பலிபீடம், பூமியிலிருந்து எடுக்கப்பட்ட நந்தி உள்ளன.

கர்ப்பக்கிருகத்தில் திருக்கேதீச்சரர் தரிசனம் ஆனந்தத்தை நல்கும். கர்ப்பக்கிருகக்கோயில் வெளிச்சுவரின் தென்பக்கத்தில் தட்சிணாமூர்த்தி, மேற்புறத்தில் இலிங்கோற்பவர், வடபால் துர்க்கா தேவி, கோமுகத்திற்குக் கீழ்பால் சண்டேசுவரர் மூர்த்தங்களை வழிபடலாம். சுவாமி சந்நிதி மகாமண்டபத்தின் கீழ்பால் வடபக்கமாக - தெற்குச் சந்நிதியாக ஸ்ரீ கௌரியம்மையார் அருள் செய்கின்றார். இவை தவிர மகாமண்டபத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வேணுகோபாலர், இராசராசேஸ்வரி, சமயகுரவர், சண்டேசுவரர் உற்சவமூர்த்திகள் உள்ளன.

இவ்வாலய தரிசனம் மனச்சாந்தியையும், சிவபுண்ணியப் பேற்றையும் அளிக்க வல்லது.

### *10.2 மூர்த்தியின் திருநாமம்*

இத்தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள மூலஸ்தானச் சுயம்புவடிவான சிவலிங்கப் பெருமானுக்கு **ஈழக்கயிலாயநாதர்** அல்லது **தென்கயிலாயநாதர், கேதீச்சரநாதர், மகாதுவட்டாபுரநாதர், கௌரிநாதர்** முதலிய பல திருநாமங்கள் வழங்குகின்றன. திருக்கயிலைச் சிகரங்களில் ஒன்று வாயுதேவனால் ஈழப்பகுதியில் வந்து வீழ்ந்ததனால் ஈழக்கயிலாயநாதர் அல்லது தென்கயிலாயநாதர் என்றும், நவக்கிரகங்களில் ஒன்றான கேதுபகவான்[10] பூசித்த காரணத்தால் கேதீச்சரநாதர் என்றும், தேவதச்சனாகிய மகாதுவட்டா பூசித்துத் திருப்பணி புரிந்து அமைத்த காரணத்தால் மகாதுவட்டாபுரநாதர் என்றும், உமாதேவியாரே இங்குக் கௌரியம்மையென்ற திருநாமத்துடன் இடப்பாகத்தில் எழுந்தருளிய காரணத்தால் கௌரிநாதர் என்றும் இறைவர்க்குப் பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

---

[10] இத்தலத்து ஆலயத்தில் உச்சிக்கால பூசைவேளையில் மண்டபத்தின் மேலே கரும்பாம்பு ஒன்றேனும் இரண்டேனும் உடன்தோன்றிப் பின் எங்கேயோ ஓடி மறைந்துவிடுகின்றன என்றும், பாம்புகளால் மக்களுக்கு ஒருவித துன்பமும் நேருவதில்லை என்றும், இந்நிகழ்ச்சியே இங்குக் கேதுபகவான் பூசித்தமைக்குச் சான்று என்றும் கூறுவர்.

அன்றியும் இத்தலத்துப் பெருமானைச் சுந்தரர் தேவாரம் "மத்தயானை போர்த்த மணவாள!" என்பதால் **நித்திய மணவாளர்** என்றும், ஆதியில் ஒருவகை நாகர் குலத்தினர் பூசித்ததால் **நாகநாதர்** என் றும் அன்பர்களின் பிறவிப்பிணியைப் போக்கவல்ல மருந்தாக மாதோட்டத் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளிய காரணத்தால் **மாதோட்ட மருந்து** என்றும், மாதோட்டம் திருப்பெருந்துறையாதலால் **திருப்பெருந்துறையீசன்** என்றும் திருக்கேதுநாதருக்குத் திருப்பெயர்கள் உண்டாயின.

இராசேந்திரசோழன் கல்வெட்டு ஒன்றில் **இராசராசேச்சுரத்து மகாதேவர்** என்ற ஒரு பெயர் பெருமானுக்கு விளங்குகிறது.

ஆதியில் ஈழநாட்டிலுள்ள திருக்கேதீச்சரலிங்கப் பெருமான் திருக்கேதாரலிங்கம் போலச் சுயம்புமூர்த்தி ஆவர். இவ்விலிங்கத்தில் இறைவர் என்றும் பிரியாது சாந்நித்தியமாக எழுந்தருளி இருப்பர்.

"கேழல் வெண்மருப்பு அணிந்த நீள் மார்பர் கேதீச்சரம் பிரியாரே" என்பது **சம்பந்தர் தேவாரம்.**

இத்திருக்கேதீச்சரநாதன் தம்மை வந்து வழிபடும் அன்பர்களின் முன்னைய கொடுவினைகளைப் போக்குவதுடன் அவர்கள் உடலிலுள்ள தீராநோய்களையும் போக்கி ஆட்கொள்ள வல்லவர். "மாதோட்ட நன்னகரில் பாவவினை அறுப்பார் பயில்..... திருக்கேதீச்சரத்தானே" என்பதும், "அங்கத்துறு நோய்கள் அடியார் மேலொழித்தருளி..... மாதோட்டநன்னகரில்..... திருக்கேதீச்சரத்தானே" என்பதும் **சுந்தரர் தேவாரம்.**

இத்தலத்து இறைவரின் சாயரட்சைப்பூசை, அர்த்தசாமப்பூசை மிக விசேடம். அர்த்தசாமப் பூசையின்போது திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் வந்து தரிசித்துச் செல்வதாக ஐதீகம். இவ்விருகாலப் பூசையின் தரிசனம் அசுவமேத பயனைத் தரும்.

இவ்வாலய உட்பிரகார மேல்பால் எழுந்தருளிய **புராதன மகாலிங்கத்திற்குப்** பாலாவித் தீர்த்தம் கொண்டுவந்து அபிஷேகம் செய்தவர் பெரும்பயன் அடைவர்.

மெய்யன்புடன் காலை, நடுப்பகல், மாலை முதலியவற்றில் சிவ வழிபாடு செய்தவர் ஏழ்பிறவியின் துன்பங்களைப் போக்க வல்லவராவர்.

✓ "காலைதொழ அற்றவினை கட்டகலும்; கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம் – மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயரம் எல்லாம் விடும்".

**(சிவதரிசன மகத்துவம்)**

இங்கு அம்மையார் திருநாமம் **கௌரியம்மையார்** என்பதாம். இவ்வம்மையார் சந்நிதி தரிசனம் மிகச் சிறப்பும், சக்தியும் வாய்ந்தது. எளிதில் அருள் கிடைப்பது.

### *10.3* தீர்த்த விசேடம்

"பாலாவியின் கரைமேல் திடமாவுறை
கின்றான்திருக் கேதீச்சரத் தானே".

**(சுந்தரர் தேவாரம்)**

இத்திருக்கேதீச்சரத்தில் திகழும் புண்ணிய தீர்த்தம் **பாலாவி**[11] **தீர்த்தம்** என்ற ஒன்றேயாம். இதனை "மாதோட்டத்தர் மன்னு பாலாவியின் கரையில் கேதீச்சரம்" என்று சம்பந்தர் தேவாரம் கூறுவதால் இப்பாலாவித் தீர்த்தம் மேன்மையான தீர்த்தமாக விளங்குவது.

---

[11] இப்பாலாவித் தீர்த்தத்தை, **தொலமி**, **பிளினி** முதலிய ஆராய்ச்சியாளர்கள், "பாலாவி மண்டலம்" என்று குறிப்பிடுகின்றனர். மன்று- இடம், மன்று என்பதை முண்டு எனக் கிரேக்கர்கள் கூறுகின்றனர். மண்டு, மண்டலம் ஆயிற்று என்பர். உதக மண்டலம் (நீலகிரி) என்றபோது மண்டலம் இடத்தையே குறித்தல் காண்க. [இப்பாலாவி, கி.பி. 9-ஆம் நூற்றாண்டு இடைப் பகுதியிலும் இருந்தது என்பர்.] தற்போது உள்ள பாலாவித் தீர்த்தம் கி.பி. 1948-ஆம் ஆண்டு ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தின் பெருமுயற்சியால் மன்னார்ப் பகுதி நீர்ப்பாசன இலாகா பொறியியலாளராக இருந்துவந்த திருவாளர் எஸ். ஆறுமுகம் அவர்களால் கண்டுபிடிக்கப்பெற்று அணைகட்டித் தேக்கிய நீர்நிலையே பாலாவிக் குளம் ஆகும். முன்னர் பாலாவி நதி மேலைக்கடலுடன் கலந்து நின்றதாகவும் வரலாறு கூறும்.

**தீர்த்தம்** என்பது தன்னிடத்தே வந்து மூழ்குவோரின் பாவங்களை (வினைகளை)ப் போக்கித் தூய்மை செய்வது. இறைவனுக்குத் **தீர்த்தன்** என்ற ஒரு திருநாமம் உள்ளது. "ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்பது **திருவாசகம்.** இறைவன் தீர்த்தங்களாகவும் விளங்குகிறான். "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே" என்பது **அப்பர் தேவாரம்.**

இப்பாலாவித் தீர்த்தம் திருக்கேதீச்சரர் ஆலயத்து அம்மன் சந்நிதிக்கு நேர் எதிரே - தெற்கே - சிறிது தூரத்தில் உள்ளது. அது கீழ்மேல் மிக நீண்டு அகன்று ஏரிபோன்ற நீர் நிலையினை உடையது என்றும் பெரும்பாலும் வற்றாமல் தண்ணீர் நிற்கும் சிறப்புடைய ஜீவதீர்த்தம் என்றும், இதனைப் "பலவினைக் குறும்பு போக்கும் பாலாவி" என்றும், "பரம்பரன் உருவாய் உற்ற பாலாவி" என்றும், **திருக்கேதீச்சரப் புராணம்** புகழ்ந்து கூறுகிறது. இப்பாலாவித் தீர்த்தம் இத்தலம் தோன்றிய போதே தோன்றியது. இமயத்திலுள்ள "மானசவாவி" போல மிகச்சிறப்புடையது.

சிவவடிவான இப்பாலாவித் தீர்த்தத்தில் ஒருவர் நல்லவராயினும் தீயவராயினும் அவர், அதிகாலையில் ஸ்நானம்பண்ணி, விபூதி, உருத்திராட்சம் அணிந்து, நியமம் முடித்துத் திருக்கேதீச்சரர் சந்நிதியை அடைந்து பஞ்சாட்சர மந்திரத்தைச் செபித்து வழிபாடு புரியின் அவரது வினைக்கட்டுகளும் பாவச் செயல்களும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்; அவரது 21-தலைமுறையும் ஈடேறும்; கல்வி, செல்வம், மனைவாழ்க்கை முதலியன ஓங்கும் எனத் **தலமான்மியம்** கூறும். ஒருவர் ஒருநாளேனும் பாலாவித் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யாத அவரது மானுடப்பிறவி ஒரு பிறவி ஆகுமோ? ஆகாது என நூல் புகலும்.

இச்சிவதீர்த்தத்தில் நாடோறும் ஸ்நானம் செய்ய இயலாதவர்கள் கார்த்திகைச் சோமவாரம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், பிரதோஷம், சூரிய சந்திர கிரணங்கள், சித்திரை விஷு, ஐப்பசி விஷு, தட்சணாயனம், உத்தராயனம், வியதிபாதயோகம், அமாவாசை முதலிய புண்ணிய காலங்களிலேனும் ஸ்நானம் செய்து திருக்கேதீச்சரநாதரைத் தரிசித்து வழிபடின் அவர்கள் இஷ்டசித்திகளைப் பெற்று விளங்குவர்.

ஒருவர் தம் பிதுர் தினங்களில் இப்பாலாவித் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, நியம அனுட்டானம் முடித்து, இத்தீர்த்தக் கரையின்மேல் இருந்து எள்ளொடு தருப்பணம் அல்லது ஆகம சிரார்த்தம் செய்து, திருக்கேதுநாதனைத் தரிசித்து, நெய்விளக்கு இட்டு வழிபட்டால், அது கயாவில் திலதர்ப்பணம், சிவசிரார்த்தம் செய்த பெரும் பயனைத் தரும். பிதுர்களும் மிக மகிழ்ந்து அவர்க்கு ஆசி கூறுவர். அவரும் சாயுச்சிய பதம் பெறுவர்.

இத்தலம், கி.பி. *16*-ஆம் நூற்றாண்டில் இடையிலே சிலபாகம் கடல்கொண்டும், சிலபாகம் மண்மாரி பெய்தும் அழிந்து போயிற்று. அப்போது இங்குள்ள பாலாவித் தீர்த்தம் தவிர மற்றைய பல சிவ தீர்த்தங்களும் அழிந்திருக்கக்கூடும் என்பர்.

### *10.4* பூசையும் திருவிழாவும்

சிவாலயங்களில் நாடோறும் காலை, மாலையில் செய்யும் பூசை **நித்திய பூசை** எனவும், விசேட புண்ணிய காலங்களில் செய்யும் பூசை **விசேட நாள் பூசை** (நைமித்திகபூசை) எனவும் இருவகைப்படும்.

#### *10.4.1* நித்திய பூசை

இத் திருக்கோயிலில் எழுந்தருளிய கேதீச்சரருக்கு நாடோறும் அதிகாலை *5-30* மணிக்குத் **திருவனந்தல்** நடைபெறும். காலை *7-30* மணிக்குக் **காலசந்தி**, நடுப்பகல் *12-00* மணிக்கு **உச்சிக்காலம்**, மாலை *6-00* மணிக்குச் **சாயரட்சை**, இரவு *8-00* மணிக்கு **அர்த்தசாமம்** ஆகிய நான்கு காலப் பூசைகளும் சிவாகம முறைப்படி நித்திய பூசையாதிகளும் இடம்பெறும்.

இக்காலங்கள் தேவஸ்தானத்தாராலும், கட்டளை தாரர்களாலும் (உபயகாரர்கள்) நடாத்தப் பெற்று வருகின்றன.

முதல்நாள் அர்த்தசாமப் பூசை முடிவில் பள்ளியறைக்குச் சென்ற இறைவனின் திருமுடியிலுள்ள கங்காதேவி அங்குள்ள மனோன்மணி சக்தியைக்கண்டு உடனே அங்கு நின்றும் சென்று, நதியில் அல்லது தடாகத்தில் கலந்து விடுகிறாள் என்பது ஐதீகம். பிறகு அக்கங்காதேவியைக் காலையில் சகல மேள வாத்திய முழக்கத்துடனும், சகல உபசாரங்களான கொடி, குடை, சுருட்டி, சாமரங்களுடனும்

ஆலயத்திற்கு ஒரு குடம் அல்லது மூன்று, ஐந்து குடங்களில் பிராமண பரிசாரகர் தண்ணீர் எடுத்துவர அழைத்து வருவதே - ஆலயத்தில் வலமாக அழைத்து வருவது திருமஞ்சனம் கொண்டு வருதலின் முறையாம்.

இறைவனுக்குத் திருமஞ்சனம் கொண்டு வருவதால், கிராமமும், அரசாங்கமும் விருத்தியாவதுடன் இலட்சுமிகடாட்சமும் உண்டாம்; காரியங்களும் சித்திக்கும் என்பது தொன்றுதொட்டு வரும் நம்பிக்கை ஐதிகமாகும்.

முன்னர் திருக்கேதீச்சர ஆலயப் பாலாவித் தீர்த்தத்திலிருந்து திருமஞ்சனம் எடுத்துவந்தனர். பின்னர் ஆலயத்து அருகேயுள்ள கேணியில் *(கிணற்றில்)* தண்ணிர் எடுத்தனர். விசேட நாட்களில் திருமஞ்சனம் சிறப்புடன் கொண்டு வருவர்.

ஆலயத்திற்குத் திருமஞ்சனம் மேளவாத்தியச் சிறப்புடன் கொண்டுவரும் ஊரே மங்களகரம் பொருந்திய ஊராகும்.

ஆலயத்திற்கு மேலும் சிறப்பும், ஊருக்கும் நாட்டுக்கும் பெரும் செழுமையும் தருவன விசேட நாள் பூசைகளாகும். கேதீச்சரநாதர் ஆலயத்தில் பின்வரும் விசேடநாள் பூசைகள் செவ்வனே நடை பெறும்.

### *10.4.2* நைமித்திக பூசை (விசேட நாள் பூசைகள்)

வருடப்பிறப்பு, திருநாவுக்கரசுநாயனார் குருபூசை, சித்திரை - உற்சவ விழா - பதினேழு நாட்கள், நடேசர் அபிடேகம், சேக்கிழார் குருபூசை, இடபவிரதவிழா, விசாகவிழா, திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் குருபூசை, மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை, ஆனி உத்தரவிழா, மகாசங்காபிஷேக நாள்விழா, ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை, கதிர்காம சுவாமி விழா - மூன்றுநாள், ஆவணிமூலம், பரிவாரமூர்த்திகள் வருடாபிஷேகம், விநாயக சதுர்த்தி, நவராத்திரி வைபவங்கள், கேதாரகெளரி விரதவிழா - *21* நாட்கள், தீபாவளி, கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளிக்கிழமைகள், கார்த்திகைச் சோமவாரங்கள், திருக்கார்த்திகை, சர்வாலயதீபம், ஆறுமுகநாவலர் குருபூசை, விநாயகர் சஷ்டி, திருவெம்பாவை, ஆருத்திராதரிசனம், தைப்பூசம், பாலாவிப் பிள்ளையார் வருடாபிஷேகம், தை அமாவாசை,

மாசிமகத்தீர்த்தம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம் ஆதியனவே கேதீச்சரத்தில் கொண்டாடப்படும் விசேட நாள் பூசைகளாகும்.

பஞ்சமுகார்ச்சனை, இலட்சார்ச்சனை ஆதியனவும் நிகழ்கின்றன. மேலும் தலைமன்னார் முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவம், முழங்காவில் பிள்ளையார் சங்காபிஷேக தினம் ஆதியனவும் கொண்டாடப்படுகின்றன. இதுதவிர, திருக்கோணேஸ்வர வருடாந்த உற்சவத்திற்குக் கேதீச்சரத்தில் இருந்து பாலாவித் தீர்த்தம் ஆண்டு தோறும் முறையாகக் கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

**திருக்கேதீச்சரத் தலமகிமை**

*"தலங்களில் சிறந்த கேதீச்*
*சரத்துமான் மியத்தை அன்பு*
*கலந்துறப் படிப்போர் கேட்போர்*
*காதலித்து உரைவி ரிப்போர்*
*நிலந்தனில் நிரப்பின் நீங்கி*
*நிறைசுக வாழ்வின் நீடிப்*
*பலங்களிற் சிறந்த வீட்டின்*
*பாலராம் பாலி னாரே."*

***(திருக்கேதீச்சரப் புராணம்)***

***

# *11* சிவபுராணமும் பதவுரையும்

## *11.1* சிவபுராணம்

### திருவாசக உண்மை

#### சிவபுராணம்

தேசுறுமா ணிக்கமெனச் சிறந்ததிரு வாசகத்திற்
பேசுதிருச் சிவபுரா ணத்தகவற் பெருமைசொலில்
ஈசர்தமக் கியல்பான திருநாம முதலெவையு
மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற வருட்குறிப்பாம்.

- பொன்னாக ஒளிரும் உயரிய திருவாசகத்தில் உள்ள
- புகழ்மிகு சிவபுராணத்தின் பெருமை சொன்னால்
- எம்பெருமானின் அங்கங்களாகிய ஐந்தெழுத்து முதலானவை
- பொய் அற மெய் அறிவுடன் வாழ்க என அருள் பொழியும்.

உ

## திருவாசகச் சிறப்பு

*(நேரிசை வெண்பா)*

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாச மென்னுந் தேன்.

- பழமையாகதத் தொடரும் பிறப்புக்களைச் சூழ்ந்த கட்டினைப் போக்கி
- துன்பத்துக்கு ஏதுவான அறியாமையை ஒழித்து இன்பத்தை விளைவித்து எல்லை
- அற்ற பேரின்பத்தைத் தந்தது , திருவாதவூரில் தோன்றிய மாணிக்கவாசகப் பெருமான்
- திருவாய் மலரில் பிறந்த , இனிமையான திருவாசகம் எனும் தேன்.

உ

திருச்சிற்றம்பலம்

தமிழ் மறையாகிய

## திருவாசகம்.

## திருப்பெருந்துறையில் அருளிய

# சிவபுராணம்

## (சிவனது அனாதி முறைமையான பழமை)

கலிவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

### இறைதுதி

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி

சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி

### திருப்பாயிரம்

சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

### பிறப்பின் ஏக்கம்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

### இறை அனுக்கிரகம்

மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கு நல்லறிவே

## மெய் அறிவு

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

## இறை அருள்

நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை

மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

## இறை மிகுபுகழ்

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்கும்எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே

**இறை அடைக்கலம்**

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

## 11.2 சிவபுராணம் - பதவுரை

### அ – இறைதுதி

1. நமச்சிவாய வாழ்க ! நாதன் தாள் வாழ்க !

- இவ்வுலக ஷ்ரிஷ்டி தர்மத்தை உள்ளடக்கும் திருஐந்தெழுத்து மந்திரத்தை ஜபித்துப் போற்றுகிறேன் ! எம்பெருமான் சிவபெருமானின் திருவடிகளைப் போற்றுகிறேன் !

2. இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க !

- கணப் பொழுதும் எனது மனதை விட்டு அகலாதவன் திருவடிகளைப் போற்றுகிறேன் !

3. கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க !

- அருள்புரிய திருப்பெருந்துறையில் எழுந்தருளிய ஷ்ரிஷ்டிகளின் மூலமான ஆதிகுருவின் திருவடிகளைப் போற்றுகிறேன் !

4. ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க !

- ஆகாமங்களின் மெய்ப் பொருளாய் நின்று என்னை ஆட்கொண்டருள நெருங்கிய திருவடிகளைப் போற்றுகிறேன் !

5. ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க !

- ஒருவனாகிய முதல்வன் ஷ்ரிஷ்டிகளில் அநேகமாகத் தோன்றவல்ல எம்பெருமான் திருவடிகளைப் போற்றுகிறேன் !

6. வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க !

- புறக்கருவிகள் தன்இச்சைப்படி செயற்படுவதை நிறுத்தி மனதை நிலைப்படுத்திய முதலரசன் திருவடிகள் ஓங்க வேண்டுகிறேன் !

7. பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க !

- இறப்பின் பின் மீழப் பிறப்பதை தடுக்க வல்ல எம்பெருமானின் வீரச் சிலம்பு நிறைந்த திருவடிகள் ஓங்க வேண்டுகிறேன் !

8. புறத்தார்க்குச் சேய்-யோன் தன் பூங்கழல்கள் வெல்க !

- மனதை ஒரு நிலைப்படுத்தி புறக் கருவிகள் தன் இச்சைப்படி செயற்படுவதை நிறுத்த வல்லமை அற்றவனுக்கு அருகில் இல்லாத மலரை ஒப்ப திருவடிகள் ஓங்க வேண்டுகிறேன் !

9. கரம் குவிவார் உண் மகிழுங் கோன் கழல்கள் வெல்க !

➢ கரங்களைக் கூப்பி வழிபடும் அன்பர்களின் மனத்தினை மகிழ்விக்கும் முதலரசன் திருவடிகள் ஓங்க வேண்டுகிறேன் !

10. சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்கள் வெல்க !

➢ சிரம் மேல் கை கூப்பி வழிபடும் உள்ளங்களைச் செல்வம் மிகுந்தவர்களாகச் செய்யும் மேன்மையான திருவடிகள் ஓங்க வேண்டுகிறேன் !

11. ஈசன் அடி போற்றி ! எந்தை அடி போற்றி !

➢ முதல்வன் எம்பெருமான் திருவடிகளைப் போற்றுகிறேன் ! என் அப்பன் திருவடிகளைப் போற்றுகிறேன் !

12. தேசன் அடி போற்றி ! சிவன் சே அடி போற்றி !

➢ கிருபை வடிவான முதற்குருவின் திருவடிகளைப் போற்றுகிறேன் ! செந்நிறத் தாள்களை ஒப்ப எம்பெருமான் திருவடிகளைப் போற்றுகிறேன் !

13. நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி !

➢ அன்பின் வடிவாய் நிற்கும் மாசற்ற தூயவன் திருவடிகளைப் போற்றுகிறேன் !

14. மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி !

➢ உண்மையை மறைக்கும் வஞ்சகப் பிறப்பு எடுப்பதை நிறுத்த வல்ல முதலரசன் திருவடிகளைப் போற்றுகிறேன் !

15. சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி !

➢ சிறுப்புமிக்க திருப்பெருந்துறையில் காட்சி தந்தருளிய எம்பெருமான் திருவடிகளைப் போற்றுகிறேன் !

16. ஆராத இன்பம் அருளும் மலை போற்றி !

➢ தெவிட்டாத இன்பத்தைத் தந்தருளும் உயர்ந்த மலை போன்ற அருஉரு வடிவினனைப் போற்றுகிறேன் !

## ஆ – திருப்பாயிரம்

17. சிவன் அவன் என் சிந்தை உள் நின்ற அதனால்

- எம்பெருமான் ஒரு நிலைப்படுத்தப்பட்ட எனது மனதில் தோன்றியதன் காரணத்தால்

18. அவன் அருளாலே அவன் தாள் வணங்கி,

- அதன் விளைவான அருளாலே எம்பெருமான் திருவடிகளைத் துதித்து,

19. சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை

- என் உள்ளம் மகிழ சிவபுராணம் எனும் இந் நூலினை

20. முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்.

- எனது முற் பிறப்பு வினைகள் யாவும் முற்றிலும் தீர்ந்திட உரைக்கின்றேன்.

21. கண் நுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்து எய்தி

- ஞானக் கண்ணான நெற்றிக் கண் உடைய எம்பெருமான் என்மீது தன் கருணை அருளைப் பொழிந்ததன் காரணத்தால்

22. எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி,

- வருணிக்க முடியாத அழகான சோதியான எம்பெருமான் திருவடிகளை மன்றாடி வணங்கி,

23. விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்,

- எல்லா உலகங்களிலும் அதற்கு அப்பாலும் அவற்றின் தோற்றத்துக்கு மூலமாகவும் அவை அனைத்தையும் துளங்க வைக்கும் பிரகாசமான ஒளியாய், (ஆனால்)

24. எண் இறந்த எல்லை இல்லாதானே! நின் பெரும் சீர்

- எண்ணம் மனம் என கணக்கில் அடங்காத இந்தத் தோற்றங்கள் எல்லாவற்றையும் கடந்தவனே! ஒப்பற்ற புகழை உடையவனே

25. பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்!

➢ பொல்லாத வல்வினைகளால் பீடிக்கப்பட்ட யான் உன் பழமையான புகழ்தனைக் கூற அறிவு அற்றவனாக உள்ளேன்!

## இ - பிறப்பின் ஏக்கம்

26. புல் ஆகி பூடு ஆகி புழு ஆகி மரம் ஆகி

➢ புல் பூடு புழு மரம் ஆகவும்

27. பல் மிருகம் ஆகி பறவையாய் பாம்பு ஆகி

➢ பல வகையான மிருகங்கள் பறவைகள் பாம்பு ஆகவும்

28. கல் ஆய் மனிதராய் பேயாய் கணங்களாய்

➢ கல் மனிதன் பேய் கணங்கள் ஆகவும்

29. வல் அசுரர் ஆகி முனிவர் ஆய் தேவர் ஆய்

➢ வலிமையான அசுரர் முனிவர் தேவர் ஆகவும்

30. செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

➢ விடுபடாது மீண்டும் படைக்கப்பட்ட இவ்வாறான அசையும் மற்றும் அசையா தோற்றங்களுக்குள்

31. எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்!

➢ எல்லா வகையான தேகங்களையும் எடுத்துப் பிறந்து இளைத்துவிட்டேன், எம்பெருமானே!

## ஈ - இறை அனுக்கிரகம்

32. மெய்யே, உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்.

➢ உண்மையான , உன் பொன் போன்ற திருவடிகளைக் கண்டு துதித்து இறப்பு பிறப்பு எனும் பிணிப் பிடியிலிருந்து விடுபெறும் பேறினை இன்று பெற்றேன்.

33. உய்ய என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய் நின்ற

➢ மாயை எனும் இருளில் பிறப்புகள் எடுத்து ஆணவத்தால் கர்ம வினைகளால் கட்டுண்ட என்னை அதிலிருந்து விடுபட எனது மனத்தில் நிகர் அற்ற பிரணவ உண்மையாக நின்ற

34. மெய்யா ! விமலா ! விடைப் பாகா ! வேதங்கள்

➢ மெய் அறிவானவனே ! மாசில்லாதவனே ! காளை மேல் காட்சி அளித்தவனே ! வேதங்களின் முதல்வனே

35. ஐயா ! என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே !

➢ ஐயனே ! புலப்படாதளவுக்கு உயர்ந்தும் அமிழ்ந்தும் விரிந்தும் நுட்பமாயும் அனைத்திலும் உள்ளவனே !

36. வெய்யாய் , தணியாய் , இயமானன் ஆம் விமலா !

➢ வெப்பமாகவும் , குளிராகவும் , பிறப்புக்களின் உயிராகவும் இருக்கும் மாசற்றவனே !

37. பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்து அருளி ,

➢ நிலையற்ற படைப்புகளும் அவை தன் விம்பங்களும் பொய் என்று அறிவித்து அவை ஒழிந்து மெய் அறிவு துளங்க அனுக்கிரகித்து அருள் புரிந்து ,

38. மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே !

➢ உண்மையான சேம நுண் அறிவாகி துலங்குகின்ற மெய் ஒளியே !

39. எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே !

➢ அறிவற்ற அடியேனுக்கு பேரின்பத்தை அருளிய எம்பெருமானே !

40. அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே !

➢ பிறப்பின் அறியாமையை அகற்ற வல்ல தூய அறிவினனே !

உ - மெய்யறிவு

41. ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்

➢ தொடக்கம் கால அளவரை முடிவு என்பன இல்லாது, உலகங்கள் எல்லாவற்றையும்

42. ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்,

➢ படைப்பாய், காப்பாய், அழிப்பாய், ஈற்றில் பிறப்பு அறுப்பினை அடைய அருள் புரிவாய்,

43. போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்.

➢ இடையில் பல பிறப்புக்களில் என்னைப் பயணிப்பாய், செலுத்துவாய் என்னை உன் சேவைக்காக.

44. நாற்றத்தின் நேரியாய் சேயாய், நணியானே!

➢ கமழ்தலின் அழியா மூலமாய்த் தொலைவிலும், வாசனையாக அருகிலும் இருப்பவனே!

45. மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே!

➢ சொல் எண்ணம் என்பவற்றைக் கடந்து நிற்கின்ற ஐந்தெழுத்து இரகசியத்தின் அடைக்கலமே!

46. கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போல

➢ மடிப் பாலுடன் கரும்புச்சாறும் நெய்யும் சேர்ந்த கலவை போல

47. சிறந்த அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று

➢ அறியாமையைத் துறந்த அடியார் எண்ணங்களில் இனிமையான பேரின்பமாய் நின்று

48. பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!

➢ சூழ் பிறவிகளின் இயக்கத்தை நிறுத்தவல்ல மூல காரணனான எம்பெருமானே!

ஊ - இறை அருள்

49. நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த

➢ பஞ்ச பூதங்களின் மூல காரணனாய் அவற்றிற்கு உரிய ஐந்து நிறங்களை உடையவனே, வானொர்கள் புகழ்ந்து துதிக்க

50. மறைந்து இருந்தாய் எம்பெருமான்! வல் வினையேன் தன்னை

➢ உருவாய் விளங்காது இருந்த எம்பெருமானே! (ஆனால்) நிரந்தரமற்ற பிறப்பு எடுத்து வலிமையான வினைகளால் கட்டுண்ட என்னை

51. மறைந்திட மூடிய மாய இருளை

➢ ஆணவத்தால் அறியாமை என்ற இருள் அறிவை மறைக்க

52. அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி

➢ நன்மை தீமை எனும் பிறப்பை அறுக்க முடியாத கர்மங்களால் கட்டுண்டு

53. புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,

➢ தோல் எனும் உடை உடல் உள்ளிருக்கும் புளுக்கள் அழுக்குகளை மறைக்க,

54. மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை

➢ அழுக்கை வெளியேற்றும் ஒன்பது வாயில்களைக் கொண்ட வீடான இவ் உடலினுள்

55. மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

➢ ஐம்புலன்கள் தன்னிடத்து இழுத்து கலங்க வஞ்சித்துத் துன்புறுத்த,

56. விலங்கு மனத்தால், விமலா! உனக்கு

➢ உன்னை நினைக்கவும் விடாத கட்டுப்பாடற்ற மனத்தினால், மசாற்றவனே! உன்னை

57. கலந்த அன்பாகி கசிந்து உள் உருகும்

➢ ஒருமித்த அன்புடன் உள்ளம் நெகிழ்ந்து உருக

58. நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி,

➢ நற்குண மனம் இல்லாத தகுதியற்ற சிறியவனாகிய எனக்கு அருள,

59. நிலம் தன்மேல் வந்து அருளி, நீள் கழல்கள் காட்டி,

➢ திருஉருவம் எடுத்துப் பெருந்துறையில் அருளி, திருஅடி காட்சி தந்து,

60. நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு

➢ ஆதரவற்ற நாயிலும் கீழாக மனம் போன போக்கில் வாழ்ந்த அடியேனுக்கு

61. தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!

➢ தாயை மிஞ்சிய அன்பை ஆதரவைத் தந்த கருணைவடிவான மெய்ப்பொருளே!

## எ - இறை மிகுபுகழ்

62. மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!

➢ தூய்மையான விரி புது மலர் வனப்பினையுடைய ஒளிவடிவினனே!

63. தேசனே! தேன் ஆர் அமுதே! சிவபுரனே!

➢ குருவே! முழுமையான இனிமையைத் தரும் அமுதமே! திருக்கயிலை நாதனே!

64. பாசம் ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!

➢ மும்மலங்களின் வித்தையில் உண்டாகும் மெய்யன்பின் அஞ்ஞான வெளிப்பாடான பாசத்தை அறுக்க எழுந்தருளிய ஞானகுருவே!

65. நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட

➢ அன்புடன் அருள் பாளித்து வஞ்சகம் செய்யும் என் மனதில் உள்ள அறியாமையை ஒழிக்க

66. பேராது நின்ற பெருங் கருணைப் பேர் ஆறே !

- என்னை விட்டு அகலாது நின்ற மிகையான இரக்கமுடைய பேரருளை குறைவில்லாது வழங்கும் பெரிய ஆறினைப் போன்றவனே !

67. ஆரா அமுதே ! அளவிலாப் பெம்மானே !

- தெவிட்டாத அருமருந்தான அமுதமே ! முதலும் முடிவுமற்ற முதல்வன் என்ற பெருமையுடைய எம்பெருமானே !

68. ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே !

- அறியாண்மையால் கட்டுண்ட மனத்திலும் மறைந்திருக்கும் ஒளி வடிவினனே !

69. நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே !

- மனதைக் கல்லாக்கிய வினைக் கட்டுக்களைப் பனி போல் உருக்கி என் உயிருக்கும் உயிர் ஊட்டி நிற்பவனே !

70. இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே !

- இன்பம் துன்பம் என்ற துவந்துவங்களுக்கு அப்பாட்பட்டவனே, நாம் உய்யும் பொருட்டு இவற்றின் மூலமாகவும் இருப்பவனே !

71. அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையும் ஆம்

- அடியனுக்கு அன்பனாகவும் எல்லாத் தோற்றங்களின் அடிப்படையாகவும் தோற்றங்கலற்ற வெற்றிடத்திற்கும் அப்பால் அருவாய் ஒன்றுமாகவும் இல்லாது இருக்கின்ற

72. சோதியனே ! துன் இருளே ! தோன்றாப் பெருமையனே !

- ஞான ஒளியான குருவே ! அடர்ந்த இருளின் மூலமே ! தோற்றங்கலற்ற ஆதியிலும் தோன்றாதவன் என்ற புகழ் உடையவனே !

73. ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே !

- யாவற்றிற்கும் முன்னோனே தொடக்கம் நடுவு முடிவு அற்றவனே !

74. ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே !

➢ வலிந்து அழைத்து என்னை வெற்றி பெறச் செய்த என் அப்பனே எம்பெருமானே !

75. கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தில்

➢ கூரறிவாகிய மெய்யறிவால் மட்டும் ஒரு நிலைப்படுத்தப்பட்ட மனதில் உணரப்படும்

76. நோக்கு அரிய நோக்கே ! நுணுக்கு அரிய நுண் உணர்வே !

➢ மிக அரிதாகத் தோன்றும் காட்சி உடையவனே ! கூரறிவான மெய்யறிவாலும் ஆராய்ந்து உணர முடியாத மிக நுட்பமான தத்துவனே !

77. போக்கும் வரவும் புணர்வும் இலா புண்ணியனே !

➢ இறப்பு பிறப்பு இடையில் தோற்றங்களுடன் கலப்பு இல்லாத புனிதனே !

78. காக்கும் எம் காவலனே ! காண்ப அரிய பேர் ஒளியே !

➢ எல்லாத் தோற்றங்களின் பாதுகாவலனே ! உணர்ந்து காண்பதற்கு அரிதான பிரகாசமான ஒளிவடிவினனே !

79. ஆற்று இன்ப வெள்ளமே ! அத்தா ! மிக்காய் நின்ற

➢ ஆற்றின் தூய நீரோட்டம் போல இன்ப மகிழ்வைத் தரும் ஊற்றே ! அப்பனே ! மேலான அறிவாய் நின்று

80. தோற்றச் சுடரொளியாய்ச், சொல்லாத நுண் உணர்வாய்,

➢ எல்லாத் தோற்றங்களையும் விளங்கச் செய்யும் பேர் ஒளியாய், விளங்காமல் இயங்கும் நுட்பமான மெய் அறிவாய்,

81. மாற்றம் ஆம் வையகத்தே வெவ்வேறே வந்து அறிவு ஆம்

➢ மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட இவ்வுலகத்தின் பலவிதமான தோற்றங்களை சிற்றறிவால் விளங்கச் செய்யும்

82. தேற்றனே ! தேற்றத் தெளிவே ! என் சிந்தனையுள்

➢ தெளிவினனே ! உறுதியான பேரறிவே ! எனது மனத்தினுள்

83. ஊற்றான உண் ஆர் அமுதே ! உடையானே !

➢ ஊற்றெடுத்த உண்ணத் தெவிட்டாத அருமருந்தே ! எனது உரிமைக் கத்தாவே !

**ஏ - இறை அடைக்கலம்**

84. வேற்று விகார விடக்கு உடம்பினுள் கிடப்ப

➢ வெவ்வேறான விகாரங்களை உடைய ஊண் உடம்புகலில் பிறப்பெடுத்து

85. ஆற்றேன், எம் ஐயா, அரனே ! ஓ என்று என்று

➢ பொறுக்கேன் இனியும், என் குருவே, எம்பெருமானே ! ஓ என்று உனைத் துதித்து அரற்றிக் கூறுகிறேன்

86. போற்றிப் புகழ்ந்து இருந்து பொய் கெட்டு மெய் ஆனார்

➢ உனைப் போற்றிப் பாடி நிலைபெற உனை நினைந்து நிலையில்லாத தோற்றங்கலும் எண்ணநினைவுகளும் செயல்களும் பொய் என அறிந்து மெய் ஞானத்தை உணர்ந்தேன்

87. மீட்டு இங்கு வந்து வினைப் பிறவிசாராமே,

➢ மீண்டும் இவ்வுலகில் புகுந்து வினைப் பயனால் உடல் எடுக்காது,

88. கள்ளப் புலக் குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே !

➢ வஞ்சகமான புலன்களையுடைய உடம்பினுள் கட்டுண்ட என்னை விடிவிக்க வல்லோனே !

89. நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே !

➢ நடு நிசியில் யாவையும் உறங்க இருளை அடக்க திருக்கூத்தை பயிலும் எம்பெருமானே !

90. தில்லையுள் கூத்தனே ! தென் பாண்டி நாட்டானே !

➢ தில்லை நகரில் திருத்தாண்டவம் புரிபவனே ! தெற்கே பாண்டி நாட்டின் புகழோனே !

91. அல்லல் பிறவி அறுப்பானே ! ஓ என்று ,

- துன்பத்தைத் தரும் பிறப்பினை அடியோடு ஒழிப்பவனே ! ஓ என்று உனை உலகறிய இயம்புகிறேன்,

92. சொல்லற்கு அரியானை சொல்லி திருவடிக் கீழ்

- சொற்களுக்குள் அடங்காத எம்பெருமான் புகழை நினைந்து பாடி என் அப்பன் திருவடிகளில் சமர்ப்பித்த

93. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் ,

- இப்பாடலை திருவடி நினைந்து பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள்,

94. செல்வர் சிவபுரத்தில் உள்ள சிவன் அடிகளுக்கு

- எம்பெருமான் சிவபெருமான் உறையும் அடைக்கலத்தில் திருவடி சங்கமமாவர்

95. பல்லோரும் ஏத்தப் பணிந்து .

- அடைக்கலத்தில் சங்கமமானோர் புகழ்ந்து வணங்கி வரவேற்க ஏக ஆனந்தத்தில் இருப்பர் .

சிவபுராணம் பதவுரை முற்றிற்று.

## 11.3 கருத்தன் குறிப்பு

### 11.3.1 வகு முறையின் விளக்கம்

வேதாகமங்களில் கூறப்படும் தத்துவங்களில் முத்திப் பாதையின் விளக்கத்தை எளிதில் புரியும் படி மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணம் அமைகிறது.

இம்முத்திப் பாதையை எளிதில் அறிந்து கடைப்பிடிக்கும் வண்ணம் இறைதுதி, திருப்பாயிரம், பிறப்பின் ஏக்கம், இறை அனுக்கிரகம், மெய்யறிவு, இறை அருள், இறை மிகுபுகழ், இறை அடைக்கலம் என முறைப்படி வகுத்து பதவுரையினை வடிவமைத்துள்ளேன்.

*1* **இறைதுதி**

திருப்பதிகங்கள் மூலம் சிறுபிராயத்தில் இருந்து இறை துதி *(Praise the Lord)* பயில்கின்றோம்; வாழ்க்கையின் இடைப்பகுதியில் பயின்றதைத் தொடர மறக்கின்றோம்; மறந்ததை, நிறுத்திய நற்பழக்கத்தை மீண்டும் ஆரம்பிப்பது கடினம். வினைப்படி சிலர் பிற்காலத்தில் இறைதுதி செய்ய ஆரம்பிப்பார்கள்.

பிறப்பிலிருந்து மனித உடலின் உயரம் பருமன் நிறை முதலியனவும் மனதில் தோன்றும் எண்ணங்களும் அதன்கண் உணர்ச்சிகளும், புத்தி அறிவாற்றலும் மூளையின் நினைவாற்றலும் மனித வாழ்க்கையின் பெரும்பகுதி ஒவ்வொரு நாளும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இவ்வளர்ச்சி ஷ்ரிஷ்டி தர்மத்திற்கேற்ப இயற்கையாக நிகழ்வதாகும்.

எமது வாழ்க்கையை சீராகவும் வெற்றிகரமாகவும் அமைக்க நாம் எடுக்கும் முயற்சியின்கண் நிகழும் வளர்ச்சியே, ஷ்ரிஷ்டியின் மற்றைய பிறப்புக்களுக்கு அமையாத, நாம் எடுத்திருக்கும் மனிதப் பிறவியின் நோக்கமாகும். நாம் எமது முயற்சியால் செய்யும் உடல் அப்பியாசங்கள் எமது உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்க உதவுவது போல மனதையும் புத்தியையும் அதற்கேற்ப அப்பியாசங்கள் மூலம் உயர் நிலையில் பேண வேண்டும். மனதை உயர் நிலையில் பேண தேவாரத் திருப்பதிகங்களும் திருவாசகமும் உதவுகின்றன.

ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்தி மேற்கூறியவற்றை அமுல்ப்படுத்த புத்தி ஆற்றலை நெறிப்படுத்தல் அவசியம். இதற்கான வழி நாம் எப்பொழுதும் உயர்ந்த நோக்கங்களையும் உயர் குறிக்கோள்களையும் கொண்டிருத்தலாகும்.

இறைவணக்கம் இறைதுதி என்பன நாம் "நான்" என்று நினைந்து செய்யும் கர்மங்களிலிருந்து சிறிது விடுபட்டு உயர் மெய் நிலையை நோக்கி ஒருமனதுடன் செய்யும் கர்மம் ஆகையால் எம்முள் உயர்ந்த நோக்கங்களையும் உயர் குறிக்கோள்களையும் உருவாக்க வல்லன.

சிவபுராண இறைதுதி எம்பெருமானின் பெருமையையும், ஷ்ரிஷ்டி தர்மத்தையும் உணர்த்தும் இறை புகழாக அமைந்துள்ளது. இத்துதி மூலம் முயற்சியின்கண் நிகழக்கூடிய உன்னத வளர்ச்சியானதும் மகா வெற்றியுமான முத்திப் பாதையில் முதலடி வைத்தலை அடையலாம்.

### 2 திருப்பாயிரம்

இறை துதியை முறையே இடைவிடாது ஒழுக முத்திப் பாதையின் முகப்புக்குள் காலடி வைக்க வழி பிறக்கின்றது.

### 3 பிறப்பின் ஏக்கம்

எம்முள் எழும் பிறப்பின் ஏக்கமே முத்திப் பாதைக்குக் அடித்தளமாகும். நிலையில்லாத இவ்வாழ்க்கை, ஏன்? நான் யார்? என்ற பிறப்பின் ஏக்கத்தை உணர்த்தும் கேள்விக்கணைகள் முத்திப் பாதையின் வழி தொடர ஏதுவாகின்றன. எம்மைத் தூய்மையாக்க எடுத்த பிறப்பு இது என்ற உணர்வும் பிறப்பின் ஏக்கம் எழ ஏதுவாகிறது.

### 4 இறை அனுக்கிரகம்

இக் கேள்விகளின் அர்த்த புஷ்டியை உண்மைத் தன்மையை உணர முத்திப் பாதையின் அடுத்த படியில் கால் பதிக்க இறை அனுக்கிரகம் எம்மை நாடி வருகின்றது.

### 5 மெய்யறிவு

இவ்விறை அனுக்கிரகம் இக்காலமும் வினைப்படி வாழ்ந்த அருகிய புத்தி, சிற்றறிவின் கறைகளை அகற்றித் தூய்மையாக்கி தெளிய வைத்து முத்திப் பாதையின் அடுத்த படியில் கால் பதிக்க மெய்யறிவை ஊற்றெடுக்கச் செய்கின்றது.

### 6 இறை அருள்

மெய்யறிவு துளங்கிய வாழ்க்கையினை நுண் அறிவுடன் இடைவிடாது ஒழுக பிறப்பு அறுப்பினை அடைவதற்கு இறை அருள் பாலிக்கின்றது.

### 7 இறை மிகுபுகழ்

இறை அருளான இத்தேன் ஊற்று எம்முள் சுரக்க எம்மை அறியாமல் முத்திப் பாதையில் முன்னேறிய நிலை இதுவாகும்.

### 8 இறை அடைக்கலம்

மாணிக்கவாசக சுவாமிகள் முத்திப் பாதையின் இறுதி நிலையில் எம்பெருமான் பாதக்கமலங்களில் சரணடைய, அன்பின் நன்றியின் முத்திப்பேறின்கண் மலர்ந்த திருவார்த்தைகள் சிவபுராணம் எனும் தேனாகும்.

*11.3.2* **பதவுரை பயிலும் பயன்**

நமது மூன்று உயிர் வாழ்வதற்கான கருவிகளான உடல் மனம் புத்தியை நாமும், பிறரும் அறிவது எமது எண்ணங்கள் மூலம் உருவாகும் பேச்சு செயல் என்பவற்றினூடாகும். எண்ணங்களினால் ஒரு மனிதனை வெற்றி பெறச் செய்யவும் முடியும் அவனை அழிக்கவும் முடியும். இகழார்ந்த (கெட்ட பெயரைப் பெற்ற) கொள்ளைக்காரன் வாழ்மீகியை உயர்ந்த கவிஞ்ஞனாக்கியது நாரத முனிவர் தனது உயர்ந்த எண்ணங்கள் மூலமாக வால்மீகிக்கு கூறிய சக்திமிகு அறிவுரையாகும்.

ஐம்புலன்களின் செயற்பாடுகள் எல்லைகளுக்கு உட்பட்டன. மனதின் அதிர்வுகளான எண்ணங்கள் எல்லைகள் அற்றவை. எண்ணங்களைப் பொறுத்து எண்ணங்களின் அலைவு எண் மற்றும் அலை நீளம் என்பவற்றை மாற்றி அமைக்கும் திறமையை நாம் கொண்டிருப்பதால் இப்படைப்பின் எப்பாகத்திற்கும் தொடர்பை ஏற்படுத்தும் வல்லமையை நாம் பெற்றுள்ளோம்.

புது எண்ணங்கள் புது உண்மைகளையும் அதனால் புது நிலைமைகளை உருவாக்கவும் அதன்மூலம் புது உணர்வுகளையும் செய்யறிவையும் புது நன்மையான உணர்வுபூர்வமான மன எழுச்சியையும் தர வல்லன.

புது அலை எண் உடைய எண்ணம் புது அலை நீளத்தை உடைய உணர்வுபூர்வமான மன எழுச்சியுடன் இணையும் பொழுது எண்ணங்களின் அதிர்வுத் தன்மை விரிவடைந்து அதன் படைப்புத்திறன் அதிகரித்து புது உண்மைகள் மற்றும் புது நிலைமைகளின் உருவாக்கம் ஏற்படுகின்றது.

ஆக, அலை எண் மற்றும் அலை நீளம் என்பவற்றால் மாறுபடும் எண்ணம் மற்றும் உணர்வுபூர்வமான மனஎழுச்சி, அதிர்வுகளின் விரிவுத்தன்மையை நிர்ணயித்து நான் யார், எனது அறிவுடைப் பொருள் யாது, எனது வாழ்க்கை, தொடர் பிறப்பு, முத்திப் பாதை என்பவற்றைத் தீர்மானித்து வடிவமைக்கும் திறனை உடையது.

இப் பதவுரையை இறை சந்நிதியில் அமைதியாகப் பயில அதன் மூலம் உருவாகும் உணர்வுபூர்வமான எண்ண அலைகள் விரிவடைந்து எம்பெருமான் பாதக்கமலங்களைச் சேர்வது திண்ணம்.

**சிவ சிவ**

## 12 தேவாரத் திருப்பாடல்கள் முதலியன

### 12.1 திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகம்

**பண் - நட்டராகம் (இரண்டாந் திருமுறை)**

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவில் நாணர
வா அனல் எரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்(று)
உறைபதி எந்நாளும்
கருது கின்றஊர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை அடையாவே. 1

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. 2

பெண்ணோர் பாகத்தர் பிறைதவழ் சடையினர்
அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணம் ஆதரித் தாடுவர் பாடுவர்
அகந்தொறும் இடுபிச்சைக்(கு)
உண்ண லாவதோர் இச்சையின் உழல்பவர்
உயர்தரு மாதோட்டத்(து)
அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்(கு)
அருவினை அடையாவே. 3

பொடிகொள் மேனியர் புலியதள் அரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்(து)
அடிகள் ஆதரித்(து) இருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே. 4

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க்(கு) அருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப்(பு) இறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்(து)
எல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத்(து) அரனடி இணைதொழும்
அன்பராம் அடியாரே. 5

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனை
பொருந்தவைத் தொருபாகம்
மாழை அங்கயற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டம்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே. 6

பண்டு நால்வருக்(கு) அறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய்கே
தீச்சரம் அதுதானே. 7

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்(து)
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே. 8

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந்(து) எழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தகம் என்னாகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தஎம் பெருமானே. 9

புத்த ராய்ச்சில புனைதுகில் உடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின்(று) உண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்(து)
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே. 10

மாடெ லாமண முரசெனக் கடலின(து)
ஒலிகவர் மாதோட்டத்(து)
ஆடல் ஏறுடை அண்ணல்கே தீச்சரத்(து)
அடிகளை அணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
னவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## 12.2 சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகம்

**பண் – நட்டபாடை (ஏழாந் திருமுறை)**

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே. 1

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி அணிந்தகறைக் கண்டன்
படஏரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே. 2

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண் அர(வு) அசைத்தான்திருக் கேதீச்சரத் தானே. 3

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்(டு)யாழ்செயும் மாதோட்ட நன் னகருள்
பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே. 4

அங்கத்துறு நோய்கள்அடி யார்மேல்ஒழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

வெய்யவினை யாயஅடி யார்மேல்ஒழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்ட நன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 6

ஊனத்துறு நோய்கள்அடி யார்மேல்ஒழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்(து)எயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

அட்டன்அழ காகஅரை தன்மேலரவு ஆர்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 8

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன் னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 9

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்ட நன் னகருள்
சிறையார்பொழில் வண்டுயாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்அடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினேயே. 10

திருச்சிற்றம்பலம்.

### *12.3* திருக்கேதீச்சரத்தைக் குறிக்கும் தேவாரம் - பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர்
கேதீச்சரம் மேவினார் கேதா ரத்தார்
கெடில வடஅதிகை வீரட் டத்தார்
மாதுயரம் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவா ளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே. *1*

**- திருவீழிமிழலைத் தேவாரம் – அப்பர்**

ஈழ நாட்டுமா தோட்டந் தென் னாட்டிரா மேச்சுரம்
சோழ நாட்டுத் துருத்திநெய்த் தானம் திருமலை
ஆழி யூரன நாட்டுக்கெல் லாமணி யாகிய
கீழை யில்லர னார்க்கிடங் கிள்ளி குடியதே. *2*

**- சுந்தரர் தேவாரம்**

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழி புடைசூழ்ந்(து) ஒலிக்கும் ஈழந் தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட் டத்தில்
திருக்கே தீச்சரத்(து) அண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை உற்றார். *3*

**- திருஞானசம்பந்தர் புராணம்**

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரம் சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார். *4*

**-கழறிற்றறிவார் புராணம்**

திருச்சிற்றம்பலம்

*12.4 திருக்கேதீச்சரத் தோத்திரம்*

மூவர்க்கும் மேலான முதல்வன் கண்டீர்
முன்னின்று வழிகாட்டும் மூர்த்தி கண்டீர்
நாவலர்முன் நினைவூட்டும் நம்பன் கண்டீர்
நானற்றார் உளம்பிரியா நாதன் கண்டீர்
பாவங்கள்தீர்த் தெம்மைப் பவித்ர ராக்கும்
பாலாவிக் கரையமர்ந்த பரமன் கண்டீர்
தேவர்க்கும் தெரிவரிய தெய்வம் கண்டீர்
திருக்கேதீச் சரத்துறையும் தேவன் தானே. *1*

சுந்தரரின் பாடல்மகிழ் சுயம்பு லிங்கம்
சுழியலுக்கு வழிகாட்டும் சோதி லிங்கம்
கந்தருவர் கின்னரரும் போற்றும் லிங்கம்
கௌரியிட மாகஒளிர் காட்சி லிங்கம்
மந்திரமும் தந்திரமும் ஆன லிங்கம்
மாதோட்டந் தனில்அமர் மாணிக்க லிங்கம்
பந்தமறுத்(து) அடியரையாள் பழைய லிங்கம்
பரமலிங்கந் தனைத்தொழுதால் பாவம் போமே. *2*

வேதமுடன் ஆகமமும் ஆனாய் போற்றி
வேதாந்தச் சித்தாந்தப் பொருளே போற்றி
சூதமுனி புகழ்ந்துரைத்த சிவனே போற்றி
துவட்டாவின் கலிதீர்த்த தூயனே போற்றி
கேதுவந்து பூசித்த கோவே போற்றி
கேட்டவரம் ஈந்தருளும் கையா போற்றி
மாதொருபா கத்தமர்ந்த மணாளா போற்றி
மாதோட்ட மாமணியே போற்றி போற்றி. *3*

பொங்குகடல் சூழிலங்கைப் புனிதா போற்றி
புண்ணியர்தம் கண்ணின் மணியே போற்றி
சிங்கமன்னரும் பணிசெய் சிவனே போற்றி
சிரிப்பாலே திரிபுரத்தைச் செற்றாய் போற்றி
வங்கமுறை மாதோட்ட மருந்தே போற்றி
வடஈழ மக்களது வாழ்வே போற்றி
தெங்குநிறை சோலைமகிழ் தேவே போற்றி
திருக்கேதீச் சரத்தானே போற்றி போற்றி. *4*

**- கொழும்பு க. இராமச்சந்திரன், ஆத்மஜோதி கௌரவ ஆசிரியர்**

### *12.5* திருக்கேதீச்சரர் திருப்பள்ளியெழுச்சி

வாழ்த்தும் மெய்யடியார் வன்றொண்டர் நாளும்
வகைவகை பூசனை செய்துதம் சென்னி
தாழ்த்தும் விண்ணோர்கள் தம்மை மறந்துநின்
தாள்தொழு தேத்தும் தானவர் யாரும்
பாழ்த்த பல்லுலகப் பந்தம(து) அறுத்திடப்
பாலாவி மூழ்கிப் பணிந்து நிற்கின்றார்
வீழ்த்த செஞ்சடையாய் ! விமல ! கேதீச்சர
விண்ணவனே ! பள்ளி எழுந்தருளாயே.

**- கொழும்பு மு. சிவராசா விவேகானந்தசபைச் செயலாளர்**

### *12.6* திருக்கேதீச்சரத்தலத் திருப்பதிகம்
### ஓதும் பயன்

துகளறுக்கும் இத்தலத்தின் பதிகங்கள்
சந்நிதியில் தொழுது போற்றிப்
புகழுறவே படித்தாலும் கேட்டாலும்
ஒருவருக்குப் போதித் தாலும்
மகிழுறவே வரைந்தாலும் பரப்புநரைப்
பொருள்தந்து மகிழ்வித் தாலும்
மகிதலத்து மன்னருமாய் மறுமையினில்
சிவலோகம் மருவு வாரே.

**- திருக்கேதீச்சரப் புராணம்**

## *12.7* திருக்கேதீசுவரர் அஷ்டகம்
### *[துவஷ்டா பாடியது]*

*(1)* நமஸ்தே சாம்ப ருத்ராய
நமஸ்தே பரமாத்மனே
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோநம:

*(2)* நமஸ்தே அகில நாதாய
நமஸ்தே பயுநாசக
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோதம:

*(3)* ஆதிமத்யாந்த சூன்யாய
ஆதார நிலயாயச
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோதம:

*(4)* ப்ரக்ஷ்ம விஷ்ணுஸ்வ ரூபாய
ஸ்ருஷ்டி ஸம்ரக்ஷ ஹேதவே
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோதம:

*(5)* உமார்த்த திவ்ய தேஹாய
காருண்ய வருணாலய
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோதம:

*(6)* நமஸ்சுந்தர ரூபாய
சுந்தரீ ப்ராணநாயக
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோதம:

*(7)* நமஸ்தே ஜகதாதர்ர
ஸ்மஸ் ஸரஸி ஜாங்க்ரிணே
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோதம:

*(8)* புத்ரம்தேஹி க்ருபாம்தேஹி
தேஹிஸ்த் பக்தி மேவசி
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோதம:

## 12.8 திருக்கேதீசுவரர் சுசகம்
### [அகத்தியர் பாடியது]

(1) கைலாச வாஸின் கௌரீச
சரணாகத வத்ஸல
ஸ்ரீமத் த்வஷ்டா புராதீச
பாஹிமாம் ஈசுவரப்ரபோ.

(2) கணேச ஸ்கந்த ஜனக
வ்ருஷப வாஹன சங்கர
ஸ்ரீமத் த்வஷ்டா புராதீச
பாஹிமாம் ஈசுவரப்ரபோ.

(3) சாமகான ப்ரியானந்த
சந்த்ர சூர்யாக்னி லோசன
ஸ்ரீமத் த்வஷ்டா புராதீச
பாஹிமாம் ஈசுவரப்ரபோ.

(4) ஸர்வ லோகா னந்தரூப
காலகால வினாசன
ஸ்ரீமத் த்வஷ்டா புராதீச
பாஹிமாம் ஈசுவரப்ரபோ.

(5) ப்ரஹ்ம விஷ்ண் ஸம்ஸ ரூபாத்மன்
பிந்துநாத மயப்ரபோ
ஸ்ரீமத் த்வஷ்டா புராதீச
பாஹிமாம் ஈசுவரப்ரபோ.

(6) ஸச்சிதானந்த ரூபேச
ஷாட்குண்ய பரமேஸ்வர
ஸ்ரீமத் த்வஷ்டா புராதீச
பாஹிமாம் ஈசுவரப்ரபோ.

(7) பசுபாச பரிச்சேத
பசூணாம் நாயகப்ரபோ
ஸ்ரீமத் த்வஷ்டா புராதீச
பாஹிமாம் ஈசுவரப்ரபோ.

(8) காமேச கருணா ஸிந்தோ
காமிதார்த்தப் பலப்ரத
ஸ்ரீமத் துவஷ்டா புராதீச
பாஹிமாம் ஈசுவரப்ரபோ.

(9) நமஸ்தே விஸ்வ ரூபாய
நமஸ்தே விஸ்வநாயகி
நமஸ்தே வாமதேவாய
நமஸ் த்ரிபுர சுந்தரீ.

(10) அபராத ஸஹஸ்ராணி
க்ருதந்தே அஹர் நிஸம்மயா
தாஸோயயிதி மாம் மத்வா
க்ஷம்யேதாம் ஈசுவரீஸ்வரெள.

## *12.9* பொது – துதிப்பாடல்கள்

**விநாயகர்**

*ஐந்து கரத்தனை யானை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்(து)அடி போற்றுகின் றேனே.* 1

**- திருமந்திரம்**

*வெண்ணிற உடையி னானை*
*வியாபகப் பொருளா னோனை*
*வண்ணவிண் மதிமெய் யானை*
*வாகுநான் குடையான் தன்னை*
*ஒண்ணுதல் ஓடை மின்னும்*
*உம்பல்மா வதனத் தானை*
*உண்ணெகிழ்ந்(து) உன்னல் செய்வாம்*
*ஊறெலாம் நீங்கு மாறே.* 2

**- திருக்கேதீச்சரப் புராணம்**

**மகாலிங்கம்**

*முந்தி உலகம் படைத்தாய் போற்றி !*
*மூவர் முதலாய மூர்த்தி போற்றி !*
*அந்தரமும் அலைகடலும் ஆனாய் போற்றி !*
*ஆருயிர்கட் காருயிரேயாவாய் போற்றி !*
*எந்தை பெருமான்எம் ஈசாபோற்றி !*
*ஏத்துவார் இன்னல் களைவாய் போற்றி !*
*பந்தமறப் பறிக்குமகா லிங்காபோற்றி !*
*பாலாவித் தீர்த்தனே ! போற்றி போற்றி !* 3

**- கொழும்பு க. இராமச்சந்திரன் ஆத்மஜோதி கௌரவ ஆசிரியர்**

**திருக்கேதீச்சரர்**

*மலர்மிசை வாழும் வேதன் வான்புவி அளந்த மாயன்*
*குலவரைப் பகைஞன் தேவர் கோதறு கணங்க ளேனோர்*
*நலமிக அருளு கென்றே நாடொறும் வணங்கி ஏத்தப்*
*பலனருள் கேதுநாதன் பங்கயச் சரணம் போற்றி.* 4

**- திருக்கேதீச்சரப் புராணம்**

மணிகொண்ட செழுந்திருப்பாற் கடல் துயிலும்
பசுந்துளப மார்பத் தோனும்
கணிகொண்ட நெட்டிதழ்த்தா மரைப்பொகுட்டினன்
உறை அயனும் கடவு ளோரும்
பணிகொண்ட குவலயமும் பணிந்தேத்தத்
திருநோக்கம் பாலித் தோங்கும்
மணி கொண்ட பெருங்கருணைக் கேதீச்சர
நாதனையாம் அகத்துள் வைப்பாம். 5

**- தனிப்பாடல்**

## கௌரியம்மை

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்(து)
ஒழுகுமிரு கடைக்கண் ணாளை
முரலிள நிலவொழுகப் புழுகொழுக
அழகொழுகு முகத்தி னாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்கு லாளைச்
சீரொழுகும் பதத்தாளை அருணையுண்ணா
முலையாளைச் சிந்தை செய்வாம். 6

**- அருணகிரிபுராணம்**

சீர்மன்னு முத்தொழிற்கு முதல்வியாகித்
திருமணக்கு மாயோ னாதிப்
பேர்மன்னு பண்ணவருக்(கு) அதிகாரப்
பெருநிலைமை பெட்பின் ஈந்தே
நார்மன்னும் அடியார்க்கு நாடோறும்
நலிவகற்றிக் கதிமுன் காட்ட
ஏர்மன்னு பாலாவிக் கரையமர்எம்
பிராட்டியடி இணைகள் போற்றி. 7

**- திருக்கேதீச்சரப் புராணம்**

பன்மணிகள் திரைமோதிப் பரவிவரும் கடற்பரப்பில்
பாலாவிக் கரையில் மாதோட் டத்துத்
தென்னிலங்கைத் திருக்கேதிச் சரத்தானைச் சிந்தனையால்
திசைநோக்கிச் சுந்தரர்சம் பந்தரேத்த
முன்னைவினைப் பயனளிக்கப் பிருகுமுனி மாலியவான்
முன்னின்று போற்றிசெய மறையவரேத்தக்
கன்னியளாய் வீற்றிருந்து கழுபிணிகள் தீர்த்தருளும்
கௌரியம்மை நற்றாயைப் பணிதல் செய்வாம். 8

**- திருச்சி - உறையூர் – மு. ஆ அ. முதலியார்**

**நடராசர்**

ஒருகோடி ரவிஒளியும் ஒருமுக் கண்ணும்
ஓங்குமிளம் பிறைநதிசேர் சடையும் ஊன்றும்
திருமேவு வலப்பதமும் தூக்கும் மற்றைத்
திருவடியும் புலியதளின் உடையும் செய்ய
குருமேவும் அக்கினிக்கை வீசு செங்கை
கோதில்அப யங்கைதம ருகக்கை நான்கும்
உருகுஆர்வத்(து) இடப்பாலின் உமையு மாக
ஒளிருநட ராசனையாம் உன்னு வாமே. 9

**-தனிப்பாடல்**

**தட்சிணாமூர்த்தி**

மும்மலம் வேறுபட்(டு) ஒழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை அலது உளம் சிந்தி யாதரோ. 10

**- திருவானைக்காப் புராணம்**

**சுப்பிரமணியர்**

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி. 11

**-கந்தபுராணம்**

### வைரவக் கடவுள்

தளிரெரி புரையுஞ் சடையணி பிறையன்
தழலன மேனிமுக் கண்ணன்
மிளிர்திரி சூலம் பாசமேற் கபாலம்
விசிதுடி விளங்குநாற் கரத்தன்
களியுறும் அட்ட காசன்முற் றுலகின்
காவலன் மறைஞும லியினான்
வெளிபுனை ஆடை வடுகன்வெம் பூத
வேந்தன் நற் சரண்எமக் கரணே. 12

- திருக்கேதீச்சரப் புராணம்

### சண்டேசுவரர்

புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலந் தக்கனார் அகத்து நாணிய
புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலஞ் சண்டிதன் அடிகள் போற்றுவாம். 13

- திருத்தணிகைப் புராணம்

### சமயகுரவர் - நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி. 14

- சேக்கிழார் புராணம்

### அகத்திய முனிவர்

அரியயற்கு அரிய அண்ணல்
அருள்மொழி சிரமேற் றாங்கி
உரியவான் பொதியம் போந்தே
ஒண்புவி சமஞ்செய்து என்றும்
திருவுறை மாதோட் டஞ்சேர்
சிவனடி சேவை யாற்றித்
திரமுறும் அன்பே கொண்ட
திருமுனி திருத்தாள் போற்றி. 15

- திருக்கேதீச்சரப் புராணம்

### கேதுபகவான்

*சித்திர யானா ! வத்திர ! அத்திர ! செங்கண்ணா !*
*சித்திர துவசா ! சுககர ! சாம்பவ ! சிங்கிக்கோர்*
*புத்திர ! கேசர ! ஆசுர நாயக ! புரநாசன்*
*உத்தம பூசக ! தருகுவை யோமிக உன்னருளே.* 16

**- திருக்கேதீச்சரப் புராணம்**

### வேண்டுகோள்

*மறைகள் நிந்தனை சைவநிந் தனைபொறா மனமும்*
*தறுகண் ஐம்புலன் களுக்கேவல் செய்யுறாச் சதுரும்*
*பிறவி தீதெனாப் பேதையர் தம்மொடு பிணக்கும்*
*உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோடு உறவும்.* 17

*யாது நல்லன்பர் கேட்கினும் உதவுறும் இயல்பும்*
*மாத வத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்*
*ஓது நல்லுப தேசமெய் உறுதியும் அன்பர்*
*தீது செயிலும் சிவன்செயல் எனக்கொளும் தெளிவும்.* 18

*மனமும் வாக்கும்நின் அன்பர்பால் ஒருப்படும் செயலும்*
*கனவிலும்உனது அன்பருக்(கு) அடிமையாம் கருத்தும்*
*நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்*
*புனித! நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும்.* 19

*தீமை யாம்புறச் சமயங்கள் ஒழித்திடும் திறனும்*
*வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா மனனும்*
*ஏமு றும்பர தாரம்நச் சிடாதநல் நோன்பும்*
*தூய்மை நெஞ்சில்யான் என(து) எனாச் செருக்குறாத் துறவும்.* 20

*துறக்க மீதுஉரையினும் நரகில் தோய்கினும்*
*இறக்கி னும்பிறக்கினும் இன்பம் துய்க்கினும்*
*பிறைக்கொ முந்(து)அ ணிசடைப் பெரும ! இவ்வரம்*
*மறுத்தி டா (து)எ னக்குநீ வழங்கல் வேண்டுமால்.* 21

*[இவை நந்தியெம் பெருமான், சிவபெருமானை நோக்கி வேண்டிய பதினாறு வேண்டுகோள் ஆகும்.]*

**-திருவையாற்றுப் புராணம்**

## சிவநாமம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 22


- திருமந்திரம்

## வாழ்த்து

வான்மழை பொழிக ; ஞாலம்
வளம்பல மலிக ; எங்கும்
நான்மறை ஒழுக்கம் சைவ
நன்னெறி நாளும் சிறக்க ;
பான்முறை நன்மா தோட்டப்
பாலாவி என்றும் பெருக ;
மேன்மைகொள் கேதி சர்தாள்
மேவிய அன்பர் வாழ்க. 23

- தனிப்பாடல்

*****


YOU ARE THE PILOT
நீங்கள் தான் விமானி
PILOT YOUR LIFE
உங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்துங்கள்


பகவத் கீதா
தமிழ் மொழிபெயர்ப்பும்
விருத்தியுரையும்
ஸ்ரீ. பொ.
ராமநாதன்

ISBN 978-955-38573-1-6

©2018 A.Skandaraj